15273.

உ
சிவமயம்.

# திருக்களர் வைபவம்.

இஃது
கருப்புக்களர்
திருவருள், சுப்பைய சுவாமிகள்
மாணாக்கர்களில் ஒருவராகிய

திருக்களர்
**மு. சுவாமிநாத மாதவராயர்**
எழுதியது.

திருவாரூர்—விஜயபுரம்
கருணாநிதி (பில்டிங்ஸ்) பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.
1936.

AC NO: 15273
Q: 1: 38

164

## பிழை திருத்தம். 32/1

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| உ | உ௩ | வட்டிபைக்கொண்டு | வட்டியைக்கொண்டு |
| உஉ | உ௭,உ௮ | சேக கண்டி | சேகண்டி |
| உ௫ | உ | பராபரமெ | பராபரமே |
| ,, | உ௭ | றெவயமே | றெய்வமே |
| ௩௰ | ௰ | 1902-ம | 1902-ம் |
| ௩௫ | உ௪,உ௫ | அரிக்கியவட்டகைகள் | அருக்கியவட்டகைகள் |
| ௪௧ | உ௪ | இராசமுதலியார் | இராசு முதலியார் |
| ௪௬ | ௧௬ | கொண்டிருந்தாா. இவா | கொண்டிருந்தார். இவர் |
| ௪௭ | ௩௰ | விருத்திப்பண்ணி | விருத்திபண்ணி |
| ௪௯ | ௧௭ | காமாபூங் | காமர்பூங் |
| ௫௰ | ௫ | எனற வரிசையாகவும் | என்றவரிசையாகவும் |
| ௬௧ | உ௮ | ஐபஞர் | ஐயஞர் |
| ௬௭ | ௭ | லெண்ணிவிந்திரர் | லெண்ணிலிந்திரர் |
| ,, | ௧௯ | முவரி | மூவரி |
| ,, | ௩௰ | மரல்பலர் | மால்பலர் |
| ௭௪ | உ௯,௩௰ | சஙகரநாராயணர் | சங்கரநாராயணர் |
| ௭௯ | ௫ | இ மன் | இயமன் |
| ௮௯ | உ௮ | பெருதற்கரிய | பெறுதற்கரிய |
| ௯௮ | உ௬ | செப்வித்தார் | செய்வித்தார் |
| ௯௯ | ௧ | பிறசுரித்திருந்ததைத் | பிரசுரித்திருந்ததைத் |
| ௱௯ | ௰ | கட்டிடங்களெலலாம் | கட்டிடங்களெல்லாம் |

32/1

உ

சிவமயம்.

# திருக்களர் வைபவம்.

காப்பு.

மாமலர்க் கோதை நாளு மகிழ்திருக் களருள் வைகுந்
தேமல ரிதழி வேய்ந்த செஞ்சடைக் கடவு ளோர்பாற்
காமர்பூங் கொம்ப ரீன்ற வலம்புரிக் களிற்றின் வண்ணத்
தாமரை புரையுஞ் செம்பொற் றாளிணை வணங்கல் செய்வாம்.

## தலம்.

கடல் புடை சூழ்ந்த நெடுநில வுலகிலே, தண்டமிழ் மண்டலத்திலே, எண்ணிறந்தகோடி திருத்தலங்களுளொன்றாயும்; மூவரருளிய தேவாரத் திருப்பதிகங்கள்பெற்ற திருத்தலங்களு ளொன்றாயும்; தேவாரத் திருப்பதிகமுடைய (உஎரு) இருநூற்றெழுபத்தைந்து திருத்தலங்களுள் (எ) எழு நீங்கலாக, (உசுஅ) இருநூற்றறுபத்தெட்டுத் தலங்களுளொன்றாயும்; சோழவளநாட்டில் தேவாரத் திருப்பதிகமுடையனவாய் விளங்கும் (ககூக) நூற்றுத்தொண்ணூற்றொரு தலங்களுளொன்றாயும்; காவிரி நதிக்குத் தென்புறந் தேவாரமுடையனவாய் விளங்கும் (கஉஅ) நூற்றிருபத்தெட்டுத் தலங்களு ளொன்றாயும்; திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிய ஒவ்வொரு திருப்பதிக மாத்திரமுடையனவாய் விளங்கும் (க0ரு) நூற்றைந்து தலங்களு ளொன்றாயும் விளங்காநின்றது. (இத்தலம் தஞ்சாவூர் சில்லாவிலே, மன்னார்குடி-

தாலுகாவிலே, திருத்துறைப்பூண்டி இரயிலுக்கு சிறிது வடமேற்கிலே, கரைமார்க்கம் 5 மைல் தூரத்திலும், திருத்துறைப்பூண்டி மன்னார்குடி சாலைமார்க்கத்தில் திருப்பத்தூர் பாலத்துக்குத் தெற்கிலே, சாலைமார்க்கம் 2½-மைல் தூரத்திலுமிருக்கிறது.

## சிலா சாதனம்.

இத்திருக் கோயிலில் "குலோத்துங்க சோழதேவர், இராசராச தேவர், இராசேந்திர சோழதேவர், குலசேகர தேவர், வல்லப தேவர், வீரபூபதி உடையார், விருப்பண்ண உடையார், வீரவிருப்பண்ண உடையார்" என்னும் அரசர்கள் காலங்களில் கல்லில் வெட்டிய (கஉ) பன்னிரண்டு சிலாசாதனங்களிருந்தன. அச்சிலாசாதனங்களினால் "திருக்களர், வேங்கூர், பண்ணியூர், பரம்பை (கரம்பை) க்குடி, பஞ்சநதவாண (சந்தண) நல்லூர், பள்ளிச்சந்தம், செல்வ (செல்ல) பிள்ளையார் கோட்டகம், பெரும்பல (பெருவட) மருதூர், திருச்சிற்றம்பல (சீலத்த) நல்லூர், சோழனுக்கு நல்லூர் (சோலைக்குளம்)" என்னுங் கிராமங்களில் சுமார் (௩OO) முந்நூறு வேலி நிலங்களும்; 'நாளொன்றுக்கு உரியேயாழாக்கு' எண்ணெய் வீதம் சந்திர சூரியருள்ள வரையுந் திருவிளக்கெரிக்கைக்கு எண்ணெய் வட்டிக்குக் கொடுத்து வாங்கும்பொருட்டு, காசிருப்பாக அக்காலத்திய காசு (உசுO) இருநூற்றறுபதும்; திருப்பணி சந்திராதித்தருள்ளவரையும் வட்டிபைக்கொண்டு செய்யும்பொருட்டு பணவிருப்பாக அக்காலத்திய வெள்ளைப் பணம் (உOO) இருநூறுமிருந்தனவென்று தெரியவருகின்றன. அன்றியும் 'பரிசாரகர், பூசகர்' என்பவர்களுக்கு சந்திராதித்தருள்ள வரையும் பூசை செய்யும்பொருட்டு, மானியங்கள் கொடுக்கப்பட்டிருந்தனவெனவுந் தெரியவருகின்றன. சோழர்

களுடைய ஆட்சிக்குப் பின்பு மேற்படி 'நிலங்கள், காசு பணம்' என்பவற்றை பலர் கைப்பற்றிக்கொண்டார்கள். 1879-ம் வருடத்திய சர்வே கணக்குப்படி "திருக்களர், இனும் கிழப்புத்தூர், திருச்சிற்றம்பல (சிலத்த) நல்லூர், சோழனுக்கு நல்லூர் (சோலைக்குளம்), வேழைக்கார் நல்லூர், குமாரமங்கலம், விளக்குடி, குறுக்கை" என்னும் கிராமங்களில் நன்செய் புன்செய் ஏக்கர் 185 செண்ட் 6 நிலங்கள் மாத்திரமிருக்கின்றன.

## செப்பேட்டுச் சாதனம்.

இக்கோயிலில் 'கடாரங்கொண்ட இராசேந்திரசோழ தேவர், குலோத்துங்கசோழதேவர், இராசராசதேவர், மதுரையும் ஈழமுங் கருவூரும் பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளிய குலோத்துங்க சோழதேவர்' என்னும் அரசர்கள் காலங்களில் செப்புத்தகடுகளில் வெட்டியுள்ள 'செப்புப்பட்டயம்' என்னும் (ச) நான்கு செப்பேட்டுச் சாதனங்களிருந்தன. அச்சாதனங்களினால் சந்திரசூரியருள்ளவரையும் அமாவாசிதோறும், சுவாமி எழுந்தருளப் பண்ணுகைக்கு திருவமுதுக்கு நெற்கலம் (3¾) மூன்றே முக்கால் வீதங் கொடுத்துவரும்பொருட்டு, கலம் ஒன்றுக்கு முக்குறுணிவாசிக்குக் கொடுத்து வாங்கும்படி நெல்லிருப்பாக, அக்காலத்திய கலம் (சஅ0) நூற்றெண்பதும்; மகாலிங்கத்துக்கு –' திருக்கோளகை (க). பதினாறு பொற்பூதிருவொதாரமாலை (க), திருவுத்தரியம் (க), திருப்பிறை (க) திருவாசிகை (க), திருப்பாம்பு (க)' தேவியாருக்கு–' திருக்கன்னபுட்பம் (உ) திருப்பட்டிகைப்பலகையாகிய முலைக்கச்சு (க), பொற்பூ (க), திருப்பட்டம் (க), திருமங்கலநாண் சமதாலி கொக்குவாய் (க)' பள்ளியறை நாச்சியாருக்கு– 'சிவதாலி சமமணி (க)' உற்சவருக்கு –' அபிடேகமாகிய

கவசம் (க), திருவாரம் (க), திருத்தோடு (உ)' உற்சவ தேவியாருக்கு – அபிடேகமாகிய கவசம் (க) 'திருவாரம் (க), திருத்தோடு (உ), இருபத்துநான்கு திருவட்டமணிவடம் (க), முப்பது திருவட்டமணிவடம் (க), நாற்பது திருவட்ட மணிவடம் (உ), திருச்சிலம்பு (உ)' நிறைதவஞ்செய்த நாச்சியாராகிய தனியம்பாளுக்கு –' அபிடேகமாகிய கவசம் (க), நாற்பத்தொரு மணித்தாவடம் (க), திருநெற்றித் திரணை (க), திருக்கைச்சரியாகிய கைவளை (ச), வெள்ளிக் காறையில் கோர்த்த திருத்தாலி (க), திருத்தோடு (உ), திருவாரம் (க), சிரச்சக்கரம் (க), திருக்கண்டாவளி (உ), முப்பத்தைந்து வெள்ளிமணிக் கோர்வை (க)' உடையாருக்கு – திருமஞ்சனத்துக்குச் சாத்தியருள 'திருவுத்தரியம் (க)' என்பனவாகிய தங்கத் திருவாபரணங்களுமிருந்தன வென்று தெரியவருகின்றன. இவைகள் யாவும் சோழர் களுடைய ஆட்சிக்குப்பின்பு நாளடைவிலே பலர் கைப்பற் றிக்கொண்டார்கள். கடைசியாக 'திருமங்கல நாண் சமதாலி கோக்குவாய்' திருவாபரணமாத்திரமிருந்தது. அதுவும் 6—3—32ல் திருட்டுப்போயிற்று.

## தேவாரம்.

'திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர், திருநாவுக்கரசு நாயனர்' என்னும் சைவசமய குரவர்களிருவரும் திருவீழி மிழலையினின்று, பல தலங்களை வணங்கிக்கொண்டு, இத் தலத்தின் வழியாக 'திருமறைக்காடு' என்னுந் திருத் தலத்திற்குச் சென்றபோதும்; திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் பாண்டிநாட்டினின்று, இத்தலத்தின் மார்க்கமாகத் திருப்பாதாளீச்சுரத்துக்குச் சென்றபோதும் திருவாய் மலர்ந்தருளிய தேவாரத் திருப்பதிகங்களில் திருஞான

சம்பந்தமூர்த்தி நாயனர் அருளிச்செய்த ஒரு திருப்பதிக மாத்திரமிருக்கிறது. அப்பதிகத்துள் முதற் பாசுரத்தில் 'நீருளார்கயல் வாவிசூழ்போழி னீண்டமாவய லீண்டுமாமதிற்,—றேரிஞர் மறுகில் விழாமல்கு திருக்களர்' எனவும்; இரண்டாம் பாசுரத்தில் 'தோளின்மேலோளி நீறுதாங்கிய தோண்டர் வந்தடி போற்றமிண்டிய,—தாளிஞர்வளருந் தவமல்கு திருக்களருள்' எனவும்; மூன்றும் பாசுரத்தில் 'பாடவல்லநன் மைந்தரோடு பனிமலர்பல கோண்டுபோற்றிசெய்,—சேடர்வாழ் போழில்சூழ் சேழுமாடத்திருக்களருள்' எனவும்; நான்காம் பாசுரத்தில் 'அம்பினேர்தடங் கண்ணிஞருட ஞடவர்பயின் மாடமாளிகைச்,-சேம்போஞர் போழில்சூழ்ந் தழகாய திருக்களருள்' எனவும்; ஐந்தாம் பாசுரத்தில் 'கோங்குலாமலர்ச் சோலேவண்டினங் கிண்டிமாமது வுண்டிசைசெயத்,—தேங்கு பைங்கமுகம் புடைசூழ்ந்த திருக்களருள்' எனவும்; ஆறும் பாசுரத்தில் 'கோலமாமயி லாலக்கோண்டல்கள் சேர்போழிற் குலவும் வயலிடைச்,— சேலிளங் கயலார் புனல்சூழ்ந்த திருக்களருள்' எனவும்; ஏழாம் பாசுரத்தில் 'திகழ்கின்ற திருக்களருள்,—வம்பலர்மலர் தூவிநின்னடி வானவர்தோழக் கூத்துகந்தபே, ரம்பலத்துறைவா' எனவும்; எட்டாம் பாசுரத்தில் 'குன்றடுத்தநன் மாளிகைக்கோடி மாடநீடுயர் கோபுரங் கண்மேற்,— சேன்றடுத்துயர்வான் மதிதோயுந் திருக்களருள்' எனவும்; ஒன்பதாம் பாசுரத்தில் 'பண்ணியாழ்டயில் கின்ற மங்கையர் பாடலாடலோ டாரவாழ்பதி,—தேண்ணிலா மதியம் போழில்சேருந் திருக்களருள்' எனவும்; பத்தாம் பாசுரத்தில் 'பாக்கியம்பல சேய்தபத்தர்கள் பாட்டோடும்பல பணிகள் பேணிய,— தீக்கியல் குணத்தார் சிறந்தாருந் திருக்களருள்' எனவுந் தலத்தின் சிறப்பை விளக்கி யருளப்பட்டிருக்கின்றன. திருநாவுக்கரசு நாயனர் அருளிச்செய்த திருட்சேத்திரக்கோவைத் திருத்தாண்டகம் ஆறும் பாசுரத்தில்

'களர்' என்று கூறியருளப்பெற்றிருக்கிறது. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் புராணம் ௲௯௬-ம் பாட்டில் 'கனக மதிள் திருக்களரும்' எனவும்; மேற்படி புராணம் அ௯௬-ம் பாடலில் 'கன்னிமதில் திருக்களரும் போற்றி' எனவும்; திருப்பதிகக்கோவை ௬-ம் பாடலில் 'நற்றிருக்களர்' எனவும்; திருப்பதிக்கோவை அ-ம் பாடலில் 'சேலாருந்திருக் களர்' எனவுந் தலத்தின் பெருமை விளக்கப்பட்டிருக்கின் றன. ஏனைய திருப்பதிகங்க ளிறந்தொழிந்தனபோலும்.

## தலபுராணம்.

இத்தலத்தின் மகிமைகளை திருநந்திதேவர் சனற்குமார முனிவருக் குரைத்தருளியபடியே சூதமகா முனிவர் 'அனு கூலச்சருக்கம், பாரிசாதவனச்சருக்கம், நிருத்தச்சருக்கம், பஞ்சாக்கரச்சருக்கம், மாலாதாரகச்சருக்கம், மகாரதன் புத்திரப்பேற்றுச் சருக்கம், தீர்த்தமான்மியச் சருக்கம்' என்னும் ஏழு சருக்கங்களாக சௌனகாதி முனிவர்களுக் குரைத்தருளினர். தருமபுரம் ஆதீனத்தில் குருமூர்த்தமா யெழுந்தருளியிருந்த 'அழகியசிற்றம்பல தேசிகர்' என்பவ ருடைய மாணுக்கர்களுளொருவரும், அக்காலத்தில் இத் தலத்திற் கட்டளைத்தம்பிரானுயிருந்தவருமாகிய 'சரவண தேசிகர்' கட்டளையிட்டருளியவாறு, திருக்களந்தை (களப்பாள்) 'ஆதியப்பப்புலவர்' தமிழில் ௬௯௬-செய்யு ளாகப் பாடியருளினர்.

*கருணைமிகு நந்தியுரைப் படிசூத மாமுனிவன் கழறு மாறே, தருமைவரு மழகியசிற் றம்பலசற் குருவருளே தரித்து நாளு, முருகனெனக் கலையுணர்ந்த சரவணமா முனியருளான் மொழி கென்றேத, விருநிலத்தி லுயர்களந்தை யாதியப்பன் பசுந்தமிழா லியம்பல் செய்தான்.*

(தலபுராணம்.)

இப்புராணத்தை 'மு. சுவாமிநாத உபாத்தியாயர்' என்பவர் பின்னத்தூர் திருவருட் பெரும்புலவர் சிகாமணி யாய் விளங்கிய 'அ. நாராயணசாமி ஐயர்' அவர்கள் மூல மாகப் பரிசோதனை செய்து, 1902-ம் வருடத்தில் அச்சிற் பதிப்பித்து 'வீரசேகரமகாமுனிவர், நகரவணிகக் கனதன வான்கள்' முதலிய எல்லோருக்கும் இனமாகக் கொடுத் தார். அன்றியும் 1910-ம் வருடத்தில் 'திருக்களர்ச்சார சங்கிரகம்' என்னும் புத்தகத்தையும்; 1912-ம் வருடத்தில் 'மேற்படி புராணம்' இரண்டாம் பதிப்பையும்; 1933-ம் வருடத்தில் 'திருக்களர் விளக்கம்' என்னும் புத்தகத்தை யும்; 1934-ம் வருடத்தில் 'திருக்களர் விளக்கம் 2, 3, 4-ம் பாகங்கள் அநுபந்தம்' என்னும் புத்தகத்தையும் அச்சிற் பதிப்பித்து இனமாகப் பலர்களுக்குங் கொடுத்தார்.

சுவாமி பெயர்:—சிலாசாதனஞ் செப்பேட்டுச் சாதனங் களில் 'அடைந்தார்க் கருள்செய்த நாயனர், திருக்களர் முளைத்ததேவர், திருக்களர்முளைத்தவுடையார், திருக்கள ருடைய மகாதேவர், திருக்களருடைய நாயனர், திருக் களர்முளைத்த மகாதேவர், திருக்களர்முளைத்த நாயனர்' எனவும்; அடங்கன் முறையில் 'களர்முளை நாதர்' என வும்; 'சிவட்சேத்திர சிவநாமக்கலிவெண்பா, சிவட்சேத்திர விளக்கம்' என்பவற்றில் 'களர்முளை யீசுரர்' எனவும்; சிவதலமான்மியச்சுருக்கத்தில் 'களரிளமுளை யீசுரர்' என வும்; 'சிவதலமஞ்சரி, சிவட்சேத்திரயாத்திரை விளக்கம்' என்பவற்றில் 'களர்முளைநாதேசுரர்' எனவும்; தலபுரா ணத்தில் 'பாரிசாதவனேசுரர், தருவனேசுரர், கற்பகவனே சுரர், மந்தாரவனேசுரர்' எனவுங் காணப்படுகின்றன. 'அடைந்தார்க்கருள்செய்த நாயனர்' என்பதை தேவாரப் பாசுரங்கள் 'அடைந்தார்க்கருளாயே' என்று ஆமோதிக் கின்றன.

தேவியார் பேயர்:—' அடங்கன்முறை, சிவட்சேத்திர சிவநாமக்கலிவெண்பா, சிவதலமான்மியச்சுருக்கம் ' என்பவற்றுள் ' இளங்கொம்பன்னாள் ' எனவும் ; சிவட்சேத்திர விளக்கம், சிவதலமஞ்சரி, சிவட்சேத்திர யாத்திரைவிளக்கம்' என்பவற்றுள் ' அழகேசுரி ' எனவும் ; தல புராணத்தில் ' அமுதவல்லி ' எனவுங் காணப்படுகின்றன.

## துருவாச மகாமுனிவர் திருப்பணி.

துருவாச மகாமுனிவர்—இவர் சைவசமய முதற்குரவராய்த் தோன்றியவர் ; தமக்கு ஒப்பாருமிக்காருமில்லாதவர் ; தமக்குத்தாமே யொப்புடையவர் ; தவமே திருவுருவாய்த் தோன்றியவர் ; இயமனுக்குத் தப்பினுலுந்தப்பலா மிவருடைய கோபசாபத்திற்குத் தப்பவேமுடியாது ; இவர் பெயரைக் கேட்டவுடன் பேய்களெல்லாம் பறந்தோடிப் போகும் ; இவர், தற்காலத்தில் ' மனைவி மைந்தர்களிடத்தில் கோபித்துக்கொண்டும், சம்பாதிக்கச் சக்தியில்லாமலும், ஐவேசியில்லாமலும், கடனை மோசஞ்செய்யும்பொருட்டும், வாரண்டுக்குப் பயந்தும், சோம்பேறியாய்த் திரிந்தும் ' பொய்த்துறவாகிய புறத்துறவுபூண்டு ' மண், பொன், பெண்' என்னும் பேய்களைத் தூக்கிக்கொண்டு வயிற்றுச்சோற்றுக்கு வயல்களைக் கோலிப்பார்க்கின்ற குருட்டுச் சந்நியாசிகளைப் போன்றவரல்லர்.

உலகந்தோன்றிய காலந்தொடங்கி ஒப்பற்ற தெய்வீகம்பொருந்திய புண்ணியத்தலமாய் விளங்கும் இத்தலத்தில் ஆதியிலமைக்கப்பெற்றிருந்த திருக்கோயில் சிதைவுற்றுக் கானகமாயிற்று. துருவாச மகாமுனிவர் தேவருலகிலிருந்து, பாரிசாத விருட்சங்கொணர்ந்து, அதைப் பூமியில் தாபித்து, அதன்கீழ்பால் ஒரு தீர்த்தமுண்டுபண்ணி, அத்தீர்த்தத்தின் மணலினல் அவ்விருட்சத்தினடியில்

'இலிங்கம்' அமைத்துப் பூசித்து, தேவகம்மியனுகிய மயனை வரவழைத்து, திருக்கோயிலமைத்து, 'விநாயகர், முருகர், சோமசுந்தரர், நிறைதவஞ்செய்த நாச்சியார், சண்டேசுரர்' முதலிய உற்சவ மூர்த்திகள், ஒன்பது உருவுளையு மிரந்த்ரமுமுடைய மகாரதம் முதலியன அமைத்து, சித்திரை மாசம் பூர்வபக்கம் மிருகசிரிடத்தில் இடபக் கொடியேற்றி அத்தத்தில் மகாரதமும், சித்திரையில் தீர்த்தமுமாகப் பத்துநாள் பிரமோற்சவம் நடத்தியருளினர். இவற்றிற்குப் பின்வருந் தலபுராணச் செய்யுட்களே தக்க சான்றாகும்.

அளவில் போகத் தொடுபோத மருளு மிடனு யணிமேவி
யொளிபெற் றரிய புண்ணியகேத் திரமா யுயரித் தலமதனிற்
றெளியும் விரதத் துருவாச னிமையோ ருலகிற் சென் றணைந்து
மிளிருங் கனகப் பூந்தருவை மேனுட் கொணர்ந்திங் கமைத்
[தனனுல்.

வேறு

இமையவர் தன்மை யெய்திய முனிவ
னித்தரு வமைத்திடு முன்னுங்
கமையுறு புவியி லுத்தம தலமக்
கற்பக வனமுறுந் தான
மமையுமத் தலத்தி லத்துரு வாச
னரன்றிருப் பூசனை கருதி
நமரெலா முய்யத் தன்றிருப் பெயராற்
றீர்த்தமொன் ருக்கின னயப்பால்.

அந்தநற் றீர்த்த வேலையிற் புனித
மாமிருத் திகைதனைக் கொணர்ந்து
கொந்தவிழ் பசும்பொற் பூந்தரு வடியி
னுன்மறை கூறிய விதியாற்
றந்தவே திகையின் மணலினு லிலிங்கந்
தனைவகுத் தாகமந் தவறு
திந்திரன் பரவு பரமனைத் தாபித்
தியற்றினன் பூசனை யினிதின்.

ஏலவார் குழலி பாகனுக் காளா முனிவர னின்னவா றெழு குங், காலையி லொருநாண் மயனெனுந் தெய்வ கம்மியன் றனை வர வழைத்து, மாலிரு டரக்கும் விளங்கொளிப் பசும்பொ னனவ மணிநிறை குயிற்றி, யாலமுண் டிருண்ட கண்டனுக் கினிதி னலய மியற்றென வறைந்தான்.

வேறு

ஆயசொற் றலைமேற் கொண்டாங் கமரர்கம் மியனு மோங்கி
மீயுயர் பாரி சாத வனநாப்பண் விமலன் வைகப்
பாய்கதிர்ப் பரிதி கோடி யுதயமால் வரையின் பாங்கர்ச்
சேயொளி விரிக்கு மாபோற் செம்பொனின் விமானஞ் செய்தான்.

இப்பரி சியற்றி யீசற் காலய மிதனுள் வெவ்வே
றுப்பிலங் கரன்வேள் கால வயிரவ னெடுதண் டீச
னெப்புவி களுக்குங் கண்ணு மிரவியோ டங்கத் தேவர்
செப்பிய திசையின் பால ரிவர்க்குமா லயங்கள் செய்தான்.

வேறு

ஐங்கரன் முதலாம் வானவர் சோமாக்
கந்தன்மற் றெவர்க்குமா முறையாற்
பொங்கெழிற் படிவம் பலபல வகுத்துப்
பதிட்டையும் புரிந்துபுங் கவற்குச்
செங்கதி ராழி யொன்பது மிரந்த்ர
மொன்பதுஞ் சிறப்பவொன் பதுகாற்
றங்குமா மணித்தேர் மானிடப் பிரமா
ணப்படி சமைத்தனன் பின்னு.

சித்திரை மதியில் வளர்பிறைத் திதியின்
மான்றலை நாளெனுந் தினத்தி
லுத்தம வமையத் தங்குரார்ப் பணபூ
ருவமுத லாப்புரிந் துவப்பாய்
முத்தல மதிக்கு நான்மறை முழங்கத்
தேவதுந் துபிமுறை முழங்க
வெத்தரா தலமும் புகழ்தரு வனேசற்
கெழில்பெற விடைக்கொடி யேற்றி.

பாதலத் துரக னுயிரஞ் சுடிகைப்
பன்மணிக் கற்றைகான் றிலங்க
வாதவன் புரவி யிரதமுந் தலைசாய்த்
தயர்வுற முனமயன் வகுத்த
மேதகு கனகக் கொடிநெடுந் தடந்தேர்
விழாவுமாங் கயர்ந்துசித் திரையா
மோதுநாண் மகிழ்வாற் றீர்த்தவுற் சவமு
மொளிபெற வாற்றியங் குவந்து.

அடைந்த வர்க்கருள் பாரிசா தவனத்தி
லானுறை யாலய முன்ன
ரிடந்து மேற்றுரு வாசனுக் கியதுவா
னிமையவர் முதலினோ ரெவரும்
படர்ந்து சூழ்வது லோகலோ காக்கிய
மெனும்பெயர் பரித்ததோர் தீர்த்த
மிடங்கொ ளப்பெருந் தீர்த்தத்தி னண்பக
லெய்தியங் கதனிடை மூழ்கி.

## சபாநாயகப்பெருமான் றிருநடனம்.

சிவபெருமான்—வலதுகாலாகிய வாசியினால் 'முயலகன்' முதலிய உடற்பிணிகளெல்லாவற்றையுங் கொன்று, அரோக திடகாத்திரமாக வாழலாமென்பதற் கறிகுறியாக வலக் காலின்கீழே 'முயலகன்' என்பவனைக் குப்புறப்போட்டு மிதித்தும்; இடதுகாலாகிய வாசியினால் இயமனாகிய காலனைக் கொல்லலாமென்பதற் கறிகுறியாக இடதுகாலைத் தூக்கிக் காலனை யுதைப்பதுபோற் காட்டியும்; அக்கினி சான்றாகக் காலாகிய வாசியினால் காலனை யுதைக்கலாமென் பதற் கறிகுறியாக ஒரு திருக்கரத்தில் அக்கினி யேந்தியும்; காலாகிய வாசியை மேலே தூக்கிக் காலனையுதை யென்பதற் கறிகுறியாக தூக்கியகாலை ஒரு திருக்கரத்தினால் சுட்டிக் காட்டியும்; காலமாகிய காலனுக்கும் பிறவிப் பிணியாகிய பெருநோய்க்கும் பயப்படவேண்டாமென்பதற் கறிகுறியாக

ஒரு திருக்கரத்தை அபயமாக நிறுத்தியும்; எமது பேரானந்தப் பெருந்தாண்டவத்தைத் தரிசித்து, உண்மையையுணர்ந்துய்மின்க ளென்பதற் கறிகுறியாக ஒரு திருக்கரத்தினுல் 'சிற்றுடுக்கு' என்னும் 'தமருக' ஒலி முழக்கியும் 'சபாநாயகராய்' துருவாச மகாமுனிவர் முதலியோர் முன்னிலேயில் மாசிப்பூரணை தொடங்கி (௩௬௫) முந்நூற்றறுபத்தைந்து வருடம் (ஒரு தேவ வருடம்) ஆநந்த தாண்டவஞ் செய்தருளினர். மாசி மாசம் பூரணையில் சபாநாயகப்பெருமானைத் தரிசனஞ் செய்வோர் பாவங்களெல்லாம் நீங்கிப் பரகதியடைவர். இத்தலம் 'பிறந்தோர், இறந்தோர், தரிசித்தோர், நினைத்தோர்' என்னும் நால்வகையோருக்கும் முத்தியளிக்கும் முதுநகராய் விளங்குவதால் 'திருவாரூர், திருவாரணசி (காசி), திருத்தில்லை (சிதம்பரம்), திருவருணை (திருவண்ணுமலை)' என்னும் நான்கு திருத்தலங்களுக்கும் ஒப்பாகியது. இத்தலத்துக்கு எத்தலமும் ஒப்புடையதன்று. 'ஆணவம், மாயை, காமியம்' என்னும் மும்மலங்களையும் போக்கி; 'நல்வினை, தீவினை' என்னும் இருவினைப் புணர்ச்சியையும் நீக்கிப் பேரின்ப நல்கும் பெருந்திருத்தலமாம். 'குருபத்தினியைப் புணர்தல், மறையோரை வதைசெய்தல்; பெண்களைக் கொலை செய்தல், குழந்தைகளைக் கொல்லுதல், நன்றி மறத்தல்' என்னும் அதிபாதகங்களை அகற்றி, அருந்தவந்தரும் சிறந்த திருப்பதி. சபாநாயகப் பெருமானைத் தரிசிப்போர் ஆநந்ததாண்டவந்தரிசித்த பலனைப் படைவர். இப்போது கூறியவற்றையெல்லாம் பின்வரும் தலப்புராணச் செய்யுட்களால் அறியலாகும்.

*முகிழ்விரி யிதழி வேய்ந்த புரிசடை முதல்வ னின்ன*
*தகையவாங் கனகப் பைம்பூந் தருவனச் சபையி னுப்ப*
*ணகிலமு முனிவர் விண்ணே ரனைவரு மன்பி னேக்கி*
*மகிழ்வுற நிருத்தந் தெய்வ வருடமட் டளவுஞ் செய்தான்.*

அண்டராண் டளவுந் தாண்ட வம்புரி யண்ணல் பின்ன
ரெண்டரு மனத்தாற் றியானித் திடுந்துரு வாசன் காமத்
தண்டிரைப் பரவை நீத்த தவமுனி வரையு நோக்கிக்
கண்டிரோ வெமதா னந்த நடமெனக் கழறி னானால்.

கும்பமா மதியில் வைகும் பூரணைத் திதியிற் கோமா
னம்பிகை யோடு மிப்பே ரம்பலத் தாடல் மேவு
நம்புமத் தினத்தின் மாலைப் பொழுதினி னயந்து சேவித்
தெம்பெரு மானைப் போற்றில் விசேடமென் றியம்ப லாமால்.

கமலையிற் பிறந்து மேலாங் காசியி லிறந்துங் கண்ணு
லமைவுறு பசும்பொற் றில்லை யம்பலங் கண்டு மன்பாய்
விமலன்வா ழருணை நாளு முன்னியும் வீடு காண்பார்
சமைதிருக் களருள் யாதொன் றியற்றினு முத்தி சார்வார்.

அலர்தலைப் புவன மீதிற் சிவபதி யனைத்தி னுந்தண்
மலர்விரி பாரி சாத வனமுதற் றலமாம் யார்க்கும்
புலைமல மூன்றும் போக்கி யிருவினைப் புணர்ச்சி நீக்கி
தொலைவில்பே ரின்ப நல்குந் தூயவீ டளிக்கு மாதோ.

விருப்புறக் குருவின் றாரம் விழைந்தன ரேனு மாறுச்
செருக்கினன் மறையோர் பாலர் தெரிவையர்ச் செகுத்தா ரேனு
முருத்தெழுந் தொருவன் செய்த வுதவியைக் கொன்றா ரேனுந்
திருக்கள ரடைந்தா ராயிற் றேவர்க்குந் தேவ ராவார்.

பாரிலின் றாதி யாகப் பாரிசா தவனத் தோங்குஞ்
சீரிய முழுமா ணிக்கச் சிற்சபை தெரிசித் தோர்கள்
சார்வரு மெமதா னந்தத் தாண்டவந் தரிசித்தார் போற்
றேரில்யா ரேனு மெய்தாச் சிவகதி யடைவர் திண்ணம்.

## பஞ்சாக்கர உபதேசம்.

பஞ்சாக்கரம் என்பது 'நகாரம், மகாரம், சிகாரம், வகாரம், யகாரம்' என வைந்தாம். இவ்வைந்தையும் முறையே 'திரையெழுத்து, மலவெழுத்து, இறையெழுத்து, பரையெழுத்து, ஆன்மவெழுத்து' என்பர். இவ்

வைந்தும் முறையே கூடியது கடவுளுடைய திருநாமமாம், பிரணவம் என்பது 'உகாரம், அகாரம், மகாரம்' என்னு மூன்றுமாம். இம்மூன்றும் முறையே கூடியது கடவுளுடைய திருமேனியாகிய ஓங்காரமாம். அம்சம் என்பது 'சம்யம்' இதனைச் சாந்தயாந்த மெனவுங் கூறுவர்.

முருகக்கடவுள் 'மார்கழி மாசம், பூர்வ பக்கம், சட்டித்திதி, சதைய நட்சத்திரம், வியதிபாதங்' கூடிய தினத்தில் துருவாசராதி அறுபதினாயிரம் முனிவர்களுக்கும் ஒரே காலத்தில் பதினாயிரம் பெயருக்கு ஒருமுகமாக அறுமுகத்தாலும் 'திரையெழுத்து, மலவெழுத்து, இறையெழுத்து, பரையெழுத்து, ஆன்மவெழுத்து' இவ்வைந்தும் முறையே கூடியது 'மோட்சம்' அளிக்கும் எனவும்; 'பிரணவம், திரையெழுத்து, மலவெழுத்து, இறையெழுத்து, பரையெழுத்து ஆன்மவெழுத்து' இவ்வாறும் முறையே கூடியது 'போகமோட்சம்' நல்கும் எனவும்; 'சம், யம், பிரணவம், திரையெழுத்து, மலவெழுத்து, இறையெழுத்து, பரையெழுத்து, ஆன்மவெழுத்து' இவ்வெட்டும் முறையே கூடியது 'காமியம்' அளிக்கும் எனவும்; 'சம், யம், சம், யம், பிரணவம், திரையெழுத்து, மலவெழுத்து, இறையெழுத்து, பரையெழுத்து, ஆன்மவெழுத்து' இப்பத்தும் முறையே கூடியது 'வறுமை' போக்கும் எனவும்; 'சம், யம், சம், யம், சம், யம், பிரணவம், திரையெழுத்து, மலவெழுத்து, இறையெழுத்து, பரையெழுத்து, ஆன்மவெழுத்து' இப்பன்னிரண்டும் முறையே கூடியது 'நன்மைநல்கி வசிகரம்' ஆக்கும் எனவும் அனுக்கிரகஞ் செய்தருளினர். முருகக்கடவுளுக்கு "மார்கழி மாசம் பூர்வபக்கம் சட்டித்திதி, மாசி மாசம் பூர்வபக்கம் சட்டித்திதி, கார்த்திகை நட்சத்திரங்கள், வெள்ளிக்கிழமைகள்" என்பவற்றில் அபிடேகாதிகள் செய்விப்போர் விரும்பியபேற்றை யடைவர்.

பதமிகுந் தனுமா தத்திற் சுக்கில பக்கத்தாருந்
திதிபுனற் கிறைநாள் கூடிற் கதியரு டினம தாகும்
வதியுமத் தினத்தின் மேவுங் குகனெழுத் தைந்தும் வாய்த்த
விதியினு னுங்கட் கெல்லாம் விரித்துப தேசஞ் செய்வான்.

வேறு

கிரமமா விருடி சந்தசு தியானந்
தெய்வவந் தனத்தொடு கிளக்கும்
வரன்முறை யிவற்றுற் பகர்வது முதல்யாம்
வகுத்துரைத் திடுமெழுத் திவையுங்
குருதிகொப் பளிக்கு நெட்டிலைச் சுடர்வேற்
குழகனித் திறமியம் பினனுங்
கிருடியர் பதினு யிரர்க்கொரு முகமா
வறுமுகத் தாலெவ ரெவர்க்கும்.

மோக்கசா தனமாஞ் சுத்தமாம் பஞ்சாக்
கரம்பிர ணவத்தொடு மொழியி
லாக்கிய போக மோக்கசா தனமாஞ்
சாந்தயாந் தத்தொடு மறையி
னீக்குதற் கரிய காமிய மளிக்கு
நெறியிலா வறுமையை முழுதும்
போக்குமோ ரிரண்டு சாந்தயாந் தத்தோ
டகமகிழ்ந் தன்பினுற் புகலில்.

செப்பிய சாந்த யாந்தமூன் றுடனே
யைந்தெழுத் தையுமுறை செபிக்கி
லொப்புறு நலனும் வசீகர மளிக்கு
முணர்வினு லித்திற முரைப்போர்க்
கெப்பய னரிய தாங்கவ ரகத்து
ளிச்சையாம் பொருளெலா மளிக்குந்
தப்பறப் புகலுஞ் சாந்தயாந் தத்தின்
றன்மையை யளப்பதற் கரிதால்.

மாகமா மதியின் மார்கழி மதியின்
வளர்திதி யாறுறி னெவர்க்கு
மோகையாந் தருமத் தினமதின் முருகற்
குவப்புட னித்தலத் துகந்து
பாகமா மமிர்த மைந்தினுற் பலத்தாற்
பான்மது முதலிய பிறவும்
யோகமாம் பொருளான் மஞ்சன மாட்டி
நிவேதனம் விதிமுறை யுதவி.

திங்களுக் கொருகான் மருவிடு முயர்கார்த்
திகைவரு தினத்திலா யினும்பார்
பொங்கொளி விரிக்கும் பிருகுவா ரத்தி
லாயினும் புனிதமென் புனலாற்
செங்கனித் திரளாற் பஞ்சகவ் வியத்தாற்
றெள்ளமு தைந்தினுற் சிறப்ப
வெங்கதிர் வடிவே லிறைக்கபி டேகம்
விதிமுறை செய்துபின் வியப்பால்

மகவிலா தவரு மகவினைப் பெறுவார்
வறியவர் திருவொடும் வாழ்வர்
மிகுபெரும் போகம் வேண்டினே ரதனை
மேவுவர் கல்வியை விரும்பி
மகிழ்வுற வேண்டு மவர்க்கது மருவும்
வகுத்திவை யுரைப்பதன் முன்னம்
பகர்விதி முருகற் கியற்றுவோர் வடிவேற்
பகவன துருவினைப் பெறுவார். (தலபுராணம்)

## மாலாதாரகன் றிருப்பணி.

முன்னெருகாலத்திலே, ஒன்பது வருடம் மழையின்மையால் பெரும்பஞ்ச முண்டாயிற்று. அக்காலத்திலே, துருவாசருண்டுபண்ணிய திருக்கோயில் சிதைந்து கானகமாயிற்று. ஓர் வேடன் அக்கானகத்திலே வேட்டையாட வந்தான். அவன் அக்காட்டிலிருந்த பூக்களைப் பறித்து, மாலைகளாகத்தொடுத்து, 'இலிங்கம்' மறைந்திருந்த தானத்

தில் வைத்துவிட்டு வேட்டையாடினுன். அம்மாலைகள் அவ்விலிங்கத்தின் திருமுடியிற் சாத்தியதுபோலாயிற்று. அவ்வேடன் 'இலிங்கம்' மறைந்திருப்பது அறியாதவனுய் அம்மாலைகளை யெடுத்து அணிந்துகொண்டு போயினுன். பின்பு அவ்வேடன் இலிங்கத்தின் றிருமுடியில் மாலைகள் வைத்த புண்ணியத்தினுலே, கலிங்க தேயத்திலே, அரசகுமாரனுகப் பிறந்து 'மாலாதாரகன்' எனப் பெயர்பெற்று, அரசனுயினுன். அவன் பூர்வ வுணர்ச்சியினுலே, எட்டுக் கோடி திரவியங் கொணர்ந்து, காட்டைக்களைந்து 'மயன்' அமைத்ததைவிட நான்கு மடங்கு அதிகமாக 'சிற்சபை, விமானம், மண்டபங்கள், மதில்கள், கோபுரங்கள்' முதலியன அமைத்து 'நித்திய நைமித்திகங்கள்' நடத்திக்கொண்டிருந்து முத்திபெற்றுன். இதனை பின்வருந் தலபுராணச் செய்யுட்களா லறியலாகும்.

உன்னு வான்புன லொன்பது வருடமா வுதவா
தின்ன வாறெலாம் பல்லுயிர் முழுவது மிரங்க
வன்ன காலையின் மீன்றசை மாதின மருந்துந்
துன்னு கானவ ரெழுந்தனர் கொலைத்தொழில் சூழ்வோர்.

வேறு.

ஆய காலையி லித்தலத் தாலயம்
போயு லைந்து பொறியழற் போர்தகட்
சீய மும்புலி யுந்திரள் வேழமு
மேய கானக மாகி விளங்குமால்.

இங்க ணிவ்வனத் தெய்தினன் முற்புகல்
வெங்கொ லைத்தொழில் வில்லெயி னர்க்குளோர்
செங்கண் வேட்டுவன் றீமை திருத்துவோன்
றங்கு யிர்க்குச் சமனெனத் தோன்றினுன்.

கரந்த வேடுவன் கண்ணுறுங் காட்சியிற்
புரிந்து தான்புனை வானப் புனத்திடை
நிரந்த நாண்மலர் கொய்து நிரையளி
பரந்த மாலை பலபல வீக்கியே.

மாலை யிற்கொடு வந்து மடிந்ததொல்
லாலை யத்தில்வைத் தானவண் கீழுற
ஞால மேவ மறைந்தது நன்குள
தேல வாங்க ணிலிங்க மிருந்ததால்.

ஆங்கு றுஞ்சிவ லிங்கத் தணிமுடிக்
கீங்கி வன்றரு மாலை யியைந்தது
பாங்கில் வேட னறிந்திலன் பண்புறத்
தீங்கி லாநல் வினைப்பயன் செய்ததால்.

போது போக்கத் தொடுத்திடும் பூமலர்க்
கோதை யைப்பின் கொணர்ந்து கிராதனு
மீது றப்புனைந் தோர்புன மேவியே
காத லோடு கரந்திருந் தானரோ.

மலங்கி வீந்த வனசரன் றன்னைமேல்
லலங்கல் வேய்ந்த வறப்பய னுலரன்
கலிங்க தேசத்திற் காவல னய்ப்பிறந்
திலங்க நல்லரு ளீந்தன னன்பினால்.

வேறு.

தனையரொரு நால்வரின் முன் னவன்றனக்கு மணிமகுடந் தரித்துமேனாள், வினையகற்றி யருள்பாரிசாதவனத் தரன்கோயின் மிடித்த னோக்கிப், புனைதன்முயன் றதுகரந்து கங்கைநதிப் புன வாடப் போவான் போன்று, நனிபொருளெண் கோடிகொணர்ந் தவ்வரசன் றருவனத்தி னண்ணி னனால்.

எய்திபடைந் தோர்க்கருளுந் திருக்களரு ளடவியெலா மிறுத்து நூறித், துய்யதம னியத்தகட்டாற் பொதிந்தமுழு மணிச்சபையுஞ் சுடர்கு லாவுந், தெய்வவிமா னமுமதிலுங் கோபுரமு மண்டபமுஞ் சிறப்ப மேன, ளுப்பமய னிபற்றியதி னுன்மடங்காம் படியமைத்தா னுரவுத் தோளான்.

முன்னவனுக் கரசனிபற் றிடும்பூசை யரிபிரமன் முதலோ ரேனும், பன்னலரி தெனிற்பகரும் பரிசுளதோ வின்னனவாம் பணிக ளாற்றி, மன்னுமறை யவர்களொடுந் தருவனத்தில் வதிந் தரசன் வானுள் போக்கிப், பின்னர்மழ விடைப்பாக னனுக்கிரகத் தான்முத்தி பெற்று னன்றே.

## தீர்த்தங்களின் மகிமை.

இத்தலத்தின் எல்லைக்குள் ஒரு சிறியகுழியில் நீரிருந்தாலும், அது உலகிலுள்ள தீர்த்தங்க ளெல்லாவற்றினும் மேலான தீர்த்தமாகும். மணலெல்லாம் "இலிங்கம்" மாட்டுக்குளப்படி யெல்லாந்தீர்த்தமென்பர்.

துருவாசதீர்த்தம்:- துருவாசருண்டுபண்ணியது. இதனை 'உலோக்கியதீர்த்தம், உலோகா லோக்கியதீர்த்தம்' என்பர். இத்தீர்த்தம் சந்நிதியில் கிழவீதிக்கு மேல்புறமிருக்கிறது. இதில் தினம்மூழ்குவோர் போகங்களெல்லாவற்றையு மடைவர்; 'வியதிபாதம், அயனம், கிரகணம், அருத்தோதயம், மகோதயம், சங்கிராந்தி, மாசப்பிறப்பு, அமாவாசி, பூரணை முதலிய புண்ணியகாலங்களில் மூழ்குவோர் பேரின்பமடைவர்.

பிரமதீர்த்தம்:— பிரமதேவருண்டுபண்ணியது. இதனை 'சிந்தாமணி' என்பர். தெற்கு மதிலுக்கும், தெற்கு வீதிக்கும் மத்தியிலிருக்கிறது. இதில் தினம் மூழ்குவோர் பிரமலோகமடைவர். அநேகம் பிரமாக்கள் மூழ்கிப் பேறுபெற்றனர்.

உருத்திரதீர்த்தம்:— இது மேலமதிலுக்கும், மேலவீதிக்கும் நடுவிலிருக்கிறது. கற்பாந்தத்தில் அநேகம் உருத்திரர்கள் மூழ்கி உருத்திரலோகமடைந்தனர். தினம் மூழ்குவோர் உருத்திரலோகமடைவர். 'வைகாசி, ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி' என்னும் மாதங்களில் மூழ்குவோர் போக மோட்சங்களையடைவர்.

திருஞானதீர்த்தம் :-இது வடக்குமதிலுக்கும், வடக்கு வீதிக்கும் இடையிலிருக்கிறது. தினம் மூழ்குவோர் ஞானமடைவர். 'ஞானவாவி' எனவுங்கூறுவர். கார்த்திகை மாசம் ஞாயிற்றுக்கிழமையில் மூழ்குவோர் 'குட்டம்' முதலிய நோய்களெல்லாம் நீங்கப்பெறுவர். 'மாசிப்பரணி, சிவராத்திரி' முதலிய புண்ணிய தினங்களில் மூழ்குவோர் சிவசாரூபம்பெறுவர்.

இந் நான்கு தீர்த்தங்களோடு இக்கோயிலை வலம் வருவோர் பூமி வலம்வந்த பலனையும், தீர்த்தங்களெல்லாவற்றினும் மூழ்கிய பலனையும், திருக்கோயில்களெல்லாவற்றையும் வணங்கிய பலனையும் அடைவர். இப்போது கூறியவைகளை பின்வருந் தலபுராணச் செய்யுட்களால் நன்குணரலாகும்.

அற்புதமா யிமையவரு முனிவரரு மாலயனு மன்பா லேத்தத்
தற்பரனு னந்தநா டகம்புரியு முழுமணிப்பொற் சபையின் சார்பிற்
சுற்றுறவோர் குண்டத்தி னளவேனும் புனல்காணிற் றொல்லை ஞால
முற்றபல தீர்த்தத்தின் மேலான தீர்த்தமென வுரைக்க லாமால்.

தருவனத்திலரன்கோயிற் சன்னிதியிற் றுருவாசன் றவத்தாற்செய்த
பொருவரும்லோக்கியதீர்த்தமுளததனிற்றினம்மூழ்கிற்போகம்யாவு
மருளுமதின் மூழ்குதற்கு விசேடதினம் விதிபாத மயனத் தோடு
கிரணமருத் தோதயஞ்சங் கிராந்திகவி மதியெனுமிக்கிழமையாமால்.

உயர்பிரம தீர்த்தமென வீசனுக்குத் தென்றிசையி லுளதத் தீர்த்தத்
தியன்மறையோர் பலர்மூழ்கி முத்திபெற்று ரீசனுக்குமேல்பாலென்
பயிலுமுருத் திரதீர்த்தங் கற்பாந்தத்துருத்திரர்கள்பலருமூழ்கி [றும்
நயனுறுமத் தீர்த்தத்தின் மூழ்கிலுருத் திரலோக நண்ண லாமால்.

பரமனுக்கு வடதிசையு லுளது மேவிப்
படிந்தோர்க்கு மெய்ஞ்ஞானம் பயக்கு மாற்றுற்
றிருஞான தீர்த்தமெனும் பெயரா மந்தத்
தீர்த்தத்திற் கார்த்திகையா தித்த வாரத்
திரவியெழுங் காலையினின் மூழ்கி மேலோர்க்
கினியநறும் பாற்குடமீந் திட்டா ராயி
னரியகுட்ட நோய்முதலா மனைத்து நோயு
மகன் றுசிவன் சாலோக மடைவா ரன்றே

போதமீந் திடும்வாவி தன்னின் மூழ்கிப்
பொற்சபையி லீசனுக்கும் புவன மீன்ற
மாதினுக்கும் விதிமுறையாற் பூசை யாற்றில்
வாய்த்தபெரும் போகமெலா மளிப்ப ராமீண்
டோதியவா வியின்மாசித் திங்கண் மேவு
மோங்குசிவ நிசியினில்வந் தொருகான் மூழ்கிற்
பூதலத்தி லெவரேனு நிமல னென்றே
புகல்வதல்லான் மனிதரெனப் புகலொ ணாதால்.

உயர்ந்ததீர்த் தங்க ளோடித் தலத்தினை யொருகாற் சூழ்ந்தா
வியைந்தபூ வலம்வந் தாற்போன் றெய்திடும் பயன்க ளீறில்
பயன்றரு பகிரண் டத்திற் றலமெலாம் பணிந்து பார்மே
லியங்கிய தீர்த்தம் யாவு மாடிய பலனு மெய்தும்.

## தலத்தின் முற்கால நிலைமை.

சோழர்களுடைய ஆட்சிக்குப் பின்பு, கோவில் நிலங்களைப் பலர் பங்கிட்டுக்கொண்டார்கள்; திருவாபரணங்களைச் சிலர் திருடிக்கொண்டுபோனார்கள்; தேர்முட்டிகளைச் சிலரிடித்துக் கொண்டுபோய் வீடுகட்டிக் கொண்டார்கள்; வீதிகளைச் சிலர் வீட்டோடு சேர்த்துக்கொண்டார்கள். வீதிகளின் நான்கு மூலைகளிலும், உடைமடைகளுண்டாயின; பொன்னுகொண்டாறு 'வெள்ளொடைப்பு, நார்த்தொடைப்பு' முதலிய உடைப்புக்களின் வாயிலாக வூரிற்புகுந்து, உடைமடைகளின் வழியாக வீதிக்குள் நுழைந்து, திருக்கோயிலைத் தரிசனஞ் செய்துகொண்டு, தென்கிழக்காகச் சென்று, சாளுவன் ஆற்றிற் சங்கமமாயிற்று; 'பிரமதீர்த்தம், உருத்திர தீர்த்தம், திருஞான தீர்த்தம்' இம்மூன்றும் ஒன்றையொன்று தழுவி, பகரவுருவம்பெற்று, கோவிலுக்கு ஆரஞ்சாத்தியதுபோலாயின; கீழவீதி தீவட்டிக்கரைச் சாலையாயிற்று; துருவாச தீர்த்தம் மேல் கரையில் தெற்கு வீதிக்கும் வடக்கு வீதிக்கும் பத்தடி அகலத்தில் ஒரு வழியுண்டாயிற்று; இவ்வழிக்குக் கிழக்கில் தெற்கு வீதிக்கு வடபுறம் ஓரமாகவும், கீழ வீதிக்கு மேல்புறம் ஓரமாகவும் "டகரம்' போல ஒரு பெரிய ஓடையிருந்தது; துருவாச தீர்த்தம் தென்கரையில் எழு கெசம் அகலத்தில் சுவாமி எழுந்தருளி வீதிக்கு 'வந்து, போகும்' வீதியிருந்தது; வடக்கு வீதிக்குத் தென்புறம் வழி நடப்புக்கு மேல்புறம், மாலாதாரகன் திருப்பணிக்கு வெல்லங்கரைத்த பள்ளமாகிய "வெல்லக்குட்டை' யிருந்தது; தெற்கு வீதிக்கு வடபுறம், வழிநடப்புக்கு மேல்புறம் ஒரு நன்செயும், தெற்கு வீதிக்கு வடபுறம், பிரம தீர்த்தத்திற்குக் கீழ்புறந் தென்புறங்களில் சில நன்செய்களுமிருந்தன; சன்னிதியில் தென்சிறகில் உ-

வீடுகளும், தருவாச தீர்த்தந் தென்கரைத் தென்சிறகில் உ-வீடுகளும், கீழ வீதியில் ச-வீடுகளும், தெற்கு வீதியில் கச-வீடுகளும், மேல வீதியில் கக-வீடுகளும், வடக்கு வீதியில் கரு-வீடுகளுமிருந்தன ; நான்கு வீதிக்குட்பட்டு 'கருo-தென்னை, உ-பனை, கூ-இருப்பை, க-புளி, க-அரசு,' என்பனவாகிய மரங்களும், 'எருக்கு, முருக்கு, சங்கு, ஈச்சை காறை, சூறை, காட்டாமணக்கு' முதலிய செடிகளும் நிறைந்திருந்தன ; முருகமாதவராயர் என்பவர் 1876-ம் வருடத்தில் 'உருத்திர தீர்த்தம், திருஞான தீர்த்தம், வடக்கு மதில், வடக்கு வீதி' என்பவற்றினிடையிலிருந்த, நீர்நிலையைப் புன்செயாக்கி, அதில் வீடு கட்டிக்கொண்டார்; பிரம தீர்த்தமும் உருத்திர தீர்த்தமும் 'டகரம்' போலிருந்தன; மேற்படி 'டகரம்' போன்ற தலம் 1879-ம் வருடத்து, சர்வே கணக்கில் 'தேவா தாயப்புறம்போக்கு' என்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது ; கோவிலுக்கு மேற்படி சர்வே கணக்குப்படி 'நன்செய் புன்செய்' திருக்களரில் ஏக்கர் 118 சென்ட் 48, இனும் கீழப்புத்தூரில் ஏக்கர் 1 சென்ட் 67, சிலத்தநல்லூரில் சென்ட் 24, சோலைக்குளத்தில் சென்ட் 15, மேவழைக்கார்நல்லூரில் சென்ட் 20, குமாரமங்கலத்தில் ஏக்கர் 53 சென்ட் 33, விளக்குடியில் சென்ட் 67, குறுக்கையில் ஏக்கர் 10 சென்ட் 32 ஆக ஏக்கர் 185 சென்ட் 6 நிலங்களிருந்தன ; கிராமங்கள் சம்பந்தமாக 'கணக்குமணியம் (க), விசாரிப்பு (க), தலையாரி (க)' என்னும் மூன்று அசாமிகள் வேலை பார்த்தார்கள் ; உட்துறை சம்பந்தமாக 'பூசகர் (க), பரிசாரகர் (க), அறைதிருமாலை (க), திருவிளக்கு (க), மெய்காவல் (க), கூட்டல் பத்துத் தேய்த்தல் (க), சந்துதம்பட்டம் (க), திருச்சின்னம் சேககண்டி (க), உடல் (க), கிடுகொட்டி (க), பெரியமேளஞ் சதை (க), சின்னமேளஞ் சதை (க)' என்னும் அசாமிகள் வேலை பார்த்தார்கள் ; தினம் 'காலை சந்தி, உச்சிக்காலம், சாயரட்சை, இரண்டாங்காலம், அர்த்தயாமம்' என்னும் ஐந்து காலம் பூசை நடந்துவந்தன ; ஒரு படி அரிசிக்கு நாலு பட்டை வீதம் குறுணிக்கு பதினாறு பட்டைச்சாதங்

கள் போடப்பட்டன ; பிரமோற்சவம் நீங்கலாக ‘ சித்திரைச் சித்திரை, சித்திரைத் திருவோணம், வைகாசி விசாகம், ஆனி யுத்திரம், ஆடிப்பூரம், ஆவணி மூலம், ஆவணி சதுர்த்தசி, புரட்டாசி நவராத்திரி, புரட்டாசி சதுர்த்தசி, ஐப்பசித் தீபாவலி, ஐப்பசிக் கந்தசட்டி, கார்த்திகைத் திருக்கார்த்திகைத்தீபம், கார்த்திகை ஞாயிற்றுக் கிழமைகள், கார்த்திகைத் திங்கட்கிழமைகள், மார்கழித் திருவாதிரை, தைச் சங்கிராந்தி, தைப் பூசம், மாசி சதுர்த்தசி, மாசி மகம், பங்குனி உத்திரம், மாசப்பிறப்புகள், அமாவாசிகள், பூரணைகள், பிரதோடங்கள், கார்த்திகை நட்சத்திரங்கள், சுக்கிரவாரங்கள்’ முதலிய சில்லரை யுற்சவங்களெல்லாம் நடந்து வந்தன.

தஞ்சாவூர் சர்க்கிள் தேவத்தானங் கமிட்டியில் இன்சுபெக்டராயிருந்த ‘ தாதாராயர் ’ அபிப்பிராயப்படி நியமித்த பஞ்சாயத்தார்கள் கோவிலைத் திருப்பணி செய்யப்போவதாக 1884-ம் வருடத்தில் இடித்துப்போட்டு ‘ ஆல், அரசு, அத்தி, இத்தி, நுணா, இண்டு, காறை, சூறை, கள்ளி, முள்ளி, எருக்கு, முருக்கு, ஆதொண்டை, நெரிஞ்சி, குறிஞ்சா ’ முதலியவற்றைக் குடியேற்றிக் காடாக்கி ‘ பாம்பு, தேள், நட்டுவாக்காலி, அட்டை, செய்யான் ’ என்னும் தருமகருத்தாக்களிடம் ஒப்புவித்துவிட்டு, பஞ்சாயத்தை ‘ இராசிநாமா ’ கொடுத்துவிட்டார்கள். கமிட்டியாரவர்கள் ‘ கோவில் ’ காடானதையும், பாம்பு வகையறு ஐந்து தரும கருத்தாக்கள் பரிபாலனம் பண்ணுவதையுங் கவனிக்காதவர்களாய், இராசிநாமாவை அங்கீகாரஞ் செய்துகொண்டு, சிவராமகிருட்ண ஐயர் என்பவரை கோவிலுக்கு மானேசராக நியமித்தனுப்பினார்கள். கோவிலில் ‘ காலையில் ஒரு காலமும், மாலையில் ஒரு காலமும் ’ மணிச்சத்தம் மாத்திரங் கேட்டுக்கொண்டிருந்தன. பின்பு சிலகாலஞ் சென்று, கருப்பட்டிமூலை தியாகராசசுவாமி உடையாரவர்களைப் பஞ்சாயத்தாராக நியமித்து, மேற்படி கமிட்டி மெம்பர்களிலொருவராயிருந்த சிங்காரவேல் உடையாரவர்கள் கோவிலைத் தம் பார்வையில் வைத்துக்கொண்டார்கள்.

உடையாரவர்கள் காலங்களில் கோவிலில் ஒரு பைசாகூட மீதமில்லை. 'ஈசுரக்குருக்கள்' என்பவர் மணிச்சத்தத்தை நிறுத்த மனமில்லாதவராய், சிரார்த்த வீட்டில் தானம் வாங்கிய அரிசியைப் பொங்கிவைத்து, மணியடித்துக்கொண்டிருந்தார்.

பாரினிற் சிறந்த பருதியின் குலத்திலே, சுராதிராசனெனுஞ் சோழன் மரபிலே, 'மாதய பட்டினம்' என்னும் திருநகரத்தை இராசதானியாகக்கொண்ட 'மாதவராயன்' என்னும் அரசன் கால்வழியிலே, எணுட்டியபுகழ் சோணுட்டிடையிலே, எந்நதிகளினுஞ்சிறந்த பொன்னிநதிப் பரப்பிலே, அறந்திறம்பாத புறங்கரம்பை நாட்டிலே, 'பிறந்தோர், இறந்தோர், தரிசித்தோர், நினைத்தோர்' என்னும் நால்வகையோருக்கும் நற்கதியளிக்கும், மருக்கிளர் பொழில்சூழ் திருக்களர்ப்பதியிலே முருக மாதவராயருக்கு, பொதியம்மையார் திருவயிற்றிலே பிறந்தவரும்; திருத்தில்லைச் சிற்றம்பலத்திலே, கல்வி பயின்றவரும்; 'இரயில், சால்ட், போலீசு' என்னும் மூன்று டிபார்ட்மெண்டில் வேலை பார்த்தவரும்; நாற்பது வருடங்களாக உத்தமத்தொழிலாகிய உபாத்திமைத் தொழில் நடத்திவருகின்றவரும்;

காப்பது விரதம்.

நோன் பென்பதுவே கொன்று தின்னுமை.
புலையுங் கொலையுங் களவுந் தவிர். (ஔவையார்.)

அவிசொரிந் தாயிரம் வேட்டலி னென்ற
னுயிர்செகுத் துண்ணுமை நன்று.

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண் ணுங் கூற்று.

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை. (திருவள்ளுவர்)

கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
யெல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே.

கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ வறியேன் பராபரமே. (தாயுமானவர்)

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
யெல்லா ருங்காண வியமன்றன் றூதுவர்
செல்லாகப் பற்றிய தீவாய் நரகத்தின்
மல்லாக் கத்தள்ளி மறித்து வைப்பாரே.

கொலையே களவுகட் காமம் பொய்கூறல்
மலைவான பாதகமா யவை நீக்கித்
தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்
கிலையா மிவைஞா னனந்தத் திருத்தலே.

பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோ ரணுக்களைக் கொல்லாமை யொண்மலர்
நற்றார் நடுக்கற்ற தீபமுஞ் சித்தமு
முற்றாரு மாவி யமர்ந்திட முச்சியே. (திருமூலர்.)

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங் கோள்களவு
கல்லாமற் கைதவரோ டிணங்காமற் கனவினும் பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே.
(பட்டினத்தடிகள்.)

ஆருயிர்க்கொ லாதமேலோ ரறிவினை யறிந்தநல்லோர்
தீமனமொ டுக்கவல்லோ ரிவர்களே தேவராவர்
காமராய்க் கற்பழித்தோர் களவுசெய் துடல்வளர்த்தோர்
மாமிசந் தின்போரெல்லா மானிடப் புலையராவார்.

(வேறு)

அரிய வாக்கையின் மானிட வாக்கையே யாக்கை
விரியு நோன்பினி லுயிர்கொலா விரதமே விரதந்
கருதிற் றெய்வதங் கண்ணுதற் றெய்வமே தெய்வந்
தெரியிற் றேவிகாலோத்தர தேற்றமே தேற்றம்.

(வேறு)

அம்மாவென வலறவா ருயிரைக்கொன் றருந்தி
யிம்மா னிடரெல்லா மின்புற் றிருக்கின்ரு
ரம்மாவெனுஞ் சத்தங்கேட் டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மாநிரைய மென்ருற் புசித்தவர்க்கென் சொல்லுவதே

(வேறு)

கங்கையிற் படிந்திட்டாலுங் கடவுளைப் பூசித்தாலு
மங்குல்போற் கோடிதன்மம் வள்ளலாய் வழங்கினுலுஞ்
சங்கையில் லாதஞான தத்துவ முணர்ந்திட்டாலும்
பொங்குறு புலால்புசிப்போன் போய்நர கடைவனன்றே.

கொலையிலா னுதவுமன்னங் கூறிற்பே ரமுதமாகுங்
கொலையுளா னுதவுமன்னங் கூறிற்பேர் விடமதாகும்
புலையர்தம் மனையிலுண்போன் புலையனு மாறுபோலக்
கொலைஞர்தம் மனையிலுண்போன் கொலைஞனே யாவனன்றே.

இத்திற னருள்கைப்பற்றி யுயிர்க்கெலா மிதத்தைச்செய்க
சத்திய விரக்கமின்றேன் முத்தியைச் சாரானுகும்
பத்தியால் யோகஞ்சாரும் யோகத்தாற் பரமஞானஞ்
சித்தியா மிதற்காதாரஞ் சிவகா ருணியமன்றே.

(வள்ளலார்.)

புலையென்னப் புலைதீரப் புனலென்னும் புனன்மூழ்கி
அலைகின்ற மூடர்க ளறிவென்ன வறிவென்ன
புலையன்றன் மலமுண்ணு மெமையுண்ணும் புலையர்க்கு
குலமென்ன நலமென்ன கூகூவென் றனகோழி.

(கொலைமறுத்தல்.)

ஆடுபன்றி கோழி யருந்துவோர்க் கெல்லாம்
வீடில்லை யென்றுரைக்கும் வேதங்கள்—நாடுமவர்க்
கிம்மையிலுந் துன்ப மறுமையிலு மேழ்நிரையம்
நன்மையிலை யொருபோது நாடு.

என்று ஆன்ருேர்கள் அருளிச் செய்திருப்பதற் கிணங்க புலாலுண்ணலைத் துறந்து, சிவகாருணியத்தைக் கைப்பற்றிய வரும்;

கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.

நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு. (திருவள்ளுவர்.)

எரியெனக் கென்னும் புழுவோ வெனக்கென்னு மிந்தமண்ணுஞ்
சரியெனக் கென்னும் பருந்தோ வெனக்கென்னுந் தான்புசிக்க
நரியெனக் கென்னும் புன்னா யெனக்கென்னு மிந்நாறுமுடலை
பிரியமுடன் வளர்த்தே னிதனா லென்ன பேறெனக்கே.
(பட்டினத்தடிகள்.)

வாழ்வாவது மாயமிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பரிதான்
றாழாதறஞ் செய்மின் றடங்கண்ணான் மலரோனுங்
கீழ்மேலுற நின்றான் றிருக்கேதார முனீரே. (சு-தேவாரம்.)

காக மொடு கழு கலகை நாய்நரிகள் சுற்று சோ றிடு துருத்தியைக்
காலி ரண்டு நவவாசல் பெற்றுவளர் காமவே ணடன சாலையை
மோக வாசைமுறி யிட்டபெட்டியைமுமலமிகுந்தொழுகு கேணியை
மொய்த்து வெங்கிருமி தத்து கும்பியை முடங்கலார்கிடை சரக்கினை
மாக விந்த்ர தனு மின்னை யொத்திலக வேத மோதிய குலாலனார்
வனைய வெய்யதடி கார னாயமன் வந்த டிக்குமொரு மட்கலத்
தேக மானபொயை மெய்யெ னக்கருதி யையவையமிசை வாடவோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல சிற்சு கோதய விலாசமே.
(தாயுமானவர்.)

என்று பெரியோர்கள் அருளியபடி 'செல்வம் நிலையாமை யையும், ஆக்கை நிலையாமையையும்' நன்குணர்ந்தவரும்;

நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி.

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்.

புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு.

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்.

அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
வின்னா வுலகம் புகல்.

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லா
ரவஞ்செய்வா ராசையுட் பட்டு.

தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது.

பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார். (திருவள்ளுவர்.)

நல்லா ரிணக்கமு நின்பூசை நேசமு ஞானமுமே
யல்லா துவேறு நிலையுளதோ வகமும் பொருளு
மில்லா ளுஞ்சுற்ற முமைந் தரும்வாழ்வு மெழிலுடம்பு
மெல்லாம் வெளிமயக் கேயிறை வாகச்சி யேகம்பனே.

ஊருஞ் சதமல்ல வுற்றார் சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலே
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சி யேகம்பனே.

மனையாளு மக்களும் வாழ்வுந்தனமுந் தன்வாயின் மட்டே
யினமான சுற்ற மயானமட்டே வழிக் கேதுதுணை
தினையாமள வெள்ளள வாகினு முன்பு செய்ததவந்
தனையாள வென்றும் பரலோகஞ் சித்திக்குஞ் சத்தியமே,

அத்தமும் வாழ்வு மகத்துமட்டே விழியம் பொழுக
வெத்திய மாதரும் வீதிமட்டே விம்மிவிம்மி யிரு
கைத்தல மேல்வைத்தழு மைந்தருஞ் சுடுகாடுமட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே.

மையாடுகண்ணியு மைந்தரும்வாழ்வு மனையுஞ் செந்தீ
யையாநின்மாயை யுருவெளித்தோற்ற மகிலத் துள்ளே
மெய்யாயிருந்தது நாட்செல நாட்செல வெட்டவெறும்
பொய்யாய் பழங்கதையாய்க் கனவாய்மெல் லப்போனதுவே.
(பட்டினத்தடிகள்.)

மக்களாக்கையிற் பிறத்தலே யரிதுமற் றதிலுந்
துக்கசூன்குரு டூமையைத் துறத்தலு மரிது
நற்குலத்திடை வருதலு மரிது ஞானத்தான்
முக்கணீசனுக் காட்படல் முற்றிலு மரிதே.

அரிதுமானிட யாக்கையிற் பிறத்தன் மற்றதினு
மரிதுவேதநூல் சைவநூலா லகந் தெளித
லரிதவ்வீசனே நாமென வறிவுமே விடுத
லறிதுவாய்ப் பறையறைந்திடா ததினடங் கிடலே.
(வள்ளலார்.)

அப்பனீ யம்மைநீ யையனு நீ
யன்புடைய மாமனு மாமியு நீ
ஒப்புடைய மாதருமொண் பொருளு நீ
யொருகுலமுஞ் சுற்றமு மோரூரு நீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய் நீ
துணையா யென்னெஞ்சந் துறப்பிப்பாய் நீ
இப்பொன்னீ யிம்மணிநீ யிம்முத்து நீ
யிறைவனீ யேறூர்ந்த செல்வ னீயே.
(திருநாவுக்கரசுநாயனார்)

என்னுந் திருப்பாசுரங்களை நன்குணர்ந்தவரும்; சபா நாயகப்பெருமானையே வழிபடு கடவுளாகக்கொண்டவரும்; திருமூலர் பரம்பரையில் 'சிவராச யோகேந்திர ஞானனந்தப் பெருவாரிதியாய், விருப்பு வெறுப்பற்ற சமரச சுவாநுபூதிக் கிருபாசமுத்திரமாய்' கருப்புக்களர் கிராமத்திலே சமாதியுற்று விளங்கும் 'ஓரிச்சேரி சுவாமிகள்' என்னும் திருவருள், சுப்பைய சுவாமிகளிடம் அனுக்கிரகம் பெற்றவரும் ஆகிய மு. சுவாமிநாத உபாத்தியாயர் என்பவர் 1898-ம் வருடம் முதல் தஞ்சாவூர் சர்க்கிள் தேவத்தானங் கமிட்டியாரவர்களுக்கு ஓய்வின்றி எண்ணிறந்த 'மகசர், மனுக்கள்' எழுதினர். 'நீலலோசனி, யதார்த்தவசனி'

என்னும் பத்திரிகைகளின் வாயிலாக இடைவிடாமல் கதறினார். 'சிலாசாதனம், செப்பேட்டுச்சாதனம், தலபுராணம், தேவாரம், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணம், திருச்சேத்திரக்கோவை, திருப்பதிகக்கோவை, திருப்பதிக் கோவை, சிவட்சேத்திர சிவநாமக் கலிவெண்பா, சிவட்சேத்திர விளக்கம், சிவதல மான்மியச் சுருக்கம், சிவதலமஞ்சரி' முதலியவற்றில் இத்தல சம்பந்தமாக வுள்ளவைகளை யெல்லாம் ஓரேபுத்தகமாகத் திரட்டியும், திருப்பணி செய்வதற்கு வேண்டிய ஆதாரங்களை ஒரு பத்திரிகையாகத் திரட்டியும் 1902-ம வருடத்தில் அச்சிற் பதிப்பித்துக்கொண்டுபோய் 'இரயில், மோட்டார்' இல்லாத அக்காலத்தில் 'தேவகோட்டை, காரைக்குடி' வகையறாத் தொண்ணூற்றாறு நகரங்களிலும் பரப்பினார். காரைக்குடிக்கடுத்த கோவிலூர் மடாலயத்தில் ஐந்தாங்குருமூர்த்தமா யெழுந்தருளியிருந்த 'வீரசேகர மகாமுனிவர்' திருச் சன்னிதானத்தில் 'சமர்ப்பித்து' வணங்கி விண்ணப்பஞ் செய்தார். மேற்படி தலபுராணம் வகையறாவையும், பத்திரிகையையும் நன்குணர்ந்த காரைக்குடி 'பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள், ஆத. பழ. பழனியப்ப செட்டியாரவர்கள், ராம. ஆத. மெ. இராமசாமி செட்டியாரவர்கள், ஆத. லெ. ஆத. ஆதப்ப செட்டியாரவர்கள்' வகையறாப் பங்காளிகள் கோவிலை ஒப்புக்கொண்டு திருப்பணிசெய்ய எத்தனப்பட்டார்கள். அவர்களிலே ஒருவர் சரிபங்கு கொடுக்க சம்மதிக்காமையால் அவர்கள்வந்து ஒப்புக்கொள்ளக் காலதாமதமாயிற்று. தஞ்சாவூர் சர்க்கிள் தேவத்தானங் கமிட்டியாரவர்கள் முற்கூறிய 'மகசர் மனுக்களையும், நீலலோசனி, யதார்த்தவசனி பத்திரிகைகளையும்' பார்வையிட்டு, மேற்படி கமிட்டி மெம்பர்களி லொருவராகிய சிங்காரவேல் உடையாரவர்கள் அபிப்பிராயப்படி 'தண்டனையடைந்த 'கேடி' நாராயண ஐயங்காரையும், ஓரிச்சேரி கோவிந்தசாமி உடையாரையும்' பஞ்சாயத்தார்களாக நியமித்தார்கள். மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயர் மேற்கண்ட செட்டியார்களையே பஞ்சாயத்தார்களாக நியமிக்கவேண்டுமென

வும்; அவர்கள் ஒப்புக்கொள்ளாத பட்சத்தில் 'பூவனூர் இராசுமுதலியாரவர்கள், ஆலங்காடு சிதம்பரஞ்செட்டியாரவர்கள்' என்பவர்களை பஞ்சாயத்தார்களாக நியமிக்க வேண்டுமெனவும், மற்றையோர்களைப் பஞ்சாயத்தார்களாக நியமிக்கக் கூடாதெனவும் மேற்படி கமிட்டியாரவர்களோடு வாதாடினர். இந்த நிலைமையில் மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயரைச் சிலர் கொலைசெய்ய எத்தனப்பட்டார்கள். அவர்களுடைய எண்ணத்தைக் கடவுள் பூர்த்தி செய்து வைக்கவில்லை. மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயர் பின்னும் பலமுறை 'காரைக்குடிக்கும். கோவிலூருக்கும்' போய் மேற்படி 'செட்டியார்களிடத்திலும், வீரசேகர மகாமுனிவரிடத்திலும்' தலபுராணத்தின் முக்கிய பாகமாகிய 'துருவாசமுனிவர் பூசை, சபாநாயகர் திரு நடனம், முருகக்கடவுள் பஞ்சாக்கர வுபதேசம், மாலாதாரகன்பேறு' என்பவற்றைப் பற்றிய முக்கிய செய்யுட்களை யெடுத்துக் காண்பித்துப் பொருளுரைத்தும், பின்வருந் தலபுராணச் செய்யுட்களை விளக்கிக் கூறினர்.

அந்தநாண் முதலா யாவ ராயினு மமரர் நாட்டின்
பைந்தரு வனஞ்சூழ் செம்போற் பன்மணிச் சபையை நோக்கி
வந்தனை புரிவ ராயின் மழுவலான் வரத்தான் மாயாப்
பந்தவல் வினையை நீங்கிப் பரகதி யடைவர் மாதோ.

திரண்டளிகள் வரிபாடுந் திருக்களரீ சனைப்பணியச் செல்தவோமேன், றிரண்டடிசேன் றலவர்க்கோ ரயமேத பலனுளதாம் யாவரேனும், விரைந்தோநழன் றடிசேன்றுற் சிவலோகம் பேறுவர்முற்று மேவிப் போந்தோர், பொருந்துபல னுரைக்கடங்கா தயன்றனக்கும் வரையறுத்துப் புகல லாமோ.

அநந்தமா யிரகோடிப் பிறவியிற்புண் ணியம்புரிந்தார்க் கல்லா லீசன், கனிந்துகா தலித்துநத மிந்தழுழ மணிச்சபையின் காட்சி யெய்தா, மனந்தறு வினைப்பினுமேற் கதியளிக்கு மிச்சபையின் மகிமை யாவும், புனைந்துரா முயிரமா முகமெனினு மனந்தனுக்கும் புகலொ ணுதால்.

அற்றவருக் கருள்புரியுந் திருக்களரீ சனைப்பணிய வன்பான் மேவு, மற்றொருவ நடன்றமது காரியத்தாற் பத்தியின்றி மருவிக் காண்ட, லுற்றவருஞ் சிவலோக பதம்பெறுவ ரளவிலற முனுற்றி றோரே, பேற்றிடுவ ரித்தலத்திற் சிவலிங்க தரிசனந்தான் சிறக்குண்டாமோ.

பத்தியின்றி யுணவினுக்காக் கிருமியோடு சிறகாளி பறவையேனுஞ், சித்திதருந் திருக்களரீ சனைமுக்கால் வலம்வந்தாற் றேவர் காணு, முத்திதனை யேயடைவு மையுறலென் றயன்பயந்த முனிவன் கேட்பச், சத்தியஞ்சத் தியமிதுசத் தியமென்ற னந்தியெனுந் தவத்தின் மேலோன்.

சிறந்ததரு வனமோங்குந் தேவர் போற்றுந்
திருக்களர்மா நகர்மேவுஞ் சிவனை யோர்கா
லறிந்துதரி சித்தனரா யினும்யா தொன்று
மறியாமற் றரிசித்தா ரேனினு மன்றோர்
செறிந்தகிளை யோடுமவர்தம் வழியு ளாய
தென்புலத்தோ ரோடுமுறையிற் சிவலோ கத்தி
லுறைந்திடுவர் சத்தியஞ்சத் தியமா மிந்த
வுரைதவறென் றோர்நரகத் துறுவ ராமால்.

புலையரோடு போல்லாத பதித ரேனும்
போன்னவிர்பூந் தருவனத்திற் போருந்துஞ் செங்கே
ழிலகுமணிப் பெருங்கோயில் வைகு முக்க
ணீசனைத்தா ரத்தனுகி யிறைஞ்சி னுரேற்
றுலவுவர்முத் தியிலிதுசத் தியமாந் தீராக்
கோடியவினைப் பாவிகளுங் கோவு மாவு
மோலிகோள்பற வைட்மளியும் புழுவு மேனுந்
தரிசித்தாற் சிவலோகத் துறையு மாதோ.

இந்த நிலைமையில் தஞ்சாவூர் சர்க்கிள் தேவத்தானக் கமிட்டியில் கிருபாநிதியாகிய P. R. நடேச ஐயரவர்கள் புதிதாக தலைமைப்பதவி வகித்ததை மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயர் கேள்விப்பட்டு, காரைக்குடியிலிருந்தபடியே தஞ்சாவூருக்குப் போய் மேற்படி P. R. நடேச ஐயரவர்களுடைய காலில் விழுந்து, இரண்டு கால்களையுங் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, திருக்களர்க்கோவிலை

நல்ல நிலைமைக்குக் கொண்டுவரக்கூடிய முற்கூறிய செட்டியார்களையாவது; 'பூவனூர் இராசுமுதலியார், ஆலங்காடு சிதம்பரஞ் செட்டியார்' என்பவர்களையாவது பஞ்சாயத்தார்களாக நியமிக்கிறதாக வாக்களித்தால் கால்களை விடுவேன்; இல்லையேல் உயிரை விடுவேனென்று அழுது அலறினர் மேற்படி ஐயரவர்கள் அப்படியே செய்வதாக வாக்களித்தார்கள். பின்பு சின்னாட்சென்று, முற்கூறிய கருப்பட்டி மூலை தியாகராச சுவாமி உடையாரவர்களிடமிருந்து, சில வண்டிகளும் ஒரு கடிதமும் கோவில் நெல்லை ஏற்றிக் கொண்டு போகவேண்டியதற்காக திருக்களருக்கு வந்தன. மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயர் அக்காலத்தில் கோவிலில் மானேசராயிருந்த வைத்திநாதய்யருடைய ஆசைநாயகியாகிய 'மீனாட்சியம்மாள்' என்பவளைக்கொண்டு மேற்படி கடிதத்தைக் கைப்பற்றிக்கொண்டுபோய், மேற்படி கமிட்டி மெம்பர்களி லொருவராயிருந்த கோட்டூர் K. திருவேங்கட முதலியாரவர்களிடங்கொடுத்தார். அக்கடிதத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு, மேற்படி 'P. R. நடேச ஐயரவர்கள், K. திருவேங்கட முதலியாரவர்கள், V. அப்பாசாமி வாண்டையாரவர்கள், சாம்பமூர்த்தி ராயரவர்கள்' இந்நான்கு கனவான்களும் திருக்களர்க்கோவிலை நல்ல நிலைமைக்குக் கொண்டுவரத் திருவுளங்கொண்டும், மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயருடைய துக்கத்தை நிவர்த்தி செய்யக் கருதியும் ஏகமனதாய் பூவனூர் இராசு முதலியாரவர்களைப் பஞ்சாயத்தாராக நியமித்தார்கள். அன்றியும் சின்னாட்சென்று மேற்படி இராசுமுதலியா ரவர்களுக்கு உதவியாக களப்பாள் S. இரங்கசாமி முதலியாரவர்களையும் பஞ்சாயத்தாராக நியமித்தார்கள்.

## வீரசேகர மகாமுனிவர் திருப்பணி.

வீரசேகர மகாமுனிவர்—இம்முனிவர் பெருமானார் 'அவனருளாலே யவன்றாள் வணங்கி' என மாணிக்கவாசக சுவாமிகளும், 'தவமுந் தவமுடையார்க்காகும்' என திருவள்ளுவ நாயனாரும் திருவாய் மலர்ந்தருளி யிருப்பதற்கேற்ப பூர்வ புண்ணிய மிகுதியினாலே இத்தலத்தைப்பற்றி

'தேவாரம், தலபுராணம்' முதலியவற்றிலுள்ள வைபவங்களை விபரமாக மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயர் விண்ணப்பஞ்செய்ததையும்; சுவாமிமலைக் கும்பாபிடேகத்தில் முற்கூறிய பூவனூர் இராசுமுதலியாரவர்கள் விண்ணப்பஞ் செய்ததையும் ஏற்றருளி, பிறவிப்பிணிக்கு அருமருந்தாகிய 'சரியை, கிரியை, யோகம், ஞானம்' என்பவற்றை ஆன்மாக்களுக்குச் சொல்லாமற் கிருபைசெய்யத் திருவுளங்கொண்டு, இத்தலத்துக்கு எழுந்தருளி, காட்டை அறவே களைந்து, வசந்த மண்டபத்தைப் புதுக்கி, அம்மண்டபத்துக்குள்ளே, எல்லா மூர்த்திகளையும் பாலத்தாபனஞ்செய்து, 'பெரிய கோபுரம், பெரிய மதில்' நீங்கலாக, மற்றைய பாகங்களெல்லாவற்றையும் இடித்து, கலாசோதனையின்றி 'சிவலிங்கப் பெருமான், சபாநாயகப்பெருமான், பரிவார தெய்வங்கள்' என்பவற்றிற்கு சிவபூசைத் திருப்பெட்டகம் போன்ற ஒரு திருக்கோயிலும், 'தேவியாருக்கு' விபூதிச்சம்புடம் போன்ற ஒரு திருக்கோயிலும், 'அணிவெட்டுக்கான் மண்டபம், சித்திரமண்டபம், சிறிய திருமதில், சிறிய கோபுரங்கள், நந்திமண்டபம்' என்பனவும் அமைத்தும்; 'பெரிய கோபுரம், பெரிய திருமதில்' என்பவற்றைப் புதுக்கியும்; நான்கு தீர்த்தங்களையும் வெட்டி, நான்கு வீதிக்குட்பட்டிருந்த 'ஓடை, குட்டை, நன்செய்' முதலிய நீர் நிலைகளைத் தூர்த்து, வீதிக்கொழுங்கினமாக இருந்த வீடுகளையிடித்து, கோபுரவாயிலில் சன்னிதி கோபுரங்கண்ட அகலமும், துருவாச தீர்த்தம் மேல்கரையில் வடக்குவீதி தெற்கு வீதிகண்ட நீளம் பதினெட்டு கெசம் அகலமும், துருவாச தீர்த்தம் வடகரை தென்கரைகளில் பத்து கெசம் அகலமும், கீழ வீதியைச் சாலையைவிட்டுப் பிரித்து துருவாச தீர்த்தங் கீழ்கரையில் முப்பத்தாறு கெசம் அகலமும், 'தெற்கு வீதி மேல வீதி வடக்கு வீதி' என்பவற்றை இருபத்து நாலு கெசம் அகலமும் வீதிகள் வைத்து அழகாக ஒழுங்கியும்; பிரமதீர்த்தங் கீழ்கரையில் தெற்கு வீதிக்கு வடபுறம் 'திரு நந்தனவனம்' ஏற்படுத்தியும்; கோபுர வாயிலில்–வடபுறம் 'பசுமடம், இருக்குவேதம்' என்பவற்றிற்கும், தென்புறம் 'எசுர்வேதம், சாமவேதம்' என்பவற்றிற்கும், துருவாச தீர்த்தம்–வடகரை

வீதியில் 'சாதுக்கள் மடம், சரசுவதிமால், அறுபத்துமூவரா தியோர் குருபூசைமடம்' என்பவற்றிற்கும், தென்கரை வீதியில் 'பூசகர், பரிசாரகர், கிராமக்கணக்குமணியம், உட்துறை மணியம்' என்போர் குடியிருப்பிற்கும், கீழ வீதியில் ஐந்து விமானங்கள் மகாரதங்கள் தங்குவதற்கும், அவ்விமானங்களின் 'வடக்கிலும், தெற்கிலும்' மகாரதங்களின் அலங்கார சாமான்கள் வைத்துக்கொள்வதற்கும் அழகிய கட்டிடங்களமைத்தும்; மேற்கண்ட 'ராம. ஆத. மெ. இராமசாமிசெட்டியாரவர்கள், ஆத. லெ. ஆத. ஆதப்பசெட்டியாரவர்கள்' என்பவர்களை 'பசுமடம், திரு நந்தனவனம்' தருமங்களை நடத்தவும், பழ.வெ.ராம. இராமநாதன் செட்டியாரவர்களை 'இருக்குவேதபாடசாலை' தருமத்தை நடத்தவும், ஆத. பழ. பழனியப்ப செட்டியாரவர்களை 'எசுர்வேதபாடசாலை' தருமத்தை நடத்தவுங் கட்டளையிட்டருளியும்; காரைக்குடி சா. நா. அ. அழ. அழகப்ப செட்டியாரவர்களைக் கொண்டு திருவாச தீர்த்தத்திற்கு நான்குபுறமும் மதிலெடுத்து படித்துறைகள் கட்டுவித்தும்; 'துவாரபாலகர், துவாரசத்தியர், வள்ளிதெய்வானை சமேத முருகர், இலக்குமி, சண்டேசுவரி, நவக்கிரகங்கள், சில நாயன்மார்கள்' முதலிய சிலாவிக்கிரகங்கள், 'சந்திரசேகரர், பள்ளியறைச் சொக்கர், திருவாசர்' முதலிய செப்பு விக்கிரகங்கள் என்பன செய்வித்தும்; 'கிரீடங்கள், கவசங்கள். பெரிய நாகாபரணக்கோளகை, கைத்தீவட்டிகள், புதிலிகள், காளாஞ்சிகள், பன்னீர்ச்சொம்புகள், சந்தனப்பேலாக்கள், அபிடேகக்கலயம், அரிக்கியவட்டகைகள், விபூதிமடல், தூபக்கால், தீபக்கால், அலங்காரதீபம், ஒருமுகக் கருப்பூரதீபம், இடபதீபம், கசதீபம், நாகதீபம், சிங்கதீபம், வியாக்ரதீபம், புருடதீபம், நட்சத்திர தீபம், கும்பதீபம், தீபதாம்பாளங்கள், சுருட்டி, குடை, கண்ணாடி, விசிறி, சாமரங்கள், ஏழுமுகக் கருப்பூரதீபம், கெண்டி, இடபதடிகள்' முதலிய வெள்ளிச்சாமான்கள், 'தங்கப்பூச்சுக் கிரீடங்கள், தங்கப்பூச்சுக் கவசங்கள்' முதலிய தங்கப்பூச்சுச் செப்புச் சாமான்கள், 'பெரிய குத்து விளக்குகள், சிறிய குத்துவிளக்குகள், வரிசன்மாலை விளக்குகள், நேத்திர விளக்குகள், இரண்டு சதை சோடசோபசார சாமான்கள், பூசை

மணிகள், கொத்து மணிகள், அபிடேக பாத்திரங்கள், ஆரா தனைப் பாத்திரங்கள், சமையற் பாத்திரங்கள்' முதலிய பித்தளைச் சாமான்கள், 'இரத்தினத் திருமங்கலியம், இரத்தின மகரிகள், இரத்தின மாலைகள், இரத்தினப்பதக்கங்கள், பட்டுக்கள்' முதலிய அலங்காரசாமான்கள் என்பனசெய்வித்தும்; "பவழக்காற் படிச்சட்டங்கள், சூரியப்பிரபை, சந்திரப் பிரபை, பூதன், பூதகி. நந்தி, அன்னம், பெருச்சாளி, மயில், இரு வெள்ளி யிடபங்கள், கற்பக விருட்சம், காமதேனு, யானை, பல்லக்கு, கயிலாயம், குதிரை, ஐந்து மகாரதங்கள்'' முதலிய வாகனாதிகள் பண்ணுவித்தும். மேற்படி மகா ரதங்களை "தேர்ச்சீலைகள், ஆலவட்டங்கள், சிற்றாலவட்டங்கள், சுருட்டிகள், பூச்செடிகள், கொடிகள், மகர தோரணங்கள், அசுமானகிரிகள், வாயிற்படி வளைவு கமான்கள், வாயின் மாலைகள், அசைந்தாடு மாலைகள், பெருச்சாளிகள், மயில்கள், இடபங்கள், துவாரபாலகர்கள், துவாரபாலகிகள், தேர்ப்பாகர்கள், யாளங்கள், பாம்பு யாளங்கள், குதிரைகள், செப்புச்சிகரங்கள், செப்புக்குடைகள்'' முதலியவைகளினால் அலங்காரஞ் செய்துவைத்தும்;கலி ஐயாயிரத்துப் பன்னிரண்டுக்குச் சரியான (கி. பி—1911) விரோதிகிருது வருடம் சித்திரைமாசம் குருவாரம் புனர்பூச நட்சத்திரங்கூடிய நற்றினத்தில் அட்டபந்தன மகா கும்பாபிடேகஞ் செய்வித்து, அன்றிரவில் "விநாயகக்கடவுளை பெருச்சாளியிலும், முருகக்கடவுளை மயிலிலும், 'சோமசுந்தரக்கடவுள் தனியம்பாள்' என்னும் மூர்த்தங்களை தனித்தனி வெள்ளி யிடபங்களில் தெரு நிறைந்த திருச்சப்பரத்திலும், சண்டேசுர நாயனாரை பவழக்காற்படிச் சட்டத்திலும்'' திருவீதிகளில் எழுந்தருளச் செய்தருளினர். அன்றியும், 'நந்திமண்டபம், பெரிய கோபுரம், வசந்தமண்டபம்' என்பவற்றி னிடையில் திருக்கல்யாணத் திருமண்டபம் அமைக்கவும்; 'கோபுரவாயில், வடக்குவீதி, கீழவீதி, தெற்குவீதி' என்பவற்றி னிடையிலுள்ள வீதிகளெல்லாந் தளவரிசைபோடவும்; திருவாச தீர்த்தம் மேல்கரை வீதியில் 'வடக்குவீதி தெற்கு வீதி' ஓரங்கள், மேற்படி தீர்த்தம்'வடகரை தென்கரை வீதிகளின் கிழக்கோடிகள் என்பவற்றில் இந்திரவிற்களமைத்து, வேற்

கம்பிக்கதவுகள் போடவும்; கீழவீதிக்கும், சாலைக்கும் நடுவில் தேர்நிலைகளைச் சுற்றித் தளவரிசைகள் போட்டு வேற்கம்பி வேலியடைக்கவும்; 'வடக்கு வீதி, தெற்கு வீதி' என்பவற்றின் கீழக்கோடிகள் 'சோமசுந்தரப்பெருமான், சுப்பிரமணியர்' தேர்நிலைகளிடைச் சந்நிதிவெளி என்னு மிடங்களில் இந்திரவிற்க ளமைக்கவும்; 'பிரமதீர்த்தம், உருத்திரதீர்த்தம், திருஞான தீர்த்தம்' என்பவற்றிற்கு படித்துறைகள் கட்டவும், மேற்படி தீர்த்தங்களுக்கு நீர் மேற்கிலிருந்து உருத்திர தீர்த்தத்தின் வழியாகக்கொண்டு, துருவாச தீர்த்தத்தின் வழியாக கிழக்கே வடியும்பொருட்டு, இருப்புக்குழாய்கள் போடவும்; வீதிகளில் நீர் தங்காமலிருக்கும்பொருட்டு, மண்ணடித்து நடுவில் மேடுண்டாக்கவும்; 'சாமவேத பாடசாலை, அதர்வணவேத பாடசாலை, ஆகமபாடசாலை, தேவாரபாடசாலை, அன்னசத்திரம்' முதலியன ஏற்படுத்தவும்; கோவிலுக்கு எக்காலமும் 'நித்திய நைமித்திகங்கள்' குறைவின்றி நடந்துவரும்பொருட்டு, அவற்றிற்கு வேண்டிய நிலங்கள் வாங்கிவைக்கவுந் திருவுளங்கொண்டு விளங்கியருளினார்.

தஞ்சாவூர் சர்க்கிள் தேவத்தானங் கமிட்டி மெம்பர்களிலே யொருவராயிருந்த, கோட்டூர் K. திருவேங்கட முதலியாரவர்கள் இக்கோவிலை நன்னிலைமைக்குக் கொண்டுவரும்பொருட்டு, பெரும் முயற்சிகொண்டு முன்னர் பூவனூர் இராசு முதலியாரவர்களையும், பின்னர் களப்பாள் S. இரங்கசாமி முதலியாரவர்களையும் பஞ்சாயத்தார்களாக நியமித்து, திருப்பணியில் தமது பண்ணையாட்களை வைத்துக்கொண்டு கூட விருந்து வேண்டிய வுதவிசெய்து, பூராத் திருப்பணிகளையும் மிகக் கவனித்து, மிக்க பேரன்போடு நடாத்தி, கடைசியாக பிரகாரந் தளவரிசை போட்டு முடித்துவிட்டு பெரிய திருக்கோபுரவாயிலில் வந்து நின்று, எனக்குக் கொடுத்த வேலையை முடித்துவிட்டேன் என்பதற் கறிகுறியாகவும், இன்றோடு என்னுடைய வாழ்நாள் முடிவாயிற்று என்பதற் கறிகுறியாகவும் இருச்சொல் அலங்காரமாக 'இன்றோடு என் வேலை முடிந்துவிட்டது' என்று திருவாய்மொழிந்தருளி, தமது சாலைக்குச் சென்று, நல்லுணவருந்தித் துயின்று, சோதியுட்கலந்தருளினார்.

மேற்படி வீரசேகரமகாமுனிவர் கும்பாபிடேகஞ் செய்த பின்னர் இருபத்தைந்தாநாள்மண்டலாபிடேகத்தைப்பூர்த்தி செய்து, வைகாசிமாசம் பூர்வபக்கம் புனர்பூச நட்சத்திரத்தில் இடபக்கொடி யேற்றி 'விநாயகர், முருகர், சோமசுந்தரப்பெருமான், நிறைதவஞ்செய்த நாச்சியார், சண்டேசுர நாயனர்' என்னும் மூர்த்திகளை 'முதல்நாள்—பவழக்காற் படிச்சட்டங்கள்; இரண்டா நாள்—சூரியப் பிரபை சந்திரப்பிரபை, பவழக்காற்படிச்சட்டங்கள்; மூன்று நாள்—பூதன், பூதகி, பவழக்காற் படிச்சட்டங்கள்; நான்காநாள்—நந்தி, அன்னம், பவழக்காற்படிச்சட்டங்கள்; ஐந்தா நாள்—திருச்சப்பரத்தில் இரண்டு வெள்ளி இடபங்கள். பெருச்சாளி, மயில், பவழக்காற் படிச்சட்டம்; ஆறு நாள்—கற்பக விருட்சம் காமதேனு, பவழக்காற்படிச்சட்டங்கள்; ஏழா நாள்—"திருக்கல்யாணம்" யானை, புட்பப்பல்லக்கு, பவழக்காற்படிச்சட்டங்கள்; எட்டா நாள்—கயிலாயபருப்பதம், குதிரை, பவழக்காற்படிச்சட்டங்கள்; ஒன்பதாநாள்—மகாரதங்கள்' என்பவைகளில் வீதிகளில் எழுந்தருளப் பண்ணியருளினர். ஒன்பதாநாள் பெரிய மகாரதம் கீழவீதியிலேயே நின்று விட்டது; பத்தாநாள் விசாகத்தில் 'சோமசுந்தரக்கடவுள்' எழுந்தருளியிருந்த மேற்படி மகாரதம் தெற்கு வீதி (பிரமதீர்த்தக்கரை)யிலே போகும்போது அம்மகாரதத்திற்கு வலப்புறத்திலே மகாதேவா! மகாதேவா!! மகாதேவா!!! வேனத் தற்போதமிழந்து, ஆனந்தக்கூத்தாடிக் கொண்டுவந்த, 'வீரசேகர மகாமுனிவர்' சபாநாயகப் பெருமானுடைய திருச்சன்னிதிக்கெதிரிலே இருகரங்களையுஞ் சிரமேற்குவித்து 'மகாதேவா! மகாதேவா!! வேனக்கூவி சோமசுந்தரக் கடவுளுடைய சோதி சொருபத்திலே கலந்தருளினர்.

இவ்வாறு முருகக்கடவுளாகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் சோதியுட்கலந்த வைகாசி மாசத்திலே, முருகக்கடவுள் திருவவதாரஞ்செய்தருளிய விசாகநட்சத்திரத்திலே, திருத்தேர் போகும்போது அதன் வலப்புறத்திலே, சபாநாயகப்பெருமானுடைய திருச்சன்னிதியிலே, மகாதேவா! மகாதேவா!! வேனப் பன்முறை கூவிக்கொண்டு, சோமசுந்தரப்பெருமா

னுடைய சோதியுட்கலந்து, பிறவாப் பெருவாழ் வெய்தியது, அரிதினுமரிதேயாகும். முன்னோர்களெழுதிய எந்நூற்களினும், இப்பேற்றுக்கோப்பாகிய பேறு காணப்பெறுமையால், இப் பேறே ஒப்புயர்வற்ற நற்பேறென்பதூஉம்; இம்முனிவரே எம் முனிவர்களினுஞ் சிறந்த சைவசமய நன்முனிவரென்பதூஉம் சொல்லாமலே விளங்கும். இம்மகாமுனிவருடைய சிலா திரு வுருவத்தை சபாநாயகப்பெருமானுடைய திருச்சன்னிதியிலே, சோமசுந்தரப் பெருமானுடைய வலப்பாகத்திலே, துருவாச முனிவருக்கு இடப்புறத்திலே பிரதிட்டைசெய்வது முற்கூறிய பேற்றுக்குத் தக்க சான்றாகும். இப்பிரதிட்டை செய்வோர் பெரும்பேற்றை எளிதிலடைவர்.

இம்முனிவர் பெருமானர் 'பாண்டிநாட்டிலே, புது வயல் நகரத்திலே, இருப்பைக்குடிக்கோயில் வணிகர் மர பிலே, கலி நாலாயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தொன் பதிலே, வெ. அருணசலச் செட்டியாருக்கு உமையம்மை யார் திருவயிற்றிலே, திருப்பெருந்தவத் திருக்குமாரராய்த் திருவவதாரஞ்செய்தருளியவர். இம்முனிவர் பெருந்தகை யார் தொண்ணூற்றாறு திரு நகரங்களிலுமுள்ள, நகர வணி கக் கனதனவான்களுடைய புண்ணியங்க ளனைத்தும் ஓருரு வாய்த் தோன்றியவரெனினும் மிகையாகாது. இந்நற்றவ முனிவர் சிற்றின்பப் பேய் சிறிது மணுகப்பெறாதவர்; பிரம சாரியாகவே பால்யத்தில் அகத்துறவும், பத்தொன்பதா மாண்டில் புறத்துறவும் பூண்டவர்; முப்பத்தாறும் வயது முதல் இருபத்தொன்பதுவருடங் கோவிலூரில் குருமூர்த்த மாய் விளங்கியருளியவர்; கோவிலூரைக் கோயிலூராகவும், திருக்களரைச் திருக்களரியாகவுஞ் செய்வித்த சிவயோகத் தவமுனிவர். இப்பெருந்தவமுனிவர் எய்துதற்கரிய பெரும் பேறெய்தியது, நகர வணிகக் கனதனவான்களுடைய மர புக்கும், கோவிலூர்ப் பரம்பரைக்கும் உலகமுள்ளளவும் 'பெரும்புகழும், புண்ணியமும், தவமும், ஞானமும், பேறு' மாகும். இம் முனிவர்சிரோன்மணியாகிய சைவசமயத் தவ முனிவருக்கு பெறுதற்கரிய பெரும்பேறளித்தருளிய 'திருக் களர்த் திருஞானத் திருவருட்பெருந்திருக்கோயிலை' 'நினைக்கப்

பெறுதமனம்' மாயையேயாகும்; 'காணப்பெறுத கண்கள்' புண்களேயாகும்; 'துதிக்கப்பெறுத வாய்' ஊத்தை நிறைந்த, நாற்றமிகுந்த ஊமைவாயேயாகும்; 'வணங்கப்பெறுத தலை' நகுவேண்டலையேயாகும்; 'தொழப்பெறுத கைகள்' சோர்ந்த கைகளேயாகும்; 'வலம் வரப்பெறுத கால்கள்' வாதக்கால்களேயாகும்.

ஆன்மாக்கள் வீரசேகரமகாமுனிவர் திருப்பணிசெய்து, வைகாசி விசாகப்பிரமோற்சவம் நடத்தி முத்திபெற்றருளிய வைபவத்தை உணர்ந்துய்யும் பொருட்டு, வைகாசி மாசம் பூர்வபக்கம் புனர்பூச நட்சத்திரத்தில் அம்மகாமுனிவருடைய செப்புத் திருவுருவத்தை யெழுந்தருளப்பண்ணி வைத்துக்கொண்டு அவர் நடத்துவதுபோல 'விநாயகர், முருகர், சோமசுந்தரப்பெருமான், நிறைதவஞ்செய்த நாச்சியார், சண்டேசுரநாயனுர்' என்னும் மூர்த்தங்களை யெழுந்தருளப்பண்ணி இடபக்கொடியேற்றி, பிரதிதினமும் 'காலை, மாலை' இரண்டுவேளைகளிலும் அம்முனிவரோடு மேற்படி மூர்த்தங்களை வீதிகளில் எழுந்தருளப்பண்ணி, ஒன்பதாநாள்—'சோமசுந்தரக் கடவுள்' எழுந்தருளி யிருக்கின்ற மகாரதம் போகும்போது, அம்மகாமுனிவரை யெழுந்தருளப்பண்ணி அம்மகாரதத்திற்கு வலப்புறத்தோடு 'மகாதேவா! மகாதேவா!!' என்னும் உச்சரிப்புடன் கொண்டுபோய், தெற்குவீதியிலே, பிரமதீர்த்தக்கரையிலே, சபாநாயகப்பெருமான் சந்நிதியிலே, மகாரதத்தை நிறுத்தி, அம்முனிவர் பெருமானுர் சோமசுந்தரக் கடவுளுடைய சோதிசொரூபத்திற் கலந்தருளிய வைபவத்தை நடத்தி, பத்தாநாள்—விசாக நட்சத்திரத்தில் துருவாச தீர்த்தோற்சவமும்; அப்பெருந் தவமுனிவருடைய குருபூசை மகோற்சவமும் நடத்துவது பெருந்தவமும் பெரும்பேறுமாகும்.

துருவாசமுனிவர் சித்திரைமாசம் பூர்வபக்கம் மிருகசிரிட நட்சத்திரத்தில் இடபக்கொடியேற்றமும், அத்தநட்சத்திரத்தில் மகாரதமும், சித்திரை நட்சத்திரத்தில் தீர்த்தமுமாக பத்துநாள் நடாத்திய பிரமோற்சவத்தை நடத்தி, அவ்வுற்சவத்தில் எழுந்தருளப்பண்ணவேண்டிய துருவாசமகாமுனி

வரை யெழுந்தருளப்பண்ணமல், ஒன்பதா நாள்—பெரிய மகாரதத்தை தெற்கு வீதியில் நிறுத்தி, வீரசேகரமகா முனிவரை யெழுந்தருளப்பண்ணி, அவர் முத்திபெற்றரு ளிய வைபவத்தை நடத்துவது 'உண்மைக்கு மாறுயும், இகழ்ச்சிக்கிடமாயும், பொய்மையைப் புலப்படுத்துவதாயு' மிருக்கிறது. இந்த நிலைமையில் கோட்டையூர் க. வீ. சொ. வீ. அழகப்பசெட்டியாரவர்கள் மடத்துப் பிரதிநிதியாக கோவிலுக்குப் பஞ்சாயத்தாராக வருவதற்கு முன் இரண்டு பிரமோற்சவங்களும், வந்தபின் தொடர்ச்சியாக இரண்டு பிரமோற்சவங்களும் நின்றுவிட்டன. இந்நான்கு வருடங் களிலும் வீரசேகர மகாமுனிவர் முத்திபெற்ற வைபவம் நடைபெறவில்லை. துருவாசமுனிவர் நடத்திய சித்திரைப் பிரமோற்சவம் நடைபெறும்போது அம்முனிவரை யெழுந் தருளப் பண்ணுதிருப்பதும்; வீரசேகரமகாமுனிவர் நடத் திய வைசாகப் பிரமோற்சவத்தை நிறுத்தி, சித்திரைப் பிர மோற்சவத்தில் வீரசேகர மகாமுனிவர் முத்தி பெற்றது போல நடத்துவதும்; பிரமோற்சவம் நடைபெறுத வருடங் களில் வீரசேகர மகாமுனிவர் முத்திபெற்ற வைபவத்தை நிறுத்துவதும் அழகாகுமா? இதனல் வீரசேகரமகாமுனிவ ருடைய மரபோர்களாகிய நகர வணிகக் கனதனவான்களும் கோவிலூர்ப் பரம்பரையோர்களாகிய துறவோர்களும் குரு பத்தியிற் சிறந்தவர்களென்பது நன்கு விளங்கும்.

திருப்பணித் திருத்தொண்டே திருவுருவாய்த் தோன்றிய திருப்பூவனூர் இராசுமுதலியாரவர்களும், தேவியார் திருக்கவச வெள்ளித் திருவாபரணத் திருத்தொண்டராகிய திருக்களந்தை S. இரங்கசாமி முதலியாரவர்களும் வீரசேகர மகாமுனிவ ருடைய திருநோக்கம்போல் திருப்பணித்திருத்தொண்டுகளெல் லாவற்றையும், இராப்பகல் நித்திரையின்றி 'மனம், வாக்கு, காயம' என்னும் முக்கரணங்களினலும், இடையரு முயற்சி யோடு செய்து முடித்துக் கும்பாபிடேகம் செய்வித்த திறமும்; அன்போடு வைசாகப் பிரமோற்சவம் நடத்தி, பத்தி சிரத்தை யோடு அம்மகாமுனிவரைச் சமாதுவைத்த அழகும்; பின்னுஞ் சிலவருடங்கள் கோவிலைப் பரிபாலனம் பண்ணிய பத்தியும் போற்றற்குரியதே யாகும்.

தஞ்சாவூர் சர்க்கிள் தேவத்தானங் கமிட்டியாரவர்களுக்கு, மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயர் விடாமுயற்சியோடு எண்ணிறந்த 'மகசர் மனுக்கள்' எழுதாதிருந்தாலும்; 'தஞ்சை யதார்த்தவசனி' பத்திராதிபர் அருண்மிகு V. கோவிந்தசாமி பிள்ளையவர்களும், 'நாகை நீலலோசனி' பத்திராதிபர் கிருபாநிதி G. சதாசிவம் பிள்ளையவர்களும் தங்கள் பத்திரிகைகளின் வாயிலாக மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயர் ஒய்வின்றி எழுதிய நிருபங்களெல்லாவற்றையும் வெளியிடாதிருந்தாலும்; மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயர் 'சிலாசாதனம், செப்பேட்டுச்சாதனம், தலபுராணம், தேவாரம்' முதலியவற்றைத் தேடிக் கண்டுபிடித்து, அச்சிற்பதிப்பித்துக் கொண்டுபோய், கோவிலூரில் குரு மூர்த்தமாய் விளங்கிய வீரசேகர மகாமுனிவரிடத்திலும், தொண்ணூற்றுறு நகரங்களிலுமுள்ள வணிகக் கனதனவான்களிடத்திலுங் கொடுத்து, விண்ணப்பஞ்செய்யாதிருந்தாலும்; தஞ்சாவூர் சர்க்கிள் தேவத்தானங் கமிட்டியில் கருணாநிதியாகிய P. R. நடேச ஐயரவர்கள், தலைமைப்பதவி வகிக்காதிருந்தாலும்; மேற்படி 'P. R. நடேச ஐயரவர்கள், சிவநேயத் திருச்செல்வர் V. அப்பாசாமி வாண்டையாரவர்கள், திருவளர் திருவாளர் K. திருவேங்கட முதலியாரவர்கள், அருண்மிகு சாம்பமூர்த்தி ராயரவர்கள்' என்னும் நான்கு மெம்பர்களும் ஏகமனதாய், சிவநேயத் திருத்தொண்டராகிய பூவனூர் இராசுமுதலியாரவர்களைப் பஞ்சாயத்தாராக நியமிக்காதிருந்தாலும், வீரசேகரமகாமுனிவர் இத்தலத்துக்கெழுந்தருளாதிருந்தாலுங் கோவில் காடு மூடியபடியே இன்றும் பெருங்காடாகவே இருக்குமென்பதிற் சிறிதுஞ் சந்தேகமில்லை.

வீரசேகர மகாமுனிவர் திருப்பணி ஆரம்பித்தவுடன் மிக்க அன்போடு மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயருக்கு திருவாசக மகாமுனிவர் திருவுருவத்திற்கு செம்பு தயார்செய்யவும், சந்நிதிகளிலே சாம்பிராணித்தூபம்போடவுங் கட்டளையிட்டருளினர். மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயர் அவ்வுத்தரவைச் சிரமேற்றாங்கி, நாற்றைம்

பது சேர் செம்பு தயார்செய்து கொடுத்தது மன்னியில் "அடைந்தார்க்கருள்செய்தநாயனுர், சபாநாயகப்பெருமான், இளங்கொம்பன்னுள்' சந்நிதிகளிலே நாள்தோறும் சாம்பிராணித்தூபமிட்டு வந்தார். வீரசேகரமகாமுனிவர் முத்தி பெற்றபின்னர் அவருடைய திருச்சந்நிதியிலும் சாம்பிராணித்தூபமிட்டு வந்தார். ஒருநாள் சில சந்நியாசிகள் வீரசேகரமகாமுனிவருடைய திருச்சந்நிதியிலே சாம்பிராணித்தூபம் போடக் கூடாதென்று கண்டனஞ் செய்தார்கள். அன்றுமுதல் சாம்பிராணித்தூப கைங்கரியத்தை நிறுத்திவிட்டார். திருப்பணிக்குமுன் கோவில் நிலத்தில் மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயர் சொந்தத்தில் இரண்டு கட்டிடங்கள் கட்டியிருந்தார். திருப்பணி ஆரம்பித்தவுடன் மேற்படி கட்டிடங்களிரண்டையும் எவ்வித பிரயோசனமுங் கருதாமல் பிரித்துக் காலிசெய்து கொடுத்தார். வீரசேகர மகாமுனிவர் மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயருக்கு மண்டப வீடு கட்டிக்கொடுக்க எத்தனப்பட்டதை அவர் தெரிந்துகொண்டு, அம்மகாமுனிவரை வணங்கி, மண்டப வீட்டுக்குச் செலவாகும்பொருளைத் திருப்பணிக்குச் செலவு செய்யும்படி கேட்டுக்கொண்டு, தன் சொந்த மனைக்கட்டில் கூரைவீடு கட்டினுர். வீரசேகரமகாமுனிவர் அவ்வீட்டிற்குள் எழுந்தருளி சிறிதுநேரம் உரலின்மீது வீற்றிருந்தருளினுர். அம்முனிவர் முத்திபெற்றருளிய பின்பு, அவருக்கு திரு நந்தனவனம் போடவேண்டியதற்காக மேற்படி மனைக்கட்டைக் கிரயத்துக்குக்கேட்டார்கள். மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயர் மேற்படி மனைக்கட்டு சாலைமார்க்கத்தில் வியாபாரத்திற்கு ஏற்றதா யிருப்பதையும் தான் வீடுகட்டிக் குடியிருந்து வருவதையுங் கருதாதவராய், தான் வீடுகட்டும் போது அவ்வீட்டில் வீரசேகரமகாமுனிவர் எழுந்தருளியது, இம்மனைக்கட்டு எம்முடைய திரு நந்தனவனத்திற்கு வேண்டியிருக்குமென்பதை யுணர்த்தும்பொருட்டு, எழுந்தருளியதாகக் கருதி, உடனே வீட்டைப்பிரித்துக் காலிசெய்து, திருநந்தனவன வுபயோகத்துக்காக களப்பாள் S. இரங்கசாமி முதலியாரவர்களுடைய நன்செய் நிலத்தில் பரிவர்த்தனை வாங்கிக்கொண்டு கொடுத்துவிட்டு, 'தெற்குமதில், பிரம

தீர்த்தம், தெற்குவீதி, உருத்திர தீர்த்தம்' என்பவற்றினிடையில், 'நீர் நிலையென்றாவது, புன்செய் என்றாவது' சொல்லக்கூடாத நிலைமையிலிருந்த, தேவாதாயப் புறம்போக்குப் பள்ளத்திற்கு கோவிலுக்கு வருடம் ஒன்றுக்கு ரூபா 3 கொடுப்பதாக வருடம் 45-க்குப் பகுதிப்பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டு, ரூபா 200-செலவிட்டு மேற்படிப் பள்ளத்தைத் தூர்த்துத் தெங்குவைத்துப் பயிராக்கி, வீடுகட்டிக் குடியிருந்து வருகின்றார். மேற்படி வீடுகட்டிச் சிலவருடஞ் சென்றபின்பு 1916-ம் வருடத்தில் (ரீசர்வேயில்) 'தேவாதாயப்புறம்போக்கு' என்பதை மாற்றி கோவிலுக்குப் பட்டாச் செய்யப்பட்டிருக்கிறது. மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயர் 'பரிவர்த்தனை வாங்கிய நன்செயும், கிரயத்துக்கு வாங்கிய நன்செயு'மாகிய நிலம் மா 4-க்கு வருடம் ஒன்றுக்கு நெற் கலம் (80) வரும்படி வந்துகொண்டிருந்தது. வீரசேகர மகாமுனிவருடைய திருக்கோயிலுக்கும் நன்செய் நிலத்துக்கும் பக்கத்தில் மேற்படி நான்கு மா நிலமுமிருந்த காரணத்தினால் பக்கத்தில் கேட்ட விலைக்கு ரூபா 100-தள்ளுபடி செய்து, அம்மகாமுனிவருடைய பூசைக்குக் கிரயசாசனஞ் செய்து கொடுத்தார். இந்த உண்மைகளெல்லாம் வீரசேகர மகாமுனிவருக்குத்தான் தெரியும். மற்றையோர் தெரிந்து கொள்ளக் கூடியவைகளல்ல.

மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயர் "தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா திருப்பல்லாண்டு, திருமந்திரம். பதினொராந்திருமுறை நாற்பது பிரபந்தங்கள், 'பெரியபுராணம்' என்னும் திருத்தொண்டர் புராணம்'' என்பனவாகிய பன்னிரு திருமுறைகளையும்; திருப்புகழ் கஉசஎ-பாடல்களையும் ஆராய்ந்துகொண்டு, வடக்கு இமயமலையையும், கிழக்கு தெற்கு மேற்கு கடலையும் எல்லைகளாகக்கொண்ட இவ்வுலகிலே ஐயாண்டு யாத்திரைசெய்து, ஆங்காங்குள்ள 'சிலாசாதனம், செப்பேட்டுச்சாதனம்' என்பவற்றை ஆராய்ந்து 'தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, சேத்திரத்திருவெண்பா, திருப்புகழ்' முதலிய தமிழ்ப்பாசுரங்கள் பெற்ற எண்ணூறு திருக்கோ

யில்களைத் தரிசனஞ்செய்து, அக்கோயில்களின் வைபவங்களையும், அவற்றின் நிலைமைகளையும், அவற்றிற்குப்போகும் மார்க்கங்களையும், அவற்றைத் திருப்பணி செய்தவர்களின் பெயர் முதலிய விபரங்களையும் புத்தகமாக்கிப் பொருளின்மையால் அச்சிற்பதிக்காமல் வைத்திருக்கின்றார். அன்றியும் "திருக்களர்ப்புராணம், திருக்களர்ச் சாரசங்கிரகம், திருக்களர்ப்புராணம் இரண்டாம்பதிப்பு, திருக்களர் விளக்கம், திருக்களர்விளக்கம் 2,3,4-பாகங்கள் அநுபந்தம், திருக்களர் வீரசேகர ஞானதேசிகர் சரித்திரம், களப்பாள் கசேந்திர வரதர்புராணம், களப்பாள் சிவட்சேத்திரவிளக்கம், திருச்சிற்றேமம் சிவட்சேத்திரவிளக்கம், திருவிடும்பாவனம் சிவட்சேத்திர விளக்கம் 'பசுமகிமை விபூதிமகிமை உருத்திராக்க மகிமை' என்பன வடங்கிய முப்பொருள் விளக்கம், திருக்கோட்டூர்ப்புராணம், 'பசு மகிமை விபூதி மகிமை உருத்திராக்கமகிமை பஞ்சாக்கர மகிமை' என்பன வடங்கிய நாற்பொருள் விளக்கம், திருவிடைவாய் கல்வெட்டினின்று 1917-ம் வருடங் கண்டுபிடித்தது திரு ஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாய்மலர்ந்தருளிய திருவிடை-வாய்த் தேவாரம், சைவசமயமும் தமிழ்ப்பாடையும், சூரியகுலக்கள்ளர் சரித்திரம், செந்தமிழாரம்பப்போதனமுறை" என்னும் புத்தகங்களை அச்சிற்பதிப்பித்து பலருக்கும் இனமாகக்கொடுத்தார். 'கள்வர்கோமான்' என்னும் பத்திரிகையும் நடத்தினார்.

பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லைப் பிறந்து மண்மே
லிறக்கும் பொழுது கொடுபோவதில்லை யிடைநடுவிற்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்றந்ததென்று கொடுக்கறியா
திறக்குங் குலாமருக் கென்சொல்லுவேன் கச்சி யேகம்பனே.

என்னும் பாடலின் கருத்தையே கைக்கொண்டவர். நடராசப்பெருமானையே பொருளாகக்கொண்டவர். இவருடைய எண்ணங்களெல்லா வற்றையும் சபாநாயகப் பெருமானே நிறைவேற்றிவைக்கின்றார். இவர் கருதியபடியே இத்தலத்தில் கோவில் திருப்பணி நடந்ததும்; 'வேதபாராயணம், தேவாரபாராயணம்' நிறைந்ததும்; 'மடம், குருபூசை மடம், பசுமடம், திருநந்தனவனம்' ஏற்பட்டதும்; கல்வியபிவிருத்தி

யடைந்ததும்; திருடர்கள் வமிசமழிந்ததும்; 'சிவத்துரோகிகள், குருத்துரோகிகள்' ஒழிந்ததும்; பாவிகள் பறந்ததும் தக்கசான்றாகும். 1906-ம் வருடம்முதல் 'நீதிநிறைந்தவர்களும்; சிவபத்தியிற் சிறந்தவர்களும்; பாவத்துக்குப் பயந்தவர்களும்; மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயரின் நிலைமையை நன்குணர்ந்தவர்களும்' கோவிலைப் பரிபாலனம் பண்ணினார்கள். தற்காலத்தில் 'பொறாமை நிறைந்தவர்களும், பொய்வேடம் பூண்டவர்களும், பாவத்துக்குப் பயப்படாதவர்களும் பரிபாலனம்பண்ண வந்திருக்கின்றார்கள். மேற்படி சுவாமிநாத உபாத்தியாயர் வீடுகட்டிக் குடியிருந்து வருகிற தேவாதாயப் புறம்போக்குப் புன்செய்க்காக வருடம் ஒன்றுக்கு ரூபா 3-வீதம் பகுதிப்பத்திரம் பிறந்த தேதி முதல் கொடுத்ததை அப்போதிருந்த பஞ்சாயத்தார்கள் பெற்றுக்கொள்ள மாட்டோமென்று சொல்லியது மன்னியில் தேர் நிலைகளுக்குத் தென்புறமிருக்கிற கட்டிடத்தின் கீழ்புறம் தெற்குக் கடைசியில் பகுதியின்றிப் பள்ளிக்கூடம் வைத்துக்கொள்ள அநுமதிகொடுத்தார்கள். அந்தப்படியே பகுதியில்லாமல் மேற்படி கட்டிடம் இடிந்து விழுகிறவரையில் பள்ளிக்கூடம் வைத்துக்கொண்டிருந்தார். இவர் பெயரால் கோவிலில் எவ்விதக் கணக்கும், பாக்கியுமில்லை. பகுதிப்பத்திரம் எழுதி வாங்கியவர்கள் கணக்கில் எழுதாமலும் வசூல் செய்யாமலு மிருந்த காரணம் அறிவாளர்களுக்கு விளங்காமற் போகாது.

மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயரால் "கோவில் சம்பந்தமாக 1898-ம் வருட முதல் 1935-ம் வருடமாகிய இன்று வரையில் 'மகசர் மனுக்கள்' எழுதல்; பத்திரிகைகளுக்கெழுதல்; 'தலபுராணம்' முதலிய பலவிதப் புத்தகங்களெழுதி அச்சிற் பதிப்பித்தல். அப்புத்தகங்களை உலகிலெங்கும் பரவச்செய்தல்; 'காரைக்குடி, கோவிலூர், தஞ்சாவூர்' முதலியவூர்களுக்கு எண்ணிறந்தநடை போய்வருதல்; சபாநாயகப்பெருமான் சன்னிதியிலே பிரசன்ன வடம் தைத்துப்போடுதல்; கார்த்திகைமாசம் ஞாயிற்றுக்கிழமைகளில் திருஞான தீர்த்தோற்சவம் ஆரம்பித்து சில வருடங்

கள் நடத்திக் காட்டுதல்; சித்திரைப்பூரணையில் முப்பத்தாறு வகைக் காவடிகள் கட்டி முருகக்கடவுளுக்கு அபிடேகாதிகள் செய்து காண்பித்தல்; அன்றையதினம் எண்ணிறந்த சிவவேடம் பூண்ட மெய்யடியார்களாகிய பெரியோர்களை வரவழைத்து, மகேசுவர பூசைசெய்து, வத்திரங்கொடுத்து, வரப்போகச் செலவுக்குக்கொடுத்தனுப்புதல்; திருக்கார்த்திகைச் சோதித்தீபோற்சவம் சில வருடங்கள் நடத்தல்; மார்கழி மாசம் பூர்வபக்கஞ் சட்டித்திதியுஞ் சதைய நட்சத்திரமுங் கூடிய புண்ணிய தினத்தில் முருகக்கடவுள் துருவாசராதி கந்தமாதனத்து அறுபதினாயிர முனிவர்களுக்கு பஞ்சாக்கர வுபதேசஞ் செய்த வைபவத்தைச் சில வருடங்கள் நடத்திக் காண்பித்தல்; மாசிமாசம் பூரணையில் சபாநாயகப்பெருமான் ஆனந்ததாண்டவம் ஆரம்பித்தருளியதைச் சில வருடங்கள் நடத்திக் காண்பித்தல்; துருவாச மகாமுனிவர் திருவுருவத்துக்குச் செம்பு வாங்கிக் கொடுத்தல்; 'சபாநாயகப்பெருமான், அடைந்தார்க்கருள் செய்த நாயனார், அழகேசுவரியம்பாள்' முதலிய திருச்சன்னிதிகளில் சில வருடங்கள் சாம்பிராணித் தூபமிடுதல்; பிரமாதீச வருடம் வைகாசி மாசம் 'மனம், வாக்கு, காயம்' என்னும் முக்கரணங்களினாலும் பெரும் முயற்சி செய்து இலட்சதீபம் போடுதல்; மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயருடைய குடும்பத்திலேயே யிருக்கின்றவரும், அவருடைய மருமகனுமாகிய ராம. கண்ணுசாமி வாண்டையாரால் முருகக்கடவுளுக்கு பத்து வருடம் கார்த்திகை நட்சத்திரந்தோறும் ரூபா 1—8—0 செலவிட்டு ஆயிரத்தெட்டுத் திருநாம அருச்சனை செய்வித்தல்; பிரதி வருடத்திலும் அமாவாசைக்கு முன் வரும் பிரதோடத்தில் ரூபா 2-8-0 செலவிட்டுப் பிரதோட நாதரை எழுந்தருளப்பண்ணுதல்'' முதலிய திருத்தொண்டுகளினாலே செலவான ரூபாயை விருத்திப்பண்ணி நிலம் வாங்குகிறதாயிருந்தால் பத்துவேலி நிலத்துக்குக் குறையாமல் வாங்கியிருக்கக்கூடும். கடவுள் தரும வழியினாலே கொடுத்தருளும் பொருளை

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லொன்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை.

என்னுந் திருவள்ளுவர் திருவாக்குக் கேற்ப செலவுசெய்யப் படுகிறது. இதனை நன்குணராத சில அறிவிலிகள் பகுதிப் பணங் கொடுக்கவில்லையென்று கூறுகின்றார்களாம். 'கோவி லில் கணக்கிருக்கிறதா? பாக்கி யெவ்வளவு' என்று கேட் டால் அது தெரியாதாம். பகுதி கொடுக்கவில்லை யென்று மாத்திரஞ் சொல்லுவார்களாம். மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயருடைய குடும்பத்தினின்று முன்னிருந்த பஞ்சாயத்தார்கள் பகுதிப்பணம் பெற்றுக்கொள்ளாத கார ணத்தினல், கோவிலுக்கு பிரதிவருடத்திலும் அமாவாசிக்கு முன் வரும் பிரதோடம் பன்னிரண்டுக்கு ரூபா 30—0—0 செலவாகின்றது. கோவிலுக்கு ஒன்றுக்கு பத்து வீதம் வரவு வரும்போது, பகுதிப்பணங் கொடுக்கவில்லையென்று சொல்வது என்ன அறியாமையோ தெரியவில்லை. மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயர் மத்தியானப் பறைப்பெண் ணுக்கும் யாதவ ஆணுக்கும் பிறந்த சிவத்துரோகியைப் போன்றவரல்ல வென்பதை யுணர்வார்களாக.

## யுவ சித்திரையுற்சவ மகிமை.

இவ்வுற்சவ சம்பந்தமாக பவ. ௵ பங்குனி௴ 20-உ மன்னார்குடி பாரதி பிரசில் பதிப்பித்து வெளிவந்த மகோற் சவ பத்திரிகையில் 'ஸ்ரீ கோவிலூர் மடாலயம் மகாதேவ ஞானதேசிகர், கோட்டையூர் க. வீ. சோ. வீ. அழகப்பசெட்டி யார்' என்று கையொப்பமிட்டிருக்கின்றன. மேற்படி பத் திரிகையில் தேவியார்பெயர் 'அமிர்தவல்லி' என்றிருக்கிறது; தலபுராணம் ௩-ம் பாடலில் 'அமுதவல்லி' என்றிருக்கிறது. 'அமிர்தவல்லி' என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. 'அமுதவல்லி' என்பதும் 'அமிர்தவல்லி' என்பதும் ஒரே பெயரென்று சொல்ல சிலர் முன்வரலாம். ஆனல் 'அருண கிரி' என்பதும், 'சோணகிரி' என்பதும் ஒன்றே; 'அருண கிரியார்' பாடிய திருப்புகழ்ப் பாடல்களை, 'சோணகிரியார்' பாடியதென்றால் 'உலகம்' ஒப்புக்கொள்ளுமா? 'சுந்தரம்' என்பதும், 'சௌந்தரம்' என்பதும் ஒன்றே; 'சுந்தர பண் டாரம்' என்னும் பெயரை 'சௌந்தர பண்டாரம்' என்று

எழுதினுல் அவர் ஒப்புக்கொள்ளுவாரா? 'சிதம்பரம்' என்பதும், 'சிற்றம்பலம்' என்பதும் ஒன்றே; 'சிதம்பர தேசிகர்' என்னும் பெயரை 'சிற்றம்பல தேசிகர்' என்று எழுதினுல் ஒப்புக்கொள்ளுவார்களா? 'அழகப்ப செட்டியார்' என்பதை 'அழகு செட்டியார்' என்று எழுதினுல் செட்டியார் ஒப்புக்கொள்ளுவாரா? தேவியார் பெயரைச் செவ்வையாகத் தெரிந்துகொள்ளாதவர்கள் கோவிலை யெப்படிக் கவனிக்கிருர்களோ! அது கடவுளுக்குத்தான்தெரியும். வலம்புரி விநாயகர் காப்புச்செய்யுள் தலபுராணத்தில்

மாமலர்க் கோதை நாளு மகிழ்திருக் களருள் வைகுந்
தேமல ரிதழி வேய்ந்த செஞ்சடைக் கடவு ளோர்பாற்
காமர்பூங் கொம்ப ரீன்ற வலம்புரிக் களிற்றின் வண்ணத்
தாமரை புரையுஞ் செம்பொற் ருளிணை வணங்கல் செய்வாம்.

என்றிருக்கிறது.

இச்செய்யுளே மேற்படி மகோற்சவப் பத்திரிகையில்

மாமலர்க் கோதைநாளு மகிழ்ந்திருக்களருள் வைகுந்
தேமல ரிதழிவேய்ந்த செஞ்சடைக் கடவுளோர்பாற்
காமர்பூங் கொம்பரீன்ற வலம்புரிக் களிற்றின் வண்ணத்
தாமரை யுரையுஞ் செம்பொற் ருளிணை வணங்கல் செய்வாம்.

என்றிருக்கிறது.

அறுசீர்ச்செய்யுளாகிய இச்செய்யுளின் முதலிரண்டடிகளை நாற்சீராகவும்; மூன்ருமடியை ஐஞ்சீராகவும்; நான்காமடியை அறுசீராகவும் மூன்றுவிதமாகப் பிரித்திருப்பதும்; முதலடியில் பொருட்சிதைவும், மாத்திரைக் கூடுதலுந் தோன்ற ஒரு நகரவொற்றுச் சேர்த்திருப்பதும்; நான்காமடியில் அர்த்தபேதந்தோன்ற பகரவுகரத்தை யகர வுகரமாக மாற்றியிருப்பதும் ஆச்சரியமேயாகும். ஆனல் 'பூ' என்றுஞ் செல்லலாம், 'புப்ப' மென்றுஞ் செல்லலாம், ஐயா சென்னபடியுஞ் செல்லலாம் என்பதுபோலிருக்கின்றன.

மேற்படி உற்சவத்தில் முதல் நாள்—முன்னே ஒரு சகடையில் 'விநாயகர், முருகர், சண்டேசுரர்' பின்னே ஒரு

சகடையில் 'சோமசுந்தரப்பெருமான், நிறைதவஞ் செய்த நாச்சியார்' என்ற முறையாகவும்; இரண்டாநாள்—வலப்புற மிருந்து 'நிறைதவஞ் செய்த நாச்சியார்' சோமசுந்தரப் பெருமான், முருகர், விநாயகர், பின்னே 'சண்டேசுரர்' என்ற வரிசையாகவும்; மூன்றுநாள்—வலமிருந்து 'சோமசுந் தரப்பெருமான், நிறைதவஞ்செய்த நாச்சியார், முருகர், விநாயகர்' பின்னே 'சண்டேசுரர்' என்ற முறையாகவும்; நான்காநாள்—வலத்தினின்று 'நிறைதவஞ்செய்த நாச்சியார், சோமசுந்தரப்பெருமான், முருகர், விநாயகர் பின்னே 'சண்டேசுரர்' என்ற முறையாகவும்; ஐந்தாநாள்—வலப் பக்கமிருந்து 'முருகக்கடவுள், நிறைதவஞ்செய்த நாச்சியார், சோமசுந்தரக்கடவுள், விநாயகக்கடவுள்' பின்னே 'சண்டே சுரநாயனர்' என்ற முறையாகவும்; ஆறுநாள்—வலத்தி லிருந்து 'விநாயகர், சோமசுந்தரப்பெருமான், நிறைதவஞ் செய்த நாச்சியார், முருகர்' பின்னே 'சண்டேசுர நாயனர்' என்ற வரிசையாகவும்; ஏழாநாள்—வலமாதியாக 'சோமசுந் தரப்பெருமான், நிறைதவஞ்செய்த நாச்சியார், முருகர், விநாயகர்' பின்னே 'சண்டேசுரர்' என்ற முறையாகவும்; எட்டாநாள்—வலமிருந்து 'நிறைதவஞ்செய்த நாச்சியார்' சோமசுந்தரப்பெருமான், முருகர், விநாயகர்' பின்னே 'சண் டேசுரர்' என்ற முறையாகவும் விதிக்கு வேற்றுமையாக எழுந்தருளப்பண்ணியது நிரைமீட்சித் திருவிழாப்போல அழகாயிருந்தன.

இவ்வுற்சவத்தில் மூன்றிலிரண்டு பங்கு 'காவணம்' அமைக்கப்பெறுதிருந்ததும்; பத்திரிகையில் உண்மை யெழுதவில்லை யென்பதற்குச் சான்றாக, ஐந்தாந்திருவிழாத் திருச்சப்பரமின்றி, சிவபெருமான் திரிபுர தகனத்தில் தேர் அழிந்து, விட்டுணுவாகியவிடபந்தாங்கப்பெற்று, புன்னகை கொண்டு, அத் திரிபுரத்தை யெரித்தருளியது போன்றிருந் ததும்; சண்டேசுர நாயனர் புராணத்தில் "சிவபெருமான் உமாதேவியாரோடு இடபாரூடராய், சிவபூசையிற் சிறந்த திருத்தொண்டராகிய 'விசாரசருமர்' முன்தோன்றி, அவரைத் தம்முடைய திருக்கரங்களால் எடுத்து, 'நீ நம்பொருட்டு'

உன்னைப்பெற்ற தாதையை வெட்டினாய் இனி உனக்கு நாமே பிதா என்று அருளிச்செய்து, அவரை அணைத்து, அவருடைய திருமேனியைத் தடவி உச்சிமோந்து, 'நம்முடைய தொண்டர்களுக்கெல்லாம் உன்னைத் தலைவனாக்கி, நாம் ஏற்றுக்கொண்ட அமுதும், பரிவட்டமும், புட்பமும் உனக்குக் கிடைக்கும்படி சண்டேசுர பதத்தைத் தந்தோம்' என்று திருவாய்மலர்ந்து, தம்முடைய சடையிலே தரித்திருக்கின்ற கொன்றை மாலையை எடுத்து அவருக்குச் சூட்டியருளினார்'' என்று கூறுவது, உண்மையல்ல வென்பதற்குச் சான்று காட்டுவதுபோல சோமசுந்தரக்குருக்கள்—சென்ற 12-6-33ல் நடைபெற்ற கும்பாபிடேக தினத்திலும், இவ்வைந்தாந் திருவிழாவிலும் 'சண்டேசுர நாயனாரை' சாத்திரத்துக்கு விரோதமாக பிரதோட இடபவாகனத்தில் எழுந்தருளப் பண்ணியதும்; பஞ்சாயத்தாராகிய க. வீ. சொ. வீ. அழகப்பசெட்டியாரவர்களால் வெளிப்படுத்திய பிட்நோட்டீசிற் கண்டபடி ஏழாந்திருவிழாவில் 'சங்கீதக்கச்சேரி' நடைபெறாதிருந்ததும்; மகாரதங்கள் அலங்காரச் சாமான்களையிழந்து, அலங்கோல வடிவங்கொண்டு நின்றதை நன்குணர்ந்த திரு விடும்பாவனம் 'சற்குண நாதேசுரர்' அங்கவீனக்குதிரைகள் அனுப்பித்தருளியதும்; பத்தா நாள் பகல் ஒருமணிக்கு 'சபாநாயகப் பெருமான்' துருவாசதீர்த்தமாடிக்கொண்டு, வெயிலின் உக்கிரந் தாங்கமுடியாமல் வீதிகளில் ஓடோடியதைப் பார்த்துக்கொண்டிருந்த 'விநாயகர், முருகர், சோமசுந்தரப்பெருமான், நிறைதவஞ்செய்த நாச்சியார், சண்டேசுரர்' என்னும் ஐந்து மூர்த்திகளும், துருவாச தீர்த்தமாடிக்கொண்டு, வீதிகளுக்குப் போகாமல், அத்தீர்த்தத்தைச் சுற்றியபடியே கோவிலுக்குச் சென்றருளியதும்; விடாயாற்றி உபயதாரர்களாகிய கொசதாங்கி 'கோ. இராமாமிர்த தேவர்' வகையறாப் பெயர்களுக்கு கோவிலினின்று 'சண்டேசுர திருமுகம்' கிடைக்காத காரணத்தினால் உற்சவ பத்திரிகையிற் கண்ட விடாயாற்றி 'உபயம்' நடைபெறாமல் நின்றதும்; இவ்வுற்சவத்தில் 'துருவாசமகாமுனிவர்' எழுந்தருளி வராமல் நிட்டையிலேயே யிருந்ததும்; இருபத்தொரு அதிர்வெடிக்கட்டைகளிருந்த கோயி

வில் ஒரு ஓட்டைக்கட்டையில் அதிர்வெடி போடும்படியான காலம் வந்ததும் ஆச்சரியமன்றே. இதனால் கோவிலில் சிவத்துரோகிகள் நிறைந்திருக்கின்றார்களென்பதும்; அவர்கள் 'சிவபெருமானையும், சிவ திருத் தொண்டர்களையும் ஏமாற்றுகின்றார்க ளென்பதும் அறிவாளர்களுக்கு விளங்காமற் போகாது.

குருக்கள் இவ்வுற்சவத்தில் பஞ்சமூர்த்திகள் திருவுலா வரும்போதெல்லாம் 'சோமசுந்தரப் பெருமானுக்கும், தனியம்பாளுக்கும்' 'எசுர்வேதபாடசாலை, பசுமடம்' என்பவற்றிற் கெதிரில் ஒன்றாகத் தேங்காய்களை யுடைத்துத் தீபாராதனை செய்தார்; 'மடம், குருபூசை மடம்' என்பவற்றிற் கெதிரில் தனித்தனி தேங்காயுடைத்துத் தீபாராதனைசெய்தார்; வீதிகளில் வீடுகள் தோறும் வந்த கற்பூரத்தை எடுத்து வைத்துக்கொண்டு, ஒருமுகக் கற்பூரக்கிளையில் தான் வைத்திருந்த கற்பூரத்தைக் கொளுத்திக்காட்டி அமர்த்திவைத்துக்கொண்டார்; இப்படியே பத்துநாளும் வீடுகள்தோறும் நடந்தன. சிவ சன்னிதியிலே கற்பூரத்தைக் கொளுத்தி அமர்த்தியது, உடைக்கக் கொடுத்த தேங்காய்மூடிகளைச் 'சிவபெருமான்' ஏற்றுக்கொள்ள வில்லையென்று சத்தியஞ் செய்வதுபோலிருந்தது. ஈசுர சன்னிதானத்திலே கற்பூரத்தை வைத்து அணைக்கிறது சத்தியமல்லவா? மூன்று பைசா பெறுமான முள்ள ஒரு கட்டி கருப்பூரத்துக்காக ஒரு தரம் கருப்பூரத்தைக் கொளுத்தி அணைக்கிறவர் எந்தக் காரியத்தைச் செய்யமாட்டார்? மூன்று பைசா கற்பூரத்துக்காக ஈசுர சன்னிதானத்தில் சத்தியஞ் செய்கிறவருக்கு ஈசுரபத்தி யெப்படி யுண்டாகும்? ஈசுரபத்தி யில்லாதவரைக் கொண்டு பூசைசெய்வது அதிபாதகமல்லவா? எந்த வகுப்பினரா யிருந்தாலும் ஈசுரபத்தி யுடையவர்களே உயர்ந்தவர்கள்.

## சந்திரசேகரர் புறக்கோடியிற் போயினர்.

"நிலமாய், நீராய், தீயாய், காற்றாய், ஆகாயமாய், ஞாயிறாய், திங்களாய், இயமானனாய், சாட்சாத்காரமாய்,

பரிபூரணராய், சச்சிதானந்தராய், ஆதிமத்தியாந்தரகிதராய், கைம்மாறு கருதாதவராய், விருப்பு வெறுப்பற்றவராய், விபுவாய், அருவாய், உருவாய், அருவுருவமாய்'' விளங்குங் கடவுளுக்கு மும்மல வயத்தராகிய ஆன்மாக்கள் செய்யக் கூடியது யாதொன்று மில்லை. ஆன்மாக்கள் "சரியை, கிரியை, யோகம், ஞானம்'' என்பவற்றின் வாயிலாக, கடவுளை வழிபடுவது "சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய'' பதங்களைப் பெற்றுய்யும் பொருட்டே யன்றி வேறெக்காரணம் பற்றியுமன்று.

உலகந்தோன்றிய காலத்தே தெய்வீகமே "தமிழொலியாயும், தமிழ்வரியாயும்'' தோன்றிய தமிழ்மொழியின் "அகார உகார மகாரமே ஓங்காரத்தெய்வத்திருவுருவாயும்; நகார மகார சிகார வகார யகாரமே தெய்வத்திருநாமமாயும்'' விளங்குந் தெய்வீகத் தமிழ் நாட்டிலே தோன்றிய ஆறறிவுடைய ஆன்மாக்களாகிய மனிதர்கள் ஆதிகாலத்திலேயே கடவுளொருவ ருண்டென்பதையும்; அவர் சர்வ வியாபகரென்பதையும்; அவர் அரூபியென்பதையும்; அவரை வழிபடுவதே மனிதப்பிறவியின் பிரயோசன மென்பதையும்; அவரை வழிபடாம லுண்ணு முணவு நாய்மலத்துக் கொப்பாகுமென்பதையும் நன்குணர்ந்து, ஊர்கடோறும் மரத்தினிழலில் மண்ணினாலே மொந்தாகாரமாக 'பிள்ளையார்' அமைத்து, அப்பிள்ளையாருக்குமேற் கடவுளில்லை என்பதற் கறிகுறியாக 'விநாயகர்' எனவும்; கடவுளை வழிபடும் அடையாளம் என்பதற் கறிகுறியாக 'இலிங்கம்' எனவும் பெயரிட்டு, எல்லோரும் நேரே வழிபட்டு வந்தார்கள். கடவுளை வழிபடுந் தானத்தைக் 'கோயில்' என்பர். கடவுள் வழிபாட்டை 'சமயம்' அல்லது 'மதம்' என்பர். 'சமயம்' என்பது கடவுளை வழிபடும் 'அடையாளம்' எனினும், 'உடன்பாடு' எனினும் பொருந்தும். 'மதம்' என்பது கடவுளை வழிபடும் 'கொள்கை' எனினும், 'மார்க்கம்' எனினும், 'பத்தி' எனினும் பொருந்தும். பத்தி சித்திக்குமேல், முத்தி சித்திக்கும். பத்தியில்லையேல், முத்தியில்லை. மனிதப் பிறவியா லடையத்தக்கது—இம்மையில் பத்தியும், மறுமை

யில் முத்தியுமேயாகும். அக்காலத்திலே எல்லோரும் நேரே கடவுளை வழிபட்டுவந்தார்களென்பதற்கு, இன்றுங் காசியிலே எல்லோரும் சாதிபேதமின்றி நேரே கடவுளை வழிபடுவதே தக்க சான்றாகும்.

மண் பிள்ளையாராகிய 'இலிங்கம்' மழையிற் கரைந்த காரணத்தை முன்னிட்டு, எக்காலமும் அழிவின்றி யிருக்கும்பொருட்டு, அப்பிள்ளையாராகிய இலிங்கத்தைப்போலக் கல்லில் அமைத்து, அவ் 'இலிங்கம்' மரத்தடியி லிருத்தலினல் ஏற்படும் அசுசியை அகற்றும் பொருட்டு, முழுக்காட்டும் 'நீர்' காலிற்படாமல் புறத்திற்போய் விழவேண்டியதற்காக, கோமுக வடிவமாக ஒரு கருவி யமைத்து; அக்கருவியை இலிங்கத்திற் கோர்த்து, 'அசைவும் இடுக்கும்' இல்லாதிருக்கும் பொருட்டு, சித்தர்கள் சொல்லிய மருந்தைச்சாத்தி, வழிபட்டுவந்தார்கள். அக்காலத்திலே மரத்தடியில் பிள்ளையாராகிய 'இலிங்கம்' அமைத்து வழிபட்டு வந்தார்களென்பதற்கு அநேகங் கோயில்களில் தல விருட்சங்க ளிருப்பதே தக்க சான்றாகும். இஃதிவ்வாறிருக்க, கடவுள் தமக்குத் தாமே யொப்புடையரென்பதையும்; தமக்கொப்பாரு மிக்காரு மில்லாதவ ரென்பதையும்; விநாயகரென் னும்பெயர் அவருக்கேயுரித்தாகுமென்பதையும்; அவர் நின்மல ரென்பதையும்; அவர் உருவமில்லாதவ ரென்பதையும்; அவர் சர்வ வியாபக ரென்பதையும்; மண்ணினல் மொந்தாகாரமாகப் பிள்ளையாரமைத்து, அப்பிள்ளையாரைக் கடவுளாகப் பாவித்து, வழிபட்டு வந்தார்களென்பதையும்; அப்பிள்ளையார் வடிவமே 'இலிங்கம்' என்பதையும்; 'இலிங்கம்' என்னும் பதத்திற்குப் பொருள் கடவுளை வழிபடும் அடையாளமென்பதையும்; எக்காலமும் அழிவின்றி நிலைபெற்றிருக்கும்பொருட்டு, இலிங்கத்தைக் கல்லில் அமைத்த காலத்தில் 'கோமுகை' ஏற்பட்டதென்பதையும்; இலிங்கத்திற் கபிடேகமாகும் நீர் புறத்திற்போய் விழவேண்டியதற்காக ஏற்பட்ட கருவி கோமுகை யென்பதையும்; தொன்றுதொட்டு "தெய்வீகம்பொருந்திய பெரியோர்களையும், அன்பு நிறைந்த திருத்தொண்டர்களையும், அறிவின் முதிர்ந்த

பேரறிவாளர்க்ளையும், போரிற்சிறந்த வீரர்களையும்'' தெய்வ மாகப் போற்றி வருகின்றார்க ளென்பதையும் நன்குணரச் சத்தியில்லாத அறிவீனர்கள் "கண், காது, மூக்கு, வாய், கை, கால்'' முதலிய அவயவங்களின்றி, மொந்தாகார 'இலிங்கவுருவாய்' விளங்கும் கடவுளுக்கு மனைவி, மைந்தர்க ளிருப்பது போலவும்; "இலிங்கம், கோமுகை'' என்னு மிரண்டையும் "ஆண்குறி, பெண்குறி'' எனவும் வாயில் வந்தபடி பிதற்றுகின்றார்கள். அந்தோ வெட்கம்! வெட்கம்!! இலிங்கவுருவாய் விளங்குங் கடவுள் "மனைவி, மைந்தர்'' இல்லாதவ ரென்பதற்கு "மலைநாட்டுத் திருக்கோயில்களி லும், வடநாட்டுத் திருக்கோயில்களிலும்'' தேவியார் திரு வுருவமின்றி, இலிங்கவுருவங்களிருப்பதே தக்க சான்றாகும். 'திருமலைராயன் பட்டினம்' என்னும் நகரத்தை இராச தானியாகக்கொண்ட 'மலையரையன்' என்னும் அரசனுக்கு ஏகபுத்திரியாக திருவவதாரஞ்செய்து, முடிசூட்டப்பெற்று, ஏகாதிபதியா யுலகுக் கரசியாய் விளங்கிய காரணத்தினால் "பார்ப்பதி'' எனவும்; வீரத்திற் சிறந்தோங்கி விளங்கிய காரணத்தினால் "சத்தி'' எனவும் பெயர்பெற்று, "திருக் கச்சித் திருவேகம்பம்'' என்னும் காஞ்சிபுரத்திலே, கம்பா நதிக்கரையிலே, மாமரத்தினடியிலே, மணலினாலே 'பிள்ளை யார்' என்னும் "இலிங்கம்'' அமைத்துப் பூசித்து, நிறை தவஞ்செய்து "சிவபெருமான்'' என்பவரைத் திருமணஞ் செய்துகொண்டு, யோகவாயிலாக ஞானக்கண்பெற்று, முக் கண்ணியாய் விளங்கும் உமாதேவியார்; தெய்வீகமே திரு வுருவாய், உமாதேவியாருக்கு நாயகராய், சனகாதி நால் வர்க்கு ஆசிரியராய், கல்லாலமரத்தடியில் தென்முகமா யெழுந்தருளிய சிவபெருமான்; மனசினாலே, உள்விழிப் பார் வையாக "அக்கினிமண்டலம், ஆதித்தமண்டலம்'' என்னு மிரண்டையுங் கடந்து, சந்திர மண்டலத்தை யடைந்து, "சந்திர சடாதரராய், முக்கண்ணராய், சதாசிவமாய்'' விளங்கும் சந்திரசேகரர்; ஆன்மாக்களுக்கு இறுதிக்கால மாகிய "காலன்'' என்னும் கூற்றுவனை "இட பிங்கலை'' என்னும் வாசியாகிய காலினாலே உதைத்துக் கொல்லுங்க ளென்று, சொல்லாமற் சொல்லும் பொருட்டு, "ஊர்த்து

வானந்த தாண்டவராய்'' விளங்கும் சபாநாயகப்பெருமான்; உமாதேவியாரோடு இடபாரூடராய்த் தோன்றி, ஆன்மாக்கள் விரும்பிய பேற்றைக் கொடுத்தருளுந் தியாகராசப்பெருமானாய் விளங்கும் சோமசுந்தரப்பெருமான்; உமாதேவியார் நிறைதவஞ்செய்ததற் கறிகுறியாய் தனி யம்பாளாய் விளங்கும் நிறைதவஞ்செய்த நாச்சியார்; உமாதேவியாருடைய மூத்த திருக்குமாரராய், விக்கினங்களெல்லாம் போக்குபவராய், சிவகணங்க ளெல்லாவற்றிற்கும் பதியாய், முக்கண்ணராய் விளங்கும் விநாயகர்; உமாதேவியாருடைய இளைய திருக்குமாரராய், ஞானசிரியராய், 'வள்ளிதெய்வானை' சமேதராய், கண்கண்டதெய்வமாய், கலியுகவரதராய் விளங்கும் முருகர்; குருலிங்கசங்கமங்களான் முத்திபெற்ற அறுபத்து மூவராதி திருத்தொண்டர்கள்; தொண்டைமான் சக்கரவர்த்தி கால்வழியில்வந்து ''திருப்பதி'' என்னும் மலையரணை இராசதானியாகக் கொண்ட திருவேங்கடத் தொண்டைமானுக்கு ஏகபுத்திரியாய், திருவே திருவுருவாய், திருவவதாரஞ் செய்து, 'அலர்மேன்மங்கை' எனப் பெயர்பெற்று விளங்கும் இலக்குமிதேவியார்; கருணையே திருவுருவாய், இலக்குமி சமேதராய் விளங்கும் திருமால்; 'பிரமபுரம்' என்னும் தெய்விக நகரத்தை இராசதானியாகக் கொண்டு, கடவுளை வழிபட்டு, படைப்பே திருவுருவாய் விளங்கும் பிரமதேவர்; தமிழே திருவுருவாய், பிரமதேவருடைய நாயகியாய் விளங்கும் நாமகள்; காடுகிழாஅள் (காடுகாள்) திருவயிற்றிற் பிறந்து, 'வடுகன்' எனப் பெயர்பெற்று, அரசனுய்த் திருக்கோயில்களைக் கண்ணிமைபோற் பாதுகாத்து, சித்திகளெல்லாம்பெற்று, தெய்வீகமே திருவுருவாய்விளங்கும் வைரவர்; வடுகனை மகனாகத் தோற்றுவித்து, வடுகியெனப் பெயர்பெற்று, 'மாரி' என்னும் வைசூரி நோயைப் பரிகரிக்குந் தெய்வமாய் விளங்கும் 'காடுகிழாஅள்' என்னும் மாரியம்மன்; 'காரி' என்னும் அரசராய், குதிரைப்படையும் வெள்ளையானையுமுடையராய், 'பூரணை, புட்கலை' சமேதராய், யோகீசுரராய் விளங்கும் ஐயனார்; நான்கு போர்வீரருக்குச் சம வீரமுடையராய் 'எண்டோளி' எனவும், இராசயோக வாயிலாக ஞானக்கண் பெற்று 'முக்கண்ணி' எனவும்

'ஊழிக்காற்று' என்னும் பேய்க்கொடிகொண்டு 'அலகைக் கொடியுயர்த்தாள்' எனவும் பெயர்கள் பெற்று விளங்கும் 'பிடாரி' என்னும் காளியம்மன்; தூர்க்காட்சி நகரினை இராசதானியாகக் கொண்டு, 'சக்கரம், சூலம், வாள்' என்னும் படைகளுடையராய், நான்கு போர் வீரருக்குச் சம வீரமுடையராய், மகிடனைக்கொன்று வெற்றியிற் சிறந்தோங்கியவராய் விளங்கும் துர்க்கையம்பாள் என்பனவாகிய தமிழ் நாட்டுத் தமிழ்த் தெய்வீகத் திருவுருவத் தமிழ்த்தெய்வங்களையும் வழிபடும் பொருட்டு, எண்ணிறந்த திருக்கோயில்களமைத்து, ஒவ்வொரு திருக்கோயிலினும் "கருப்பக்கிரகம்" என்னும் மூலத்தானத்தின் மத்தியில் முற்கூறிய 'பிள்ளையார்' என்னும் இலிங்க உருவத்தைத் தாபித்தும்; அக்கருப்பக்கிரகத்தின் வெளிப்புறம் தென்பாகத்தில் "கல்லால மரத்தடியில் தென்முகமாக சனகாதி நால்வர்க்கு அனுக்கிரகஞ் செய்த" சிவ திருவுருவத்தையும், வடபாகத்தில் பிரமதேவருடைய திருவுருவத்தையும், பின்பாகத்தில் திருமாலின் திருவுருவத்தையும் தாபித்தும்; அக்கருப்பக்கிரகத்துக்குச் சமீபத்திலே சுற்றிலும் "விநாயகர், முருகர், சபாநாயகர், சந்திரசேகரர், சோமசுந்தரர், நிறைதவஞ்செய்த நாச்சியார், இலக்குமி, நாமகள், சண்டேசுரர், வைரவர், சமயகுரவர் நால்வர், திருத்தொண்டர் அறுபத்துமூவராதியோர்" திருவுருவங்களைத் தாபித்தும்; "உலகமாதாவாயும், தருமசொரூபியாயும்" விளங்கும் உமாதேவியாருக்குப் பிரத்தியேகமாய் அழகிய திருக்கோயிலமைத்து, அதில் அத்தேவியாருடைய திரு வுருவத்தைத் தாபித்தும் தமிழ் மக்களில் ஒரு வகுப்பாருக்கு 'மானியம்' கொடுத்துப் பூசகராக நியமித்து, பூசைக்குத் தொடங்கும்போது 'கெண்டாமணி' அடிக்கவும், அம்மணிச்சத்தங் கேட்டவுடன் எல்லாருஞ் சென்று வழிபடவும் திட்டஞ்செய்து கொண்டார்கள். அன்றியும் "ஐயனர், மாரியம்மன், காளியம்மன், துர்க்கையம்பாள்" என்னுந்தேவதைகளுக்கும் ஆங்காங்கு தனித்தனி திருக்கோயில்களமைத்து, அத்தெய்வங்களையும் வழிபடுவாராயினர்கள். முற்கூறிய தேவதைகளின் திருவிளையாடல்களைத் திருவிழாக்களாகவும் நடத்துவாராயினர்கள்.

தமிழ்மொழி—உலகந்தோன்றிய காலத்தே தோன்றிய தெய்வீகமொழி யென்பதற்கு குழந்தைகள் பிறந்தவுடனே தெய்வீகமாய் 'அங்காத்தல்' என்னும் வாய்திறத்தலினின்று, 'அகரம்' முதலிய தமிழொலியே தோன்றுவதும்; மக்கட்குரிய "உயிர், உடல் (மெய்), உயிருடல் (உயிர்மெய்), ஆய்தம்" என்னும் பாகுபாடுகள் தமிழ்மொழியிலிருப்பதும்; ஏனையமொழிகளின் வரிவடிவம் தமிழ்மொழியி லில்லாதிருப்பதும்; "ஔவைப்பிராட்டியார், திருவள்ளுவர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, அம்பிகாபதி, காளமேகர்" முதலிய சிரோன்மணிகளின் திருவாக்கினின்று, தமிழ்த்தெய்வீகத் திருவருட்பாசுரங்கள் தோன்றி விளங்குவதும்; திருவாப்பனூர் பண்-குறிஞ்சி ரு-ம் பாடலில் 'அகரமுதலானை' எனவும், திருக்கடம்பந்துறை திருக்குறுந்தொகை ந-ம் பாடலில் 'தமிழோடிசையானவன்' எனவும், திருச்சிவபுரம் திருத்தாண்டகம் க-ம் பாடலில் 'தென்றமிழு மறைகணன்கும் ஆனவன்' எனவும், திருநெல்வாயிலரத்துறை பண்—இந்தளம் எ-ம் பாடலில் 'அகரமுதலினெழுத் தாகிநின்றாய்' எனவுங் கூறப்படுவதும் தக்க சான்றாகும்.

ஆதியில் கடவுளை வழிபடத்தொடங்கியவர்கள் தமிழ்மக்களென்பதற்கும், தமிழ்மக்கள் சிவபத்தியிற் சிறந்தவர்களென்பதற்கும்—தமிழ்மண்டலத்திலே, பல்லாயிரங்கோடி சிவ திருக்கோயில்க ளிருத்தலும்; மூவராருளிய தேவாரத் திருப்பதிகமுடைய சிவதலங்களுள் (ஏழுதலங்கள் நீங்கலாக) இருநூற்றறுபத்தெட்டுச் சிவதலங்கள் தமிழ்மண்டலத்திலிருத்தலும்; தேவாரத்திருப்பதிகங்கள் மறைந்தன வென்பதற்கு வேண்டிய ஆதாரங்களோடு பல்லாயிரந் திருக்கோயில்கள் தமிழ்த்தேயத்தி லிருத்தலும்; தேவார சம்பந்தமின்றி, திருவாசக சம்பந்தமுடையனவாய் இரண்டு திருக்கோயில்கள் தமிழ்நாட்டிலிருத்தலும்; தேவார திருவாசக சம்பந்தமின்றி, திருவிசைப்பா சம்பந்தமுடையனவாய் எட்டுத் திருக்கோயில்கள் தமிழ்ப்பூமியிலிருத்தலும் தக்க சான்றாகும்.

சிவ திருக்கோயில்களில் "இலிங்கம்" அன்னியில் அவயவங்களுடையனவாய் விளங்கும் மூர்த்திகளெல்லாம் தமிழ் மண்டலத்துத் தெய்வீகத் திருவிளையாட்டு மூர்த்திகளென்பதற்கு தமிழ்நாட்டிலே "சிவராசதானி (திருநாகை), சிவப்பள்ளி, சிவபுரம், சிவபுரி, சிவாயமலை (இரத்தினகிரி)" என்பனவாகிய திருத்தலங்களிருத்தலும்; சிவபெருமான் ஊர்த்துவானந்த தாண்டவஞ்செய்தருளிய "திருவாலங்காடு இரத்தினசபை, திருத்தில்லைப் பொற்சபை, திருவாலவாய் வெள்ளிச்சபை, திருநெல்வேலி செப்புச்சபை, திருக்குற்றாலஞ் சித்திரசபை" என்பனவாகிய ஐந்து மன்றங்களிருத்தலும்; சிவபெருமான் 'வீராவேசங்கொண்டு "பிரமசிரங் கொய்த" திருக்கண்டியூர், "அந்தகனை வதைத்த" திருக்கோவலூர், "முப்புரமெரித்த" திருவதிகை, "தக்கயாக மழித்த" திருப்பறியலூர், "சலந்தரனைப்பிளந்த" திருவிற்குடி, "யானையுரித்த" திருவழுவூர், "காம தகனஞ்செய்த" திருக்குறுக்கை, "இயமனையுதைத்த" திருக்கடவூர்' என்பனவாகிய வீரட்டத் தலங்களிருத்தலும்; சிவபெருமான் தியாகராசமூர்த்தமாய் விளங்கும் "திருவாரூர், திருநள்ளாறு, திருநாகைக்காரோணம், திருக்காறாயில், திருக்கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு, திருவொற்றியூர், திருவான்மியூர்" முதலிய விடங்கத் தலங்களிருத்தலும்; 'சிவபெருமான் "சண்டையிட்டுக்கொண்டிருந்த பிரமவிட்டுணுக்களின் மத்தியில் சோதிவடிவாய்த் தோன்றிய" திருவண்ணாமலை, "சிவபெருமான் வலப்பாகமும், உமாதேவியார் இடப்பாகமுமாக ஒரே திருவுருவாய்த் தோன்றிய" திருச்செங்கோடு என்னும் திருக்கொடிமாடச்செங்குன்றூர், "சிவபெருமான் வலப்பாகமும், திருமால் இடப்பாகமுமாக ஒரே திருவுருவாய்த் தோன்றிய" சங்கரநயினார் கோயில் என்று வழங்கும் சங்கர நாராயணர் கோயில்' முதலிய தலங்களிருத்தலும்; உமாதேவியார் தனித்திருந்து "நிறை தவமும், இலிங்க பூசையும்" செய்த "காமகோடிபீடம்" காஞ்சிபுரத்திலிருத்தலும்; விநாயகர் திருக்கோயில்கள் எண்ணிறந்தகோடி யிருத்தலும்; முருகக்கடவுள் திருக் கோயில் கொண்டு விளங்கும் "திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய்

என்னும் திருச்செந்தூர், திருவாவினன்குடி என்னும் பழநி, திருவேரகம் என்னும் சுவாமிமலை, பழமுதிர்சோலை என்னும் அழகர்மலை, குன்றுதோறாடல்'' முதலிய திருப்புகழ்ப் பெற்ற தலங்களுள் (ஐந்து தலங்கள் நீங்கலாக) நூற்றெண் பத்தொரு தலங்களிருத்தலும்; அக்கடவுளுடைய திருப்புகழின்றி எண்ணிறந்த திருத்தலங்களிருத்தலும்; அக்கடவுள் 'வள்ளியம்மையார்' என்னும் குறவர் குலக்கொடியைச் சிறையெடுத்த வள்ளிமலை, சூரபன்மாதியரோடு போர் புரிந்த திருப்போரூர், வீராவேசம் ஆறுதலடைந்த திருத்தணிகை என்பனவாகிய திருத்தலங்களிருத்தலும்; அக்கடவுள் அகத்தியமுனிவருக்கு உபதேசித்தருளிய ''சுப்பிரமணியர் ஞானம் ௧௦௦, ௨௦௦, ௩௦௦'' என்னும் தமிழ் ஞான நூற்களிருத்தலும்; மலையரையனுடைய இராசதானியாகிய திருமலைராயன் பட்டின மிருத்தலும்; தமிழ்மக்களாகிய அறுபத்து மூவராதி திருத்தொண்டர்கள் திருவவதாரஞ்செய்த திருத்தலங்களிருத்தலும்; சிவபெருமான் ''ஆன்மநாதராய்'' மாணிக்கவாசகருக்கு உபதேசித்தருளிய 'திருப்பெருந்துறை' என்னுந் தலமிருத்தலும்; திருவேங்கடத்தொண்டைமானுடைய திருமகளாகிய ''அலர்மேன்மங்கை'' என்னும் இலக்குமி தேவியாரை ''திருமால்'' திருமணஞ்செய்து கொண்டதாக திருவேங்கடந் தலபுராணங் கூறுதலும்; நாலாயிரப்பிரபந்தம் பெற்ற 'திருமாலின்' திருப்பதிகளுள் (பன்னிரு திருப்பதிகள் நீங்கலாக) தொண்ணூற்றாறு திருப்பதிகளிருத்தலும்; நாலாயிரப்பிரபந்தம் அருளிச்செய்த ஆழ்வார் பன்னிருவர் திருவவதாரஞ்செய்த திருத்தலங்களிருத்தலும்; 'திருமால் ''இலிங்கம்'' அமைத்து, ''தினம் ஆயிரத்தெட்டு தாமரைப்பூக்கொண்டு அருச்சித்து வருநாளில் ஒருநாள் ஒரு பூக்குறைய தமது கண்ணைப்பிடுங்கி அருச்சித்த'' திருவீழிமிழலை, இங்ஙனம் பூசித்ததின் பயனை ''சிவபெருமான் திருமாலுக்குச் சக்கராயுதங் கொடுத்தருளிய'' திருச்சக்கரப்பள்ளி, ''திருமால் சக்கரப்படைபெற்றதற் கறிகுறியாகப் பூசித்த'' திருமாற்பேறு' என்பனவாகிய தலங்களிருத்தலும்; திருநெல்வேலி சில்லாவிலே 'சங்கரநாராயணர் கோயில்'' என்னுந் தலத்திலே ''வலம்

பாகம் சிவபெருமானும் இடப்பாகம் திருமாலுமாக ஒருரு வாய்'' விளங்குவதைப்பற்றி தேவாரத்தில் இருபத்தெட்டுப் பாசுரங்களிலும், நாலாயிரப்பிரபந்தத்தில் பதினேழுபாசுரங் களிலும் கூறியருளப்பெற்றிருத்தலும்; திருமால் வாமன வடிவங்கொண்டு "மாவலிசக்கரவர்த்தி'' யிடஞ் சென்று "மூன்றடி மண்'' தானம் வாங்கி "நெடியோனுய்'' ஓரடி யால் உலகளந்தருளிய அழகிய திருநகரமாகிய "மாவலி புரம்'' செங்கற்பட்டு சில்லாவிலே கடற்கரையோரத்திலே யிருத்தலும்; பிரமதேவருண்டுபண்ணி இராசதானியாகக் கொண்டு "இலிங்கம்'' அமைத்துப் பூசித்துப் படைப்புத் தொழில் பெற்ற 'சீகாழி' என்னும் திருப்பிரமபுர மிருத் தலும்; திருப்பிரமபுரம் பண்–நட்டபாடை க-ம் பாடலில் "ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த வருள் செய்த,- பீடுடைய பிரமா புரமேவிய பெம்மானிவ னன்றே'' என்று கூறியிருத்தலும்; சிவபெருமான் பிரமதேவருடைய சிரத் தைக்கொய்தருளிய 'திருக்கண்டியூர்' என்னுந் தலம் தஞ்சா வூருக்கு வடக்கிலிருத்தலும்; பிரமதேவர் 'இலிங்கம்' அமைத்துப் பூசித்த 'திருவிரிஞ்சபுரம்' காட்டுபாடிக்குச் சமீபத்தி லிருத்தலும்; வைரவர் வழிபட்ட "வைகல், வைகாவூர்'' முதலிய தலங்களிருத்தலும்; ஐயன் உண்டு பண்ணிய "ஐயனுபுரம், ஐயன்பேட்டை, ஐயூர், ஐயனல் லூர், ஐயனூறு'' முதலியன விருத்தலும்; காளியார் வழி பட்ட "உஞ்சேனைமாகாளம், அம்பர்மாகாளம்'' என்னுந் தலங்க ளிருத்தலும்; துர்க்கையம்பாள் ஆட்சிபுரிந்த "துர்க் காட்சி'' என்னும் தலம் பிரபலமாயிருத்தலும்; "விநாயகர், முருகர், தெட்சணாமூர்த்தி, சபாநாயகர், சதாசிவமாகிய சந்திரசேகரர், தியாகராசராகிய சோமசுந்தரர், வீரபத்திரர், வைரவர், திருமால், பிரமதேவர், ஐயனர், உமாதேவியார், இலக்குமிதேவியார், கலைமகள், காளிதேவியார், காடுகிழா ளாகிய மாரியம்மன், துர்க்கையம்பாள், சண்டேசுரர், சமயகுரவர், அறுபத்து மூவராதி திருத்தொண்டர், பன் னிரு ஆழ்வார்'' முதலிய திருவுருவங்கள் தமிழ்த்தேயத்தில் நிறைந்திருத்தலும்; தமிழ்த்தேய மல்லாத மற்றைய தேயங் களில் மேற்படி திருவுருவங்கள் இல்லாதிருத்தலும்; தஞ்சா

ஊருக்குத் தெற்கிலிருந்த "காசாங்கோட்டை" என்னும் நகரத்தை இராசதானியாகக்கொண்டு உலகினை ஏகாதிபதியாயாண்ட 'காசிராயன்' என்னும் அரசன் தென்னாட்டில் திருக்குற்றாலத்துக்குச் சமீபத்தில் 'தென்காசி' என்னுந் தலத்தையும், வடநாட்டில் கங்காநதிக்கரையில் 'வடகாசி' என்னுங் காசித்தலத்தையும் உண்டுபண்ணிய காலத்தில் அக்காசியில் உமாதேவியாருடைய திருவுருவத்தை பிரத்தியேகமாக அமைத்து "விசாலாட்சி யம்மையார்" என்று பெயரிட்டிருப்பதும், "காளிதேவியார்" ஏகாதிபதியாயுலகினையாண்டதற் கறிகுறியாக சில தலங்களில் காளிதேவியார் திருவுருவமிருப்பதும் நிற்க, வேறு திருவுருவங்க ளில்லாதிருத்தலும்; முற்கூறிய தேவதைகளின் பெயர்களெல்லாந் தமிழ்ப்பெயரா யிருத்தலும்; அவயவமின்றி மொந்தாகாரமாய், "இலிங்கவுருவாய்" விளங்குங் கடவுளுக்கு "உமாதேவியார்" மனைவியரல்ல வென்பதற்கும், ஆரிய மொழியாளர்கூற்று போலிக் கூற்றென்பதற்கும் ஆதாரமாக "சிலாசாதனம் செப்பேட்டுச்சாதனங்களில்" உமாதேவியார் பெயரின்றி, இலிங்கோற்பவராகிய கடவுள் பெயர் மாத்திர மிருத்தலும்; அப்பெயரும் தமிழ்ப்பெயராக முற்காலத்திய "பெரியோர், அரசர், தலம்" என்பவற்றின் பெயராக விருத்தலும்; முற்கூறிய தெய்வங்களின் திருவிளையாடல்களைத் தமிழ்நாட்டிலே திருவிழாக்களாக நடத்தலும், மற்றைய நாடுகளிலே அவ்விழாக்கள் நடவாதிருத்தலும் முக்கிய சான்றாகும்.

அநாதிமல முத்தராய், நித்தியராய், வியாபகராய், எல்லாவறிவும், எல்லாமுதன்மையும், எல்லாவனுக்கிரகமுமுடையராய், 'ஆக்கல். காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்' என்னும் ஐந்தொழில்களையும் செய்யாமற் செய்கின்றவராய் உயிர்களெல்லாவற்றையுந் திருமேனியாகவும் உடல்களெல்லாவற்றையுந் திருக்கோயில்களாகவுங் கொண்டவராய் விளங்குங் கடவுளை மாந்தர்கள் பூசைசெய்து உண்பதூஉம்' திருக்கோயில்களில் 'பூசனை, திருவிழா' முதலியன நடத்துவதூஉம் "சித்தசுத்தியும், அதினின்று சிவபத்தியும், அதி

னின்ற முத்தியும் அடையும்பொருட்டேயாகும். எங்ஙன மெனில் பூர்வ புண்ணிய மிகுதியினலே அரிதாகிய மானிடப் பிறவி தோன்றம்; மானிடப்பிறவிக்கு 'கல்வி, கேள்வி' களினலே அறிவு வளர்ச்சியுண்டாகும்; அறிவு முதிர்ச்சி யுண்டாகவே கடவு ளொருவ ருண்டென்னுந் தோற்ற முண்டாகும்; கடவுளொருவ ருண்டென்னுந் தோற்றமுண்டாகவே அவர் சர்வ வியாபக ரென்பது நன்கு விளங்கும்; கடவுள் சர்வ வியாபகரென்பது நன்கு விளங்கவே சிவகாருணிய முண்டாகும்; சிவகாருணிய முண்டாகவே சித்த சுத்தி யுண்டாகும்; சித்தசுத்தி யுண்டாகவே ஈசுவர பத்தி யுண்டாகும்; ஈசுவர பக்தியே கடவுளை யடையு மார்க்கமாகும்; கடவுளை அடைவதே மானிடப் பிறவியின் பிரயோசனமாம். மாந்தர்களுக்குத் திருக்கோயில்களின் 'கோபுரம், மதில், விமானம்' முதலியவற்றைப் பார்த்தவுடன் கடவுள் ஞாபக முண்டாவதும்; 'அதிர்வெடிச் சத்தம், கெண்டாமணி யோசை, சங்கத்தொனி' முதலியவற்றைக் கேட்டவுடன் கடவுளின் தியான முண்டாவதும் பக்தி வளர்ச்சிக்கு முக்கிய கருவியாயிருக்கின்றன. திருவிழாக்கள் மாந்தர்களைத் தரிசனத்துக்கு அழைக்கவருந் தூதர்களைப் போன்றவைகளா யிருக்கின்றன. கடவுள் எல்லாச் சீவர்களுக்கும் தரிசனங்கொடுத்து அனுக்கிரகஞ் செய்யும்பொருட்டு தேரோடும் வீதிகளில் திருவுலா வருகின்றார். தேரோடும் வீதிகளில் தொன்றுதொட்டு வீடுகள் நிறைந்திருப்பதின் காரணம் கடவுளைத் தரிசித்து, அவருடைய திருவருளைப் பெற்றுய்யும்பொருட்டென்பது நன்கு விளங்கும். வீடுகளில்லாத வீதிகள் பாலை நிலத்துக் கொப்பாகிய பாழ்வீதியேயாகும். பாழ் வீதியில் பரமபதியை யெழுந்தருளப் பண்ணுவது அவருடைய திருநோக்கத்துக்கும், ஆன்மாக்களுடைய அபிப்பிராயத்துக்கும் மாறுக வீண் இடம்பத்திற் செழுந்தருளப்பண்ணியதேயாகும். வீடில்லாத வீதிகளில் வீணுக்குக் கடவுளை எழுந்தருளப்பண்ணுவோர் ஐம்பெரும் அதிபாதகரே யாவர்.

இத்தலங்கண்டோர் மனதைக்கவரும் வனப்புவாய்ந்த நான்கு திருவீதிகளையும், நான்கு வீதிகளின் உட்புறங்க

ளில் நான்கு தீர்த்தங்களையும், நான்கு தீர்த்தங்களின் மத்தி
யில் அழியாத ஆகாய மளாவிய அழகிய பூர்வீகச் சித்திரப்
பாவைகள் நிறைந்த திருக்கோபுரந் திருமதில்களையுடைய
திருக்கோயிலையு முடையது. கோயிலின் வெளிப்புறத்தில்
கோபுரவாயி இ ்கு வடக்கில் வாகன மண்டபமிருந்த தானத்
தில் கோபு த ின் வடகிழக்கு மூலைக்கும் இருக்குவேத
பாடசாலைக் க -டடத்தின் மேலைப்புறக் கோடிக்கும் இடை
யில் 9 அடி அகலமுடைய சந்தும்; கோபுரவாயிலுக்குத்
தெற்கில் விறகுவாடி ஒட்டுக்கட்டிட மிருந்த தானத்தில்
கோபுரத்தின் தென்கிழக்கு மூலைக்கும் எசுர்வேத பாடசா
லைக் கட்டிடத்தின் மேலைப்புறக்கோடிக்கும் மத்தியில் 10
அடி அகலமுடைய சந்தும்; தெற்கு மதிலுக்கும் பிரமதீர்த்
தத்திற்கும் நடுவில் 50 தென்னம்பிள்ளைகள் சென்ற வருடத்
தில் வைத்து இழந்துபோன தானத்தில் மூன்று சலதாரை
அறாத்தோடிப் பெரும் பள்ளங்களும், 24 அடி அகலமு
முடைய படுகையும்; மேலை மதிலுக்கும் உருத்திர தீர்த்
தத்திற்கும் இடையில் இரண்டு சலதாரை அறாத்தோடிப்
பெரும் பள்ளங்களும், தெற்கில் 12 அடி வடக்கில் 9 அடி
அகலமுமுடைய படுகையும்; வடக்கு மதிலுக்கும் திரு
ஞான தீர்த்தத்திற்கும் நடுவில் இரண்டு சலதாரை அறாத்
தோடிப் பெரும் பள்ளங்களும்; 6 தென்னை மரங்களும்,
10 அடி அகலமுமுடைய படுகையு மிருக்கின்றன. மேற்படி
சந்துகளும் படுகைகளுமாகிய கோவிலின் புறக்கோடி வெளி
கள் நீண்ட காலமாக மலசலங் கழிப்போர்களுடைய அநு
போகத்தி லிருந்துவருகின்றன. மேற்படி புறக்கோடிகளின்
எட்டுத் திக்குகளிலும், எட்டுப் பலிபீடக் கற்க ளடித்து
வைத்து 23—5—35ல் இராத்திரி 9 மணி சுமாருக்கு
சந்திரசேகர மூர்த்தமாகிய சதாசிவப்பெருமானை சூரியப்பிரபை
யில் கோவிலுக்குட் பிரகாரங்களிலும், கோவிலுக்கு வெளி
யில் மேற்படி புறக்கோடிகளிலும் எழுந்தருளப்பண்ணினார்
கள். இங்ஙனம் புறக்கோடிகளில் எழுந்தருளப்பண்ணியது
மு. சுவாமிநாத உபாத்தியாயருடைய வேலி வெட்டியதை
க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியாரவர்களை அழைத்துக்
கொண்டுவந்து காண்பித்தது போலவும்; மகாதேவ ஞான

தேசிக சுவாமிகளை அழைத்துக்கொண்டுவந்து காண்பித்தது போலவும், சந்திரசேகரப்பெருமானை எழுந்தருளப்பண்ணிக் கொண்டுவந்து காண்பித்தார்கள் எனினும், மேற்படி புறக் கோடிச் சந்துகளில் சந்திரசேகரப்பெருமான் புறப்பாடா யிப்போன அலங்கோலமானது, இதர சனங்களுக்குத் தெரி யாமல் கொலைக் குற்றவாளியைக் கொலைக் களத்திற்குக் கொண்டுபோவதுபோலவும்; இராசத்துரோகக் குற்றவாளி யைச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோவதுபோலவுமிருந்தது. மேற்கூறிய அறுத்தோடிப் பெரும் பள்ளங்களைத் தாண்டும் போது சந்திரசேகரர் தப்பியது அரிதினு மரிதேயாகும். மேற்படி புறக்கோடிகளின் மதிலோரங்களில் எட்டுப் பலி பீடக் கற்களை வைத்திருப்பதின் காரணம் புலப்படவில்லை. ஆனால் சிலர் திக்குப்பாலகர்களை வரவழைத்துத் தாபித் திருப்பதாகக் கூறுகின்றார்கள். பூசையின்றி யிருப்பதால் உண்மை யென்று நம்புவதற் காதாரமில்லை. அன்றியும் திக்குப்பாலகர்கள் குருக்களுக்குக் கீழ்ப்பட்டவர்களுமல்ல; குருக்கள் அபிப்பிராயப்படி நடக்கக் கடமைப்பட்டவர்களு மல்ல; குருக்களுடைய அபிப்பிராயப்படி நடக்கக் கடமை யுடையவர்களானால் தென்றிசைக் கதிபனாகிய இயமனுக்குக் குருக்களைச் சார்ந்தவர்களிடத்தில் எவ்வித வேலையுமில்லை; வைரவனுடைய வாகனங்கள் விருத்தியடையக் காரணமு மில்லை. சோமசுந்தரக் குருக்கள் இக்கோயிற் பூசைக்கு வந்த பின்னர் நடைபெற்ற இரண்டு கும்பாபிடேகங்களில் முதற் கும்பாபிடேகத்தில் 'வைரவர், நவக்கிரகங்கள்' என் னும் மூர்த்திகளையும்; இரண்டாங் கும்பாபிடேகத்தில் 'துர்க்கையம்பாளையும்' சுவாமி கோவிலுக்குள் ளிருந்து வெளிப்படுத்திய காரணத்தினாலும்; கோவிலின் புறக்கோடி மதிலோரங்களில் எட்டுப் பலிபீடக் கற்களில் திக்குப்பால கர்களை வரவழைத்துத் தாபித்ததுபோற் பாவனைகாட்டி, அகாரணமாகச் சந்திரசேகரப் பெருமானைப் புறக்கோடிச் சந்திற் புறப்பாடுசெய்த காரணத்தினாலும் மேற்படி சோம சுந்தரக் குருக்கள் சுயலாபங்கருதி சகலகலாவல்லபரைப் போல நடித்து, குயில் காகத்தினுடைய கூட்டிற் புகுந்து, அதிலிருந்த முட்டையைக் கீழே தள்ளி யுடைத்துவிட்டு,

தன் முட்டையை யிட்டுவைத்து, தன் குலத்தை விருத்தி செய்துகொள்வதுபோல வீரசேகர மகா முனிவருடைய திருப்பணிக்குக் குற்றங் கற்பித்து செட்டிப்பிள்ளைகளை யேமாற்றிவிட்டாரென்பது அறிவாளிகளுக்கு விளங்காமற் போகாது. 'தெய்வீகத் திருவுருவாய் சிவஞானத்தவவடிவாய்' விளங்கும் வீரசேகரமகாமுனிவருடைய பிரதிட்டைக்குக் குற்றங்கற்பித்த மேற்படி சோமசுந்தரக் குருக்கள் எந்தக்காரியத்தைச் செய்யமாட்டார்? இஃதொருபுறமிருக்க

கடவுள் 'ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்' என்னும் ஐந்தொழில்களையுஞ் செய்யாமற் செய்யும்பொருட்டு 'நிலம், நீர், தீ, காற்று, வெளி, ஞாயிறு, திங்கள், ஆன்மா' என்னும் எட்டுத் திருவுருக்கொண்டு, இவ்வுலகினைத் தோற்றுவித்தருளினர். இதற்குப் பின்வருந் தேவாரத்திருப்பாசுரங்கள் தக்க சான்றாகும்.

இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
யியமான னாயெறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
யாகாசமா யட்ட மூர்த்தியாகிப்
பெருநலமுங் குற்றமும் பெண்ணுமாணும்
பிறருருவுந் தம்முருவுந் தாமேயாகி
நெருநலையா யின்றாகி நாளையாகி
நிமிர்புன் சடையடிக ணின்றவாறே.

(திருநாவுக்கரசுநாயனார்.)

பற்றுமாகி வானுளோர்க்குப் பல்கதிரோன் மதிபார்
எற்றுநீர்தீக் காலுமேலை விண்ணியமானனோடு
மற்றுமாதோர் பல்லுயிராய் மாலயனும் மறைகள்
முற்றுமாகி வேறுமானான் மேயது முதுகுன்றே.

(திருஞானசம்பந்தர்.)

தரிக்குந்தரைநீர் தழல்காற்றந்தரஞ் சந்திரன்சவிதா வியமானனானீர், சரிக்கும்பலிக்குத் தலைபங்கையேந்தித் தையலார்பெய்யக் கொள்வதுதக்கதன்றால், முரிக்குந்தளிர்ச்சந் தனத்தோடுவேயுமுழவுங் குத்திரைக்கைகளால் வாரிமோதி, அரிக்கும்புனல்சேரரிசிற் றென்கரை யழகார்திருப் புத்தூரழகனீரே. (சுந்தரர்.)

இவ்வுலகந் தோன்றியபின்னர், 'எண்ணிறந்தகோடி இந்திரர்களும், நூறு கோடி பிரமர்களும், ஆறு கோடி நாராயணர்களும்' கழிந்தனர். இஃது பின்வருந் தேவாரத் திருப்பாடலால் நன்கு விளங்கும்.

நூறுகோடி பிரமர்க ணொந்தினர்
ஆறுகோடி நாராயண ரங்ஙனே
ஏறுகங்கை மணலெண்ணி யிந்திரர்
ஈறிலாதவ னீச னொருவனே. (திருநாவுக்கரசர்)

சிவபெருமான் எக்காலமும் அழிவில்லாத 'பொன் வெள்ளி இரும்பு' என்னும் மூவரண்களாகிய முப்புரங்களை 'அதியரைபமங்கை' என்னும் அதிகைத்தலத்தில் புன்னகைகொண்டெரித்து, அதிற் பிழைத்திருந்த மூவரில் இருவர் துவாரபாலகர்களாக திருக்கோயில் வாயில் காக்கவும்; ஒருவன் நடனகாலத்தில் குடமுழா வொலிக்கவும் அனுக்கிரகஞ் செய்தபின்னர் எண்ணிறந்த இந்திரர்களும், அநேகம் பிரமர்களும், பல நாராயணர்களும் இறந்தனர். இதனைப் பின்வருந் தேவார திருவாசகத் திருப்பாசுரங்களால் நன்குணரலாகும்.

மூவெயில் செற்றஞான் றுய்ந்தமூவரில்
இருவர்நின் றிருக்கோயிலின் வாய்தல்
காவலாள ரென்றேவிய பின்னை
யொருவ னீகரிகா டரங்காக
மானைநோக் கியோர் மாநடமகிழ
மணிமுழா முழக்கவருள் செய்த
தேவதேவநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொழிற் றிருப்புன் கூருளானே. (சுந்தரர்)

எண்ணுடைமூவ ரிராக்கதர்க ளெரிபிழைத்துக்
கண்ணுதலெந்தை கடைத்தலை முன்னின்றதன்பி
னெண்ணிலியிந்திர ரெத்தனையோ பிரமர்களு
மண்மிசைமால்பலர் மாண்டனர்காண் டோணோக்கம்.

(மாணிக்கவாசகர்)

கோடி பிரமர்களிறந்தால் திருமால் ஆலிலைமேற் பள்ளி கொள்வர்; கோடி திருமால்களிறந்தால் சிவபெருமான் அருட் புன்னகைகொள்வர். இஃது பின்வரும் அருணகிரி யந்தாதிப் பாடலால் நன்கு விளங்கும்.

> கோடிவிதி மாளிற் றலாலிலைக மலக்கண்ண
> னேடி வடவா லுறங்குமே—நாடுங்கா
> லக்கண்ணர் கோடி யழியி னருணகிரி
> நக்கனருள் சற்றே நகும். (குகைநமச்சிவாயதேவர்.)

உலகந்தோன்றிய காலத்தே ‘சூரன், சோமன், வன்னியன்’ என்னும் மூன்று தமிழர்கள் உலகினை ஆள்வாராயினர். ‘சூரன்’ என்னும் பெயர் சூரியனுக்கிருத்தல்பற்றி, சூரனைச் ‘சூரியன்’ எனவும்; ‘சோமன்’ என்னும் பெயர் சந்திரனுக்கிருத்தல்பற்றி, சோமனைச் ‘சந்திரன்’ எனவும்; ‘வன்னி’ என்னும் பெயர் அக்கினிக்கிருத்தல்பற்றி, வன்னியனை ‘அக்கினி’ எனவுங் கூறுவாராயினர். சூரன் மரபோருக்கு ‘வேளிர், நாகர், செம்பியர், சோழர், மழவர், சென்னியர், கிள்ளியர், கண்டர், வாணதிரையர், சாளுவர், வன்னியர், தேவர், வாண்டையர், தொண்டைமர், பல்லவர், காடவர்’ முதலிய அநேகம் பட்டப்பெயர்களும்; சோமன் மரபோருக்கு ‘பாண்டியர், செழியர், வழுதியர், மாறர், பஞ்சவர், கௌரியர், தேவர்’ முதலிய பட்டப்பெயர்களும்; வன்னியன் மரபோருக்கு ‘வன்னியர், வில்லவர், கொங்கர், குடகர், குட்டுவர், கோதையர், உதியர், சேரர், பொறையர்’ முதலிய பல பட்டப்பெயர்களுமுண்டு. பட்டப்பெயர்களில் ‘அநேகம் பெயர் காரணப்பெயராயும்; பல பெயர் இடுகுறிப்பெயராயும்; சில பெயர் சிறப்புப் பெயராயும்’ வழங்குகின்றன. ‘சூரன், சோமன், வன்னியன்’ என்னும் மூவரையர் மரபோர்கள் தொன்றுதொட்டு உலகினை ஆண்டார்களென்பதற்கு “பட்டப்பெயர்கள், நகரங்களின் பெயர்கள், நாடுகளின் பெயர்கள், கிராமங்களின் பெயர்கள், திருக்கோயில்களின் பெயர்கள், தெய்வத் திருவுருவங்களின் பெயர்கள், ஆறுகளின் பெயர்கள், ஏரிகளின் பெயர்கள், கால்வாய்களின் பெயர்கள், சிலாசாதனங்கள், செப்பேட்டுச்

சாதனங்கள், சங்க நூற்கள், காவியங்கள், பன்னிரு திருமுறைகள், நாலாயிரப் பிரபந்தம், கலிங்கத்துப்பரணி, குலோத்துங்கன்கோவை, நந்திக்கலம்பகம், குலோத்துங்க சோழனுலா, விக்கிரமசோழனுலா, இராசராசசோழனுலா" முதலியவைகளே தக்க சான்றாகும். அன்றியும் மேற்படி கலிங்கத்துப்பரணியில் கூறப்பெற்ற "தன் மகனையும் ஆவின் கன்றையும் சமனாகப் பாவித்த மனு; மனுவின் மகனாகிய இக்குவாகு; இக்குவாகுவின் மகனாகிய விகுக்கி; விகுக்கி மகனாகிய புரஞ்சயன்; ஒரு துறையில் புலியும், மானும் நீருண்ண அரசுபுரிந்த மாந்தாதா; தேவேந்திரனுக்குதவியாக வலாசுரனைக்கொன்ற முசுகுந்தன்; திருப்பாற்கடலைக் கடைந்து, தேவர்களுக்குத் திருவமுதளித்த நிமி (பிருது); புறவுக்காக அதனைத் துரத்திவந்த பருந்துக்கு தன் தசை முற்று மரிந்துகொடுத்த செம்பியன் (சிபி); சோழமண்டல மென்று பெயரிட்ட சுராதிராசன்; புலிக்கொடிகொண்ட இராசகேசரி, பரகேசரி; காலனுக்கிது வழக்கென வுரைத்த கிள்ளிவளவன்; காவிரிப்புனல் கொணர்ந்த காந்தமன்; இவ் வுலகமும் மேலுலகமும் வென்ற இராசேந்திரன்; (சுரகுரு); இந்திரனைப் புலியெனக் கொடியில்வைத்த சித்திரன் (சித்திர ரதன்) புணரியொன்றிடை யொன்றுபுகவிட்ட (பாம்பன் என்னுங் கப்பலோடுங் கால்வாயை வெட்டிய) பாம்பன்; தன் உதிரத்தை பிச்சை கொடுத்த ........................; வாயுதேவனை வலிந்து ஏவல்கொண்ட ........................; கருவூரில் 'மதிட்கரை' என்னுமிடத்திலிருந்த 'தேங்குதூங் கெயில்' என்னும் அரணையழித்த குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன்; தஞ்சை இராசராசேச்சரத்தில் சுடர்மணித் திரள் விமானம் வான்மிசையுயர்த்த தஞ்சை ராசராசன்; பாரதப்போரில் தருமனுடைய கடற்படைக்கு உதவிசெய்த ....................; நாகர் மகளை மனைவியாகக்கொண்ட சூரவாதித்தன்; களவழிக் கவிதைகேட்டுக் கணைக்காலிரும் பொறைக்குக் கால் விலங்கை வெட்டி அரசு கொடுத்த செங்கணான் (கோச்செங்கட்சோழன்); காவிரிக்குக் கரை கட்டி, முகரிகண்ணழித்து, குருமியை வென்று, பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்துப் பட்டினப்பாலைகொண்ட

கரிகாற்பெருவளவன் (க ரி கா ல ன்); சேர பாண்டியர்களுடைய முடிகளைப் பிடுங்கித் தன் முடிமேல் சூட்டிக்கொண்டு, அவர்களுடைய தலைகளில் கிழிகள் சுற்றிவைத்து விளக்கேற்றிவைத்த மும்முடிசோழன் (மூவரையன்); வேழத்தை ஆகாயத்திற்செலுத்தி விண்ணுலகை வென்ற ..............; ஈழமும் மதுரையும் சிதைத்த வீரநாராயணபராந்தகன்; சதய நாள் உதியர் மண்டலத்தில் உதகை வென்ற கோராசகேசரி இராசராசன்; களிறு கங்கை நீருண்ண, கடாரங்கொண்ட இராசேந்திரன்; கம்பிலிநகரைக் கொளுத்திச் சயத்தம்பம் நாட்டிய வீரராசேந்திரன்; கொப்பைப் போர்க்களத்திலே முடி சூட்டிய ஆனைச்சேவகன் (நிருபேந்திரன்) கலிங்கத்தை வென்ற விசயதரனான குலோத்துங்கன்" என்னும் சூரன் மரபோர்களில் மேற்படி சூரன் மகனாகிய 'மனு' திருவாரூரை இராசதானியாகக்கொண்டு, உலகினை ஆளும் நாளில் ஆவின் கன்றின்மேல் தேரைச் செலுத்திக்கொன்ற தன் மகனைத் தேர்க்காலிலிடுவித்தானென்று பெரிய புராணத்தில் மனு நீதிகண்ட புராணங் கூறுதலினாலும்; மனு மரபில் வந்த 'முசுகுந்தன்' 'காவிரிப்பூம்பட்டினம்' என்று வழங்கும் புகார்ப்பட்டினத்தை இராசதானியாகக்கொண்டு, அரசாளுங்காலத்திலே தேவலோகஞ் சென்று, தேவேந்திரனுக்குதவியாக வலாசுரனைக் கொன்று, தேவேந்திரன் கொடுத்த " திருட்டு வெளியாக்கும் வெள்ளிடைமன்றம், 'கூன் குறள் ஊமை செவிடு பெருவியாதி' போக்கும் இலஞ்சிமன்றம், 'நஞ்சருந்தல் பாம்புகடித்தல் பேய்பிடித்தல்' நீக்கும் நெடுங் கல்நின்றமன்றம், 'பொய்த்தவஞ் செய்வோர் வியபசாரஞ் செய்வோர் வருவதுரையா வமைச்சர் பிறர்மனைநயப்போர் பொய்யுரைப்போர் புறங்கூறுவோர்' என்பவர்களைப் பூதம் புடைத்துண்ணும் பூதசதுக்கம், 'அரசன் நீதி தவறினாலும் அரசனுக்குத் தீமை நேரிடுவதாயிருந்தாலும்' பாவைநின்றழும் பாவைமன்றம்" என்னும் ஐவகை மன்றங்களையுங் கொணர்ந்து, மேற்படி புகார்ப்பட்டினத்தில் தாபித்தானென்று சிலப்பதிகாரங் கூறுதலினாலும்; முசுகுந்தன் மரபில் வந்த 'செம்பியன்' சரண் புகுந்த புறவுக்காக அதனைத் துரத்திவந்த வல்லூறாகிய பருந்துக்கு தன் தசை

முற்று மரிந்துகொடுத்தும், அப்புறவினிடைக்குச் சமனுகாமையால் தானுந் தலையிலேறிச் சமனுக்கிக் கொடுத்தானென்று சங்கநூற்களிலொன்ருகிய புறநானூறு கூறுதலினுலும்; திருவாரூர்த் திருக்கோயிலுண்டாகிய காலத்தை "ஒருவனுயுலகேத்த நின்றநாளோ,— ஒருருவே மூவுருவமானநாளோ,— மருவனுய் மண்ணும் விண்ணுந் தெரித்தநாளோ" என்று திருவாரூர்த் தேவாரங் கூறுதலினுலும் உலகந்தோன்றிய காலத்தே தெய்வத்தன்மை பொருந்திய தமிழும், கடவுளிடத்தில் அன்புமிக்க தமிழ் மக்களும், நீதிநிறைந்த 'சூரன் சோமன் வன்னியன்' என்னுந் தமிழரசர்களும், சைவசமயமாகிய தமிழ்ச்சமயமும் உண்டாயினவென்பது சொல்லாமலே விளங்கும். அன்றியும் "தெய்வீகத்திருமொழியும், ஒப்புயர்வற்ற வுயர்மொழியும், தவவலிமிக்கத் தனிமொழியும், ஞானனந்த நன்மொழியும், பொருட்சுவைசெறிந்த பூர்வீக மொழியும், அற்புதம் நிறைந்த அருட்பெருமொழியும், சித்தியளிக்கும் முத்தமிழ் மொழியும், நீதிநிறைந்த ஆதிமொழியும், ஐந்துமூன்றும் அமர்ந்த மொழியும்" ஆகிய செந்தமிழ்மொழி தெய்வத்தன்மை பொருந்தியதென்பதற்கு

> தேவர்குறளுந் திருநான் மறை முடிவும்
> மூவர்தமிழும் முனி மொழியும்—கோவை
> திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
> ஒருவா சகமென் றுணர்.

என்று ஆன்றேர் கூறியவற்றுள், தமிழ் மறை நான்கும் இறந்தொழிந்தனவெனினும் 'எம்மொழியினரும், எம்மதத்தினரும்' சம்மதித்துப் போற்றுநின்ற திருக்குறளும்; "சூலைநோயகற்றுவித்தல், நீற்றறையைக் குளிர்ச்சியாக்குவித்தல், யானையை வணங்கச்செய்வித்தல், கருங்கல்லைத் தெப்பமாக்குவித்தல், கதவந்திறப்பித்தல், விடமிறக்குவித்தல், பொற்றுளங்கொடுத்தல், முத்துப்பல்லக்கு முத்துச்சின்னங் கொடுத்தல், கதவமடைப்பித்தல், அக்கினியில் வேகாதிருத்தல், ஆற்றிலெதிரேறிச் செல்லல், ஆண்பனையைப் பெண்பனையாக்குவித்தல், முத்துப்பந்தர் கொடுத்தல், என்பைப்

பெண்ணாக்குவித்தல், நஞ்சமிறக்குவித்தல், பொற்கிழி கொடுத்தல், ஆற்றிலோடஞ் செலுத்துவித்தல், முதலையுண்ட பிள்ளையைச் சென்றவயது முதிர்ச்சியோடு அழைப்பித்தல், ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்தில் வருவித்தல், நென்மலையைப் பூதகணங்களா லெடுப்பித்தல், செங்கல்லைப் பொன்னாக்குவித்தல், ஆற்றுப்பெருக்கைத் தடுத்துக் குறுக்கே வழிவிடுதல், மறைந்த கண் கொடுத்தல், மழை பெய்வித்தல், மழை ஓய்வித்தல், பரவையார் வீட்டுக்குப் பரமன் தூது போதல்'' முதலிய அரிய பெரிய அற்புதங்களைச் செய்தருளிய மூவர் தேவாரமும்; ஏழுகோடி மகா மந்திரமாகிய அகத்தியமுனிவர் மந்திரகாவியமும்; 'நரியைப் பரியாக்குவித்தல், பரியை நரியாக்குவித்தல், வைகையைப் பெருக்குவித்தல், வைகைப்பெருக்கை யடைக்க மண் சுமத்தல், ஊமைப் பெண்ணைப் பேசுவித்தல்' முதலிய அற்புதங்களைச் செய்தருளிய திருவாசகந் திருக்கோவையும்; 'திருமூலர் மூவாயிர வருடம் நிட்டையிலிருந்து, வருடத்துக்கொரு பாடலாகத் திருவாய் மலர்ந்தருளிய' திருமந்திரமும் ஆகிய தமிழ்மறைகளிருத்தலும்; அன்றியும் 'நாலாயிரப்பிரபந்தம், அருட்பா' என்னும் மறைகளிருத்தலும்; 'வாதம், வைத்தியம், மந்திரம், சோசியம், யோகம், யோகமுடிவாகிய ஞானம்' முதலியன நிறைந்த எண்ணிறந்த சித்தர் நூற்களிருத்தலும்; 'கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத வுந்தியார்' என்னும் சீவகாருணிய வைராக்கிய நூற்களிருத்தலும்; 'சிவஞானபோதம், ஒழிவிலொடுக்கம், வள்ளலார்' முதலிய அநேக ஞான நூற்களிருத்தலும்; "ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, வெற்றிவேற்கை, மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிவெண்பா, நீதிநெறிவிளக்கம், திரிகடுகம், நான்மணிக்கடிகை, அறநெறிச்சாரம், ஆசாரக்கோவை, ஏலாதி, நாலடியார்'' முதலிய நீதிநூற்களிருத்தலும்; "பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, கலிங்கத்துப்பரணி, மூவருலா, கலம்பகம், கோவை'' முதலிய தமிழரசர் பரம்பரைத் தொடர்பு நூற்களிருத்தலும்; 'அந்தாதி, கலம்பகம்,

சதகம்' முதலிய எண்ணிறந்த தோத்திர நூற்களிருத்தலும்; 'திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி நிகண்டு' முதலிய இலக்கிய நூற்களிருத்தலும்; 'தொல்காப்பியம், நன்னூல், தண்டியலங்காரம், யாப்பருங்கலக்காரிகை, இறையனாரகப்பொருள், வீரசோழியம்' முதலிய அநேகம் இலக்கண நூற்களிருத்தலும் தக்க சான்றாகும். தமிழ் மக்கள் 'சிவகாருண்ணியமும், ஈசுரபத்தியும்' நிறைந்தவர்களென்பதற்கு 'தமிழ் மக்களில் பெரும்பகுதியோர் புலாலுண்ணாமைச் சைவராயிருத்தலும்; தமிழ் மண்டலத்தில் திருக்கோயிலில்லாதவூர்களில்லாதிருத்தலும் தக்க சாட்சியமாகும்.

உலகந்தோன்றிய காலமுதல் "தமிழ்மொழியும், தமிழரசரும், தமிழ்மக்களும், தமிழ்ச்சமயமாகிய சைவசமயமும் இருந்துவருகின்ற தமிழ் மண்டலத்திலே சுமார் 500 வருடங்களுக்குமுன் கன்னடியரும், கன்னடமொழியுங் குடியேறியதுபோலவும்; 420 வருடங்களுக்குமுன் தெலுங்கரும், தெலுங்குமொழியுங் குடியேறியதுபோலவும்; 340 வருடங்களுக்குமுன் மகராட்டிரரும், மகராட்டிர மொழியுங் குடியேறியதுபோலவும்; 200 வருடங்களுக்குமுன் துருக்கரும், துருக்கு மொழியுங் குடியேறியதுபோலவும்; 100-வருடங்களுக்குமுன் ஆங்கிலேயரும், ஆங்கிலமொழியுங் குடியேறியதுபோலவும்; 7000-வருடங்களுக்குமுன் மத்திய ஆசியாவினின்று நானே பிரமமென்னுங்கொள்கையுடைய சுமார்த்த மத ஆரியரும், நாகரமொழியின் திரிபாகிய வரிவடிவமில்லாத ஆரியமொழியுங் குடியேறின. ஆரியர்கள் தங்கள் வாக்கினின்று தோன்றிய சுலோகங்களை வேதமெனவும், அஃது 'எழுதாக்கேள்வி' எனவுங் கூறுவாராயினர்கள். அக்காலமுதல் வேதத்துக்கு 'எழுதாக்கேள்வி' என்னும் தமிழ்ப் பெயர் வழங்கலாயிற்று. தமிழ் மண்டலத்தின் ஒரு பகுதியாகிய சேர மண்டலத்தில் கி. பி. 900-த்துக்குப்பின்பு 'தமிழும் ஆரியமும்' ஒன்றுகூடி 'மலையாளம்' என்னும் மொழியாகி வழங்குவதுபோலவும்; சமீபகாலத்தில் சௌராட்டிரமொழிக்கு வரிவடிவம் ஏற்பட்டதுபோலவும்; ஆரியர்கள் குடியேறி அநேக ஆண்டுகளுக்குப்பின்பு, ஆரிய

மொழிக்கு 'தமிழ், தெலுங்கு, கன்னடம்' முதலிய மொழிகளின் எழுத்துக்களில் பல எழுத்துக்களைத் திரட்டி வரிவடிவமாக்கி எழுதத்தொடங்கினார்கள். இதற்கு ஆரிய மொழியில் தமிழ், தெலுங்கு, கன்னடம்' முதலிய மொழிகளின் எழுத்துக்களிருத்தலும்; 'எழுதாக்கேள்வி' என்னும் பெயர் தமிழ் மொழியாயிருத்தலும் தக்க சான்றாகும். அன்றியும் 'நாகரமொழியும், ஆரியமொழியும்' அறிந்தவர்களுக்கு இந்த உண்மை நன்கு விளங்கும். சிலர் ஆரிய மொழியைத் தேவமொழி என்கின்றார்கள். ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளவும்; கடிதங் கணக்குகள் எழுதவும்; உரை சொல்லவும்; 'அறிவு, சிவகாருணியம், ஈசுர பத்தி' முதலியனவிருத்தியடையவும் மார்க்கமில்லாத யாரிகாலத்து மண்டுகமொழிபோன்ற இவ்வாரிய மொழியைத் தேவமொழி யென்பது குதிரைக்குக் கொம்புண்டென்பது போலாகும். 'ஆரியரும், ஆதி சைவரும்' தமிழ் மக்களைப்பயமுறுத்தி, எமாற்றிப் பொருள் பறிக்கவும்; திருக்கோயில்களைச் சுயாதீனப்படுத்திக் கொள்ளவும் எண்ணங்கொண்டு 'ஆகமங்கள், உபநிடதங்கள், புராணங்கள், தலபுராணங்கள், இதிகாசங்கள்' முதலிய ஆரிய நூற்களை எழுதிவைத்திருக்கின்றார்கள். இவ்வாரிய நூற்களில் தமிழ்மக்கள் போற்றித்துதித்து வணங்காநின்ற தமிழ்த் தெய்வமாகிய 'சிவபெருமான்' அழகிய திருமுகமுடையராய் விளங்குங் காரணத்தினால் 'ஐமுகன்' எனப் பெயர்பெற்றார். (ஐ-அழகு) இதனையுணராமல் ஐமுகன் என்பதை "ஈசானம், தற்புருடம், அகோரம், சத்தியோசாதம், வாமம்" என ஐந்து முகங்களையுடையவரென்று கூறியிருக்கின்றார்கள். 'சிவலிங்கம்' முகமின்றி மொந்தாகாரமாயிருத்தலினாலும்; 'தெட்சணாமூர்த்தி, சபாநாயகப்பெருமான், சந்திரசேகரப்பெருமான், தியாகராசப்பெருமானாகிய சோமசுந்தரப்பெருமான், சங்கர நாராயணர், அர்த்தநாரீசுரர்' என்னும் சிவமூர்த்தங்கள், ஐந்துமுகமின்றி, ஒரேமுகமுடையனவாயிருத்தலினாலும்; இயற்கைக்கு மாறாக 'ஐமுகன்' என்னும் தமிழ்ப் பதத்திற்கு ஆரியமொழியில் ஐந்து பெயர் கூறுதலினாலும் ஆரியர் கூற்றுப் போலிக்கூற்றென்பது திண்ணமேயாகும்.

முன்னொருகாலத்திலே 'சைவர்களுக்கும், வைணவர்களுக்கும்' மதசம்பந்தமாகப் பெருத்த கலகமுண்டாயிற்று. அக்காலத்திலே "சைவர்கள் 'திருக்குற்றாலம்' முதலிய சில வைணவ திருக்கோயில்களைச் சிவ திருக்கோயில்களாக்கினர்கள், வைணவர்கள் 'திருநறையூர்மாடக்கோயில்' முதலிய சில சிவதிருக்கோயில்களை வைணவ திருக்கோயில்களாக்கினார்கள். அன்றியும் 'திருப்பழமுதிர்சோலை (திருமாலிருஞ்சோலையாகிய அழகர்மலை), திருவேங்கடமாமலை (திருப்பதி), தான்றோன்றிமலை' முதலிய தலங்களில் ஒரே திருமுகமுடையராய், வள்ளி தெய்வானை சமேதராய் விளங்கிய சிவ திருக்குமாரராகிய முருகக்கடவுளுக்கு திருநாமமாகிய திருமண்சாத்தி 'சீதேவி, பூதேவி' சமேதராய திருமாலாக்கினார்கள். சைவர்கள் முருகக்கடவுளுக்கு சூரபன்மாதியர்மீது 'திருப்போரூர்' என்னும் தலத்திலெழுந்த 'கோபாக்கினி' 'திருத்தணிகை' என்னுந் தலத்தில் 'ஆறுதலையடைந்த' காரணத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு, 'திருச்செந்தூர், திருத்தணிகை முதலிய தலங்களில் ஒருமுகமுடையராய் விளங்கிய முருகக்கடவுளுடைய அநேக திருவுருவங்களை அப்புறப்படுத்திவிட்டு, ஆறுதலை அதாவது ஆறுமுகமுடைய திருவுருவங்களை அமைத்து வழிபடுவாராயினர்கள். சிவபெருமானுக்கும், உமாதேவியாருக்கும் இளைய திருக்குமாரராய்த் திருவவதாரஞ்செய்த குமாரக்கடவுள் ஒரே திருமுகமும் இளமையும் அழகுமுடையராய் விளங்குங் காரணத்தினல் 'முருகன்' எனப்பெயர் பெற்றரென்பதை நன்குணரச் சத்தியில்லாத ஆரியநூற்காரர்கள் சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணினின்று ஆறுபொறிகள் தோன்றியதுபோலவும்; அப்பொறிகளாறும் கங்கை வழியாகச் சரவணப்பொய்கையை யடைந்து, ஆறு குழந்தை வடிவாய் விளங்கியதுபோலவும்; கார்த்திகை நட்சத்திரமாகிய ஆறு மாதர்கள் பால் கொடுத்து, அக்குழந்தைகளை வளர்த்தது போலவும்; உமாதேவியார் அக்குழந்தைகளாறையும் ஒன்றுகச் சேர்த்தெடுத்ததுபோலவும்; அக்குழந்தைகளாறும் ஒன்று சேர்ந்து ஆறு தலையும் ஒருடலும் இரண்டு காலும் பன்னிரு கைகளுடையனவாய் விளங்குவதுபோலவுங் கூறி

யிருக்கின்றார்கள். ஆறுடல் ஒருடலாகவும், பன்னிருகால் இருகாலாகவும் பொருந்தியது உண்மையாக இருக்குமே யானால் ஆறுதலை ஓர் தலையாகவும், பன்னிருகை இரு கை யாகவும் பொருந்தாதிருக்கக் காரணமில்லை. இஃதியற் கைக்கு மாறாக விருத்தலினாலும்; 'திருவாவினன்குடி' என்னும் பழநி, 'திருவேரகம்' என்னும் சுவாமி மலை முதலிய முருகர் தலங்களில் ஒரே திருமுகமுடைய குழந்தை வடிவாய் விளங்குதலினாலும்; எண்ணிறந்த சிவ தலங்களி லும், முருகர் தலங்களிலும் 'வள்ளி, தெய்வானை' சமேத ராய், ஒரே திருமுகமுடையராய் விளங்குதலினாலும் ஆரியர் கூற்று அநியாயக் கூற்றென்பது அறிவாளிகளுக்கு விளங் காமற் போகாது. 'சிவபெருமானுக்கும், உமாதேவியாருக் கும்' மூத்த திருக்குமாரராய்த் திருவவதாரஞ் செய்த 'விநாயகக் கடவுளை' ஆவணி மாசம் பூர்வ பக்கஞ் சதுர்த்தி யில் 'சிந்துரன்' என்பவனுடைய கொட்டாவியினின்று தோன்றினாரெனவும்; தக்கன் வேள்வியில் வீரபத்திராற் சிரமிழந்து, வடக்கு நோக்கிப் படுத்திருந்த யானைச் சிரத் தைக் கொய்து, பொருத்தி யெழுப்பிய காரணத்தினால் யானைமுகமுடையராய் விளங்குகின்றாரெனவும் ஆரிய நூற் கள் கூறுகின்றன. 'விநாயகர், முருகர்' இருவரும் சிவ பெருமானுக்கும் உமாதேவியாருக்கும் திருக்குமாரர்களாய்த் திருவவதாரஞ் செய்தவர்களென்பதற்கு பின்வருந் தேவாரத் திருப்பாசுரங்களே தக்க சான்றாகும்.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

(திருஞானசம்பந்தர்.)

நங்கடம் பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் னடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே. (திருநாவுக்கரசர்.)

## சந்திரசேகரர் புறக்கோடியிற் போயினர் என

ஆர்த்த மென் றெனையா ளுகந்தானை
யமரர் நாதனைக் குமரனைப் பயந்த
வார்த் தயங்கிய முலைமடமா னைவைத்து
வான்மிசைக் கங்கையைக் கரந்த
தீர்த்தனைச் சிவனைச் செழுந்தேனைத்
தில்லையம் பலத்துண் ணிறைந்தாடுங்
கூத்தனைக் குருமாமணி தன்னைக்
கோலக் காவினிற் கண்டுகொண்டேனே.

(சுந்தரர்.)

நாகருலகமென ஒருலக மிருப்பதாயும், அவ்வுலகத்தில் 'நாகர்' என்னும் பாம்புச் சாதியாரிருப்பதாயும், அவ்வுலகத்தை 'ஆதிசேடன்' என்னும் நாகராசன் அரசாள்வதாயும், அவ்வாதிசேடனுக்கு ஆயிரம் தலைகளிருப்பதாயும், அவன் இப்பூமியைத் தாங்கிக்கொண்டிருப்பதாயும், அவ்வாதிசேடனையே திருமால் பாயலாகக்கொண்டிருப்பதாயும் ஆரிய நூற்கள் கூறுகின்றன. இங்ஙனம் கூறுவதற்கறிகுறியாக 'திருவரங்கம் (பெரியகோயில்), திருச்சித்திரகூடம் (சிதம்பரம்), திருவநந்தபுரம், திருவண்பரிசாரம், திருவாட்டாறு, திருவித்துவக்கோடு, திருப்புளிங்குடி, திருக்கோளூர், திருத்தெற்றியம்பலம், திருவெள்ளியங்குடி, திருக்கவித்தலம், திருச்சிறுபுலியூர், திருஆதனூர், திருப்பேர்நகர் (கோயிலடி), திருப்புள்ளம்பூதங்குடி, திருக்கரம்பனூர் (உத்தமர் கோயில்), திருஅன்பில், திருவெஃகா, திருஎவ்வளூர்' முதலிய தலங்களில் திருமால் ஆதிசேடன்மீதிற் பள்ளிகொண்டிருக்கின்றார். ஆரிய நூற்களில் சொல்லியபடி ஒரு கோயிலிலேனும் ஆதிசேடனுக்கு ஆயிரந் தலைகள் காணப்படவில்லை. எல்லாக் கோயில்களிலும் ஐந்து சிரங்கள்தானிருக்கின்றன. 'திருவாலங்காடு, திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் (நாகேசுரசுவாமிகோவில்), திருநாகேச்சுரம், திருப்பாம்புரம், திருநாகூர், திருக்குடமருதூர், (கயினர் கோயில்)' முதலிய சிவதலங்களில் ஆதிசேடனுடைய திருவுருவம் தமிழரசர்களின் திருவுருவம்போலக் கிரீடமுடையனவாய் கிரீடத்தின்மீது ஐந்தலை நாகம் படம்விரித்துக் கவிந்துகொண்டிருப்பதுபோல விருக்கின்றன. 'திருவிரா

மேசுவரம்' முதலான அநேக தலங்களி ந்தலைநாகம்போல வும், ஒருதலை நாகம் இரண்டு சேர்ந்து பின்ன பலாடுவதுபோல வும் எண்ணிறந்த கோடி நாகப்பிரதிட்டைகள் செய்யப்பட் டிருக்கின்றன. இவைகளுள் எதுவுண்மையோ அது கட வுளுக்குத்தான் தெரியும். இப்படியேதான் 'நன்முக முடைய பிரமதேவனை நான்முகன் எனவும், ஈசுரனிடத்தில் பற்றுதலையுடைய இராவணனை பத்துத்தலையுடையவன் என வும்' எழுதியிருக்கின்றார்களென்பது சொல்லாமலே விளங் கும். இயற்கைக்கு மாருகக் கூறுவதெல்லாம் பொய்மையே யாகும்.

உலகம் நிலைபெற்று நடைபெறுவதற்குக் கருவியா யுள்ள கடவுளுடைய எட்டுத்திருவுருவங்களில் 'ஞாயிறு திங்கள், தீ, வாயு' என்னும் நான்கு திருவுருவங்களை ஆண் பாலாகவும்; 'நிலம், நீர்' என்னும் இரண்டு திருவுருவங் களை பெண்பாலாகவும்; ஆண்பாற்றிருவுருவங்கட்கு மனைவி மைந்தர்களிருப்பதுபோலவும்; பெண்பாற்றிருவுருவங்கட்கு கணவர்களிருப்பதுபோலவும்; 'ஞாயிறு, திங்கள், வாயு, இயமன், இந்திரன்' என்பவர்கள் பிறமாதரைப்புணர்ந்து புத்திரோற்பத்தி செய்ததுபோலவும்; நீராகிய பெண் பிற புருடனைச் சேர்ந்து எட்டு ஆண்குழந்தைகளைப்பெற்று எழு குழந்தைகளைக் கொன்றதுபோலவும் ஆரிய நூற்கள் கூறு கின்றன. இஃது உண்மையாகுமா? உண்மையாகுமே யானுல் விபசாரக் குற்றத்திற்கும், கொலைக்குற்றத்திற்கும் தண்டனையுண்டா? ஞாயிருகிய சூரியனுடைய மகன் வைவசுதமனுவாகிய 'இயமன்' எனவும்; சூரியன் புணர்ந்த குந்திதேவியை இயமன் புணர்ந்தான் எனவும்; 'இயமன்' ஆன்மாக்கள் செய்த பாவத்திற்குத் தக்க தண்டனை விதிக் கின்முன் எனவும் ஆரிய நூற்கள் கூறுகின்றனவே. இஃது உண்மையாகுமா? சூரியன் புணர்ந்த குந்திதேவி இயம னுக்குத் தாய் அல்லவா? இயமன் குந்திதேவியைப் புணர்ந்தது உண்மையாக விருக்குமேயானுல் அவன் தாயைப் புணர்ந்த பாவத்திற்கும், பிறன் மனைவியைப் புணர்ந்த பாவத்திற்கும் நரகத் துன்பத்தை யனுபவிக்கக் கடமைப்

பட்டவனாகிறான். ஆன்மாக்கள் செய்யும் பாவங்களுக்காக இருபத்தெட்டுக்கோடி நரகங்களிருக்கின்றன வெனவும்; அந்நரகங்களுக்கதிபதி 'இயமன்' எனவும்; அவன் பாவிகளுக்கு நரக தண்டனை விதிக்கின்றான் எனவும் ஆரிய நூற்கள் கூறுகின்றன. இயமன் பாவிகளுக்கு நரக தண்டனை விதிப்பது உண்மையாகுமானால் அவன் குந்திதேவியைப் புணர்ந்தானென்பது உண்மையாகாது. இயமன் குந்திதேவியைப் புணர்ந்ததுண்மையாகுமானால் இருபத்தெட்டுக்கோடி நரகமுண்டென்பதும், அந்நரகங்களுக் கதிபதி இயமனென்பதும் பொய்மையேயாகும். 'நல்வினை, தீவினை' என்னு மிருவினைக்கிடாகப் பிறவி தோன்றுவதால் நரகத்துன்பமுண்டென்பது குதிரைக்குக் கொம்புண்டென்பது போலாகும். ஆரியர்கள் 'தீர்த்தக்கரை, கோயில், கலியாணம், கருமாதி, சிரார்த்தம்' என்பவற்றின் முன்னிலையில் 'கற்பம், மனுவந்தரம், கலியுகம், தீவு, கண்டம், மேருமலை, திக்கு, வருடம், மாசம், வாரம், திதி, நட்சத்திரம், ஏழு நதிகள், தாய், தகப்பன், பாட்டி, பாட்டன், பாட்டனுடைய தாய், பாட்டனுடைய தகப்பன்' முதலிய பெயர்களையும்; 'அரிசி, பாக்கு வெற்றிலை, பழம், தேங்காய், எள்ளு, வெல்லம், பயறு, கறிகாய்கள்' முதலியவற்றின் பெயர்களையும் ஆரிய மொழியிற் சொல்லி, மந்திரஞ் சொல்வதுபோற் பாவனைகாட்டி, தமிழ் மக்களைப் பயமுறுத்தி ஏமாற்றிப் பொருள் பறித்துக் கொள்வதற்கொற்றுமையாக ஆரிய நூற்களை யெழுதிவைத்திருக்கின்றார்கள். ஆரிய நூற்களை நம்புவது ஆடு நரியை நம்புவது போலாகும். ஆரிய மொழியில் மந்திரஞ் சொல்வதுபோல முற்கூறியவற்றைச் சொல்லியேமாற்றும் ஆரிய மொழியாளருக்குத் தானங்கொடுப்பது 'பாலைக் கமரில் கவிழ்த்ததுபோலவும், விழலுக்கு முத்துலையிட்டு நீரிறைத்ததுபோலவுமாகும். பாத்திரமறிந்து பிச்சையிடாத குற்றத்திற்காக மறுமையிலுங் கொடுந் துன்பத்தையனுபவிக்க நேரிடும். 'வறிஞர், அங்கவீனர், பெருவியாதியோர், கடவுட்பத்தியுடையோர், மெய்ஞ்ஞானியர்' என்பவர்களுக்கு அன்னம் படைப்போர் இம்மையில் நன்மையையும், மறுமையில் பேரின்பத்தையு மடைவர்.

தமிழ் மண்டலத்தையாண்ட தமிழரசர்களில் மனு, இக்குவாகு, விகுக்கி, புரஞ்சயன், மாந்தாதா, முசுகுந்தன், நிமி, செம்பியன்' முதலியவர்கள் அயோத்தியாகிய கோசலை நாட்டை யாண்டார்களெனவும்; மேற்படி இக்குவாகுவின் புத்திரர் நூற்றுவர் எனவும்; இக்குவாகு மனுவினுடைய தும்மலில் மூக்கினின்று தோன்றினனெனவும்; மாந்தாதா யுவனச்சுவன் வயிற்றினுள்ளிருந்து தோன்றினன் எனவும்; முசுகுந்தனை குரங்குமுகமுடையவன் எனவும்; 'நிமி' இறந்த பின் அவன் உடலைக்கடைய அதினின்று சனகன் தோன்றினன் எனவும்; தமிழரசனையுலகினையாண்டு, 'அகத்தியன் பள்ளி அகத்தீச்சுரம்' முதலிய எண்ணில் சிவ தலங்களை யுண்டுபண்ணி, தமிழ்த் தெய்வமாகிய முருகக்கடவுளிடம் அனுக்கிரகம் பெற்று, யோகவாயிலாகக் காயசித்தியடைந்து; 'இலக்கணம் யோகம் மந்திரம் வாதம் வைத்தியம்' முதலிய நூல்களை யியற்றி, 'புலத்தியர் தன்வந்திரி' முதலிய எண்ணில் மாணாக்கர்களுக்கு அருள் செய்த 'அகத்திய முனிவர்' குடத்தினின்று மித்திரனுடைய வீரியத்திற்குத் தோன்றினரெனவும்; தொண்டைமான் கால்வழியிற் றோன்றி, மாவலிபுரத்தை இராசதானியாகக்கொண்டு, உலகினை ஏகாதிபதியாயாண்ட, தமிழ் மன்னனாகிய 'மாவலிச் சக்கரவர்த்தி'யை அவுணன் எனவும்; சோழன் மரபிற்றோன்றி, வாலிகொண்டாபுரத்தை இராசதானியாகக் கொண்டு, தமிழுலகினையாண்ட 'வாலி, சுக்கிரீபன், அங்கதன்' என்னும் தமிழரசர்களைக் குரங்குகளெனவும் ஆரிய நூற்கள் இயற்கைக்கு மாறாகக் கூறுகின்றன. இவ்வாறு கூறுவது அத்திமரம் பூத்தது என்பது போலவும்; வெள்ளைக் காக்கையைப் பார்த்தேன் என்பது போலவும்; மீனுக்குக் காலுண்டு என்பதுபோலவு மிருக்கின்றன. அன்றியும், உலகந்தோன்றிய காலத்திலே அதாவது முதலாவது பிரமப்பட்டத்தின் முதலிலே யுலகினையாண்ட 'மனு' என்னும் தமிழரசன் நூறு கோடி பிரமப்பட்டங் கடந்தபின்பு இற்றைக்கு ஏழாயிர வருடத்துக்குமுன் மத்திய ஆசியாவினின்று நந்தமிழ் மண்டலத்திலே குடியேறிய ஆரியமொழியில் 'மனுசுமிருதி' என்னும் நூலைச் செய்தானென்பதும்;

சந்திரசேகரர் புறக்( ாடியிற் போயினர் அக

அந்நூல் ஆரியர்களுக்குச் கமாயும், தமிழ் மக்களுக்குப் பாதகமாயும் எழுதியிருப் ம்; அந்நூலே மனு செய்த நூல் அல்லவென்பதற்குத் க சான்ற ும்.

ஆரியர்கள் ஆரியமொ பொய்மை நிறைந்த பல நூல்களியற்றி, வஞ்சகமில்லாத தமிழ் மக்களுக்கு 'வியப்பையும், திகிலையும்' உண்டுபண்ணி, மணமகன் மணக்கோலங் கொண்டு, குதிரைமீதேறிப் பெண்வீடு சென்று, உடன்பிறந்தாளிடம் தாலியைக்கொடுத்து, மணமகள் கழுத்திற்கட்டி, மணமகளைப் பல்லக்கில் அழைத்துக்கொண்டுவரும் வழக்கத்தை மாற்றி, 'மணமகனையும், மணமகளையும்' சோடியாக வைத்து, தீவளர்த்துத் தாலிகட்டும் வழக்கத்தையும்; இறந்தவர்களைப் பெரிய சாலில் வைத்துப் புதைக்கும் வழக்கத்தை நிறுத்தி, தீயிட்டுக் கொளுத்தவும்; முத்தி விளக்கு வைப்பதை நிறுத்திக் கருமாதி செய்யவும்; குரு பூசை செய்வதை நிறுத்திச் சிரார்த்தஞ் செய்யவும் ஏற்பாடு செய்து பொருள் சம்பாதிக்கும் வழியை யுண்டுபண்ணிக் கொண்டார்கள். அன்றியும், தொன்றுதொட்டு சாதிபேதமின்றி 'உலகினைப் பரிபாலிக்க அரசரும், பூமியைப் பரிபாலிக்க வேளாளரும், தொழில்கள் செய்ய பதினெண்கீழ்க் குடிமக்களு மிருந்துவந்த இத்தமிழ் மண்டலத்தில் 'பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்' என நான்கு சாதிகளுண்டு எனவும்; பிரமதேவருடைய முகத்தினின்று பிராமணரும், புயத்தினின்று சத்திரியரும், தொடையினின்று வைசியரும், பாதத்தினின்று சூத்திரரும் தோன்றினர்களெனவுங் கூறுவாராயினர்கள். இங்ஙனங் கூறுவது கருப்பையினின்று தோன்றும் இயற்கைக்கு மாறாக விருத்தலினால் போலிக் கூற்றேயாகும். 'வறுமையும் அசுத்தமும்' உடைய தமிழ் மக்களைத் தீண்டக்கூடாதவர்களென்று தாழ்த்திய காரணத்தினால் 'சைவசமயம்' குன்றவும், இதர சமயங்கள் விருத்தியடையவும் இடமுண்டாயிற்று. உலகந் தோன்றிய காலமுதல் தமிழ் மொழியும், சைவசமயமுமுடைய தமிழுலகத்திலிருக்கின்ற தமிழ் மக்கள் ஆரியநூற் கொள்கைக்கு உடன்படக் கடமைப்பட்டவர்கள் அல்ல; 'நானே பிரமம்"

என்னும் கொள்கையுடைய சுமார்த்தமத ஆரியர்களுக்கும் கூலிக்கு வேலை பார்க்கின்ற ஆதி சைவர்களுக்கும் சிவதிருக் கோயில்கள் சொந்தமல்ல; சைவசமய சம்பந்தமுடைய எல்லா வகுப்பினருக்கும் சொந்தமேயாகும். முற்றறிவும் முற்றுத்தொழிலுமுடைய கடவுள் எங்கும் நீக்கமற நிறைந் திருப்பதால் சிற்றறிவும் சிறு தொழிலுமுடைய மக்க ளிடத்தில் சமபாவனையின்றி சாதி பேதம், தீண்டாமை, 'உயர்வு தாழ்வு' முதலிய குற்றங்களைக் கற்பிப்பது கடவுளைக் குற்றங்கூறுவதேயாகும். கடவுளிடத்தில் அன் புடையவர்கள் எவ்வகுப்பினராயிருந்தாலும் அவர்கள் கட வுளைப் பூசித்து வழிபடக் கடமைப்பட்டவர்களே யாவர். இதற்கு 'கண்ணப்ப நாயனாரும், சாக்கிய நாயனாரும்' தக்க சான்றாவர். கடவுளிடத்தில் அன்பின்றி கூலிக்கு வேலை செய்வோர் எவ் வகுப்பினராயிருந்தாலும் கடவுளைப் பூசிக் கத்தகாத சிவத் துரோகிகளே யாவர். சிவத் துரோகிகள் இம்மையில் வறுமையையும் மறுமையில் நாய்ப் பிறவியையு மடைவர். பொது நன்மைக்கு விரோதமாக பொருளுக் காசைப்பட்டு பொய் சொல்லி புறக்கோடிப் பாழ்வெளிச் சந்திற் பரமபதியை யெழுந்தருளப்பண்ணியது மகா சிவத் துரோகமேயாகும்'. இம் மகா சிவத்துரோகத்தைச் செய்த வர்களுக்கும், செய்யத் தூண்டுதல் செய்தவர்களுக்கும்; செய்ய வுதவிசெய்தவர்களுக்கும், செய்ததைப் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கும்' சிவபெருமான் தக்க பலனளிப் பாராக.

நடராசாஅ! சிவராசாஅ! தியாகராசாஅ! பர மேசாஅ! சோமேசாஅ! சுந்தரேசாஅ! செகதீசாஅ! பரமபதீஇ! பசுபதீஇ! கருணாநிதீஇ! கைலாசபதீஇ! கருணைவாரிதீஇ! அந்திவண்ணாஅ! அரவாபரணாஅ! முக்கண்ணாஅ! பரமசிவாஅ! மகாதேவாஅ! சதாசிவாஅ! நீலகண்டாஅ! நின்மலாஅ! சுடலையாடீஇ! குன்ற வில்லீஇ! சூலபாணீஇ! பாசுபாணீஇ! கபாலீஇ! சந் திர சடாதாராஅ! கங்காதாராஅ! சிவ சங்கராஅ! பரமே சுவராஅ! பார்ப்பதிசமேதாராஅ! சம்புவேஎ! தாணுவேஎ!

சிவமேஎ! அந்தகனைச் சூலத்தினாற் குத்தி வதைத்த தும், காமனைக் கண்ணாற் காய்ந்ததும், காலனைக் காலா லுதைத்ததும், சலந்தரனைச் சக்கரத்தாற் பிளந்ததும், தக்கன் யாகத்தை வீரபத்திரரா யழித்ததும், ஆனையை யுரித்துப் போர்த்துக்கொண்டதும், பிரமன் சிரத்தை நகத் தாற் கிள்ளியதும், முப்புரங்களைப் புன்சிரிப்புக் கொண் டெரித்ததும்; இக்கோயிற் சிவத்துரோகர்களாகிய 'பஞ்சா யத்தார்களுடைய வமிசங்கள் பாழாய்ப் போனதும், கருணீ கர்களுடைய கால்வழிகள் காணுமற்போனதும், அறைகா ரர்களுடைய சந்ததிகள் அற்றுப்போனதும், பூசகர்களு டைய பரம்பரைகள் புகையாய்ப் போனதும், பரிசாரகர்க ளுடைய மரபுகள் பறந்துபோனதும், நிலங்களைக் கட்டிக் கொண்ட குடும்பங்கள் நிர்மூலமானதும், திருவாபரணந் திருடிய குடும்பங்கள் திருநீறாய்ப் போனதும், தேர்நிலைக் கற்களை வீடு கட்டிய குடும்பங்கள் திடலானதும், கல்லுப் பைக் கற்பூரமென்று விற்றவன் கடுப்புநீர்க்குத்தலுக்காற் றாது கல்லுப்பைக் கற்பூரமென்று விற்றனடீ பாவி யென்று கதறி யுயிர் துறந்ததும், உண்மை யென்பதற் கறிகுறியாக இக்கோயில் முன்னிலையாகப் பொருள் சம்பாதித்துக்கொள் கின்ற ஐந்து அதிபாதகச் சிவத் துரோகிகளுக்கும் தக்க பலனைத் தந்தருள்வீராக.

---

## தலத்தின் தற்கால நிலைமை.

கோவிலுக்குச் சொந்தமான திருவாபரணம் வகையறு (இரத்தினம், பொன், வெள்ளி, தங்கப் பூச்சு) சாமான்க ளின் விபரம் :—

சிவலிங்கப்பெருமானுக்கு—

| | | |
|---|---|---|
| வெள்ளி பெரிய நாகாபரணக் கோளகை | ... | (க) |
| ,, சிறிய கோளகை ... | ... | (க) |
| ,, திருநீற்றுப் பட்டம் ... | ... | (க) |

தேவியாருக்கு—இரத்தினத் திருத்தாலி வகையறுக் கோர்வை .... (க)

வைரப் புலாக்கு .... ... .... (க)

தங்கத் திருமங்கலநாண் சமதாலிக்கொக்குவாய் (க)

,, தாலி வகையறுக் கோர்வை .... (க)

,, திருமங்கலத் தாலிக் கோர்வை .... (க)

,, கம்பிக்காறை மணிக்கோர்வை ... (க)

,, முழுக் கவசம் கிரீடமுள்பட .... (க)

,, புசக்கிளி, கைக்கிளிகள் ... (ங)

வெள்ளி முழுக்கவசம் கிரீடமுள்பட .... (க)

,, திருவாசிகை ... ... (க)

,, அலங்காராசனம் ... ... (க)

,, சரவிளக்குகள் கோர்வை ... (ங)

,, கந்தருவ விளக்குகள் ... ... (உ)

,, கிரீடம் ... ... ... (க)

,, காதுத் தோடுகள் ... .... (உ)

,, கண்டசரம் ... ... (க)

,, நெற்றிப்பட்டம் ... .... (க)

,, மூலைக்கவசங்கள் ... ... (உ)

,, கைகள் ... ... (ச)

,, பாதங்கள் ... ... (உ)

சபாநாயகப் பெருமானுக்கு—

வெள்ளி கவசம் ... ... (க)

சந்திரசேகரப்பெருமானுக்கு—

வெள்ளி கிரீடம் ... ... (க)

,, கண்டசரம் ... ... (க)

,, காதுத் தோடுகள் ... ... (உ)

,, கைகள், 'அபயம், வரதம், மான், மழு' (ச)

,, பாதங்கள் ... .... (உ)

சந்திரசேகரம்பாளுக்கு—

வெள்ளி கிரீடம் .... .... (க)

,, காதுத் தோடுகள் ... ... (உ)

,, கைகள் ... ... (உ)

,, பாதங்கள் .... ... (உ)

,, கண்டசரம் .... .... (க)

விநாயகப் பெருமானுக்கு—

| | | |
|---|---|---|
| வெள்ளி கிரீடம் | ... ... ... | (க) |
| ,, காதுத் தோடுகள் | ... ... | (உ) |
| ,, தும்பிக்கை | ... ... | (க) |
| ,, கைகள் | .... .... | (ச) |
| ,, பாதங்கள் | ... ... | (உ) |

மூலத்தான சண்முகருக்கு—

| | | |
|---|---|---|
| வெள்ளி கிரீடம் | ... ... | (க) |
| ,, காதுத் தோடுகள் | ... ... | (உ) |
| ,, கண்டசரம் | ... ... | (க) |
| ,, கைகள் | ... ... | (உ) |
| ,, வேலாயுதம் | ... ... | (க) |

உற்சவ முருகருக்கு—

| | | |
|---|---|---|
| வெள்ளி கிரீடம் | ... ... ... | (க) |
| ,, காதுத் தோடுகள் | ... .... | (உ) |
| ,, கைகள் | ... ... | (ச) |
| ,, பாதங்கள் | .... ... | (உ) |
| ,, கண்டசரம் | ... .... | (க) |
| ,, வேலாயுதம் | .... ... | (க) |

தெய்வானையம்மையாருக்கு—

| | | |
|---|---|---|
| வெள்ளி கிரீடம் | ... ... ... | (க) |
| ,, கண்டசரம் | ... .... | (க) |
| ,, காதுத் தோடுகள் | ... ... | (உ) |
| ,, கைகள் | .... ... | (உ) |
| ,, பாதங்கள் | ... ... | (உ) |

வள்ளிநாயகியாருக்கு —

| | | |
|---|---|---|
| வெள்ளி கிரீடம் | .... ... | (க) |
| ,, கண்டசரம் | ... ... | (க) |
| ,, காதுத் தோடுகள் | .... ... | (உ) |
| ,, கைகள் | ... ... | (உ) |
| ,, பாதங்கள் | ... ... | (உ) |

சண்டேசுவர நாயனருக்கு—

| | | | |
|---|---|---|---|
| வெள்ளி கிரீடம் | ... | ... | (க) |
| ,, கண்டசரம் | ... | ... | (க) |
| ,, காதுத் தோடுகள் | .... | ... | (உ) |
| ,, கைகள் ... | ... | ... | (உ) |
| ,, பாதங்கள் | .... | .... | (உ) |

பிரதோட நாயகருக்கு—

| | | | |
|---|---|---|---|
| வெள்ளி முழுக்கவசம் | .... | ... | (க) |

பிரதோட அம்பாளுக்கு—

| | | | |
|---|---|---|---|
| வெள்ளி முழுக்கவசம் | .... | .... | (க) |

சுக்கிரவார அம்பாளுக்கு—

| | | | |
|---|---|---|---|
| வெள்ளி முழுக்கவசம் | ... | ... | (க) |
| ,, குடங்கள் | .... | ... | (உ) |
| ,, அபிடேகக் கலயம் | .... | ... | (க) |
| ,, கெண்டி | .... | ... | (க) |
| ,, பெரிய தாம்பாளம் | ... | ... | (க) |
| ,, காளாஞ்சிகள் | ... | ... | (உ) |
| ,, அருக்கிய வட்டகைகள் | | ... | (உ) |
| ,, குத்துவிளக்கு | ... | ... | (க) |
| ,, விபூதி மடல் | ... | .... | (க) |
| ,, சந்தனப் பேலாக்கள் | .... | ... | (உ) |
| ,, பன்னீர்ச்சொம்புகள் | .... | .... | (உ) |
| ,, தூபக்கால் | ... | ... | (க) |
| ,, தீபக்கால் | ... | ... | (க) |
| ,, அலங்கார தீபம் | ... | .... | (க) |
| ,, நாக தீபம் | .... | ... | (க) |
| ,, சிங்க தீபம் | ... | .... | (க) |
| ,, கசதீபம் | ... | ... | (க) |
| ,, வியாக்கிரதீபம் | ... | .... | (க) |
| ,, இடப தீபம் | ... | ... | (க) |
| ,, புருடதீபம் | .... | ... | (க) |
| ,, தீப தாம்பாளங்கள் | ... | ... | (ரு) |
| ,, கும்ப தீபக்குடம் | .... | ... | (க) |

| | | | |
|---|---|---|---|
| வெள்ளி | ஒருமுகக் கருப்பூர தீபம் | ... | (க) |
| ,, | நட்சத்திர தீபம் ... | ... | (க) |
| ,, | சுருட்டி ... | .... | (க) |
| ,, | ஆலவட்டம் ... | .... | (க) |
| ,, | விசிறி ... ... | ... | (க) |
| ,, | குடை .... ... | ... | (க) |
| ,, | கண்ணடி .... | .... | (க) |
| ,, | சிறிய சாமரம் ... | .... | (க) |
| ,, | எழு கிளைக் கருப்பூரதீபம் | ... | (க) |
| ,, | பெரிய சாமரங்கள் .... | ... | (உ) |
| ,, | கட்டிய இடப தடிகள் | .... | (உ) |
| ,, | கைத்தீவட்டிகள் .... | ... | (உ) |
| ,, | எண்ணெய்ப் புதிலிகள் | .... | (உ) |
| ,, | இடபவாகனங்கள் .... | ... | (உ) |

என்பவைகளிருந்தன. அன்றியும் 'சோமசுந்தரப் பெருமான், மீனுட்சியம்மையார், நிறைதவஞ்செய்த நாச்சியாராகிய தனியம்பாள்' என்னும் மூர்த்தங்களுக்கு செப்புத்தகட்டில் தங்கமுலாம் பூசிய கிரீடங்கள், தோடுகள், கண்டசரங்கள், கைகள், கால்கள்' முதலியனவிருந்தன. முற்கூறிய 'பெரிய நாகாபரணக்கோளகை (க), எண்ணெய்ப் புதிலிகள் (உ), இடபங்களினுடைய புடுக்குகள் (உ), இடபங்களினுடைய மணிகள் (உ), இடபங்களினுடைய பதக்கங்கள் (அ), சிறிய இடபத்தினுடைய நெற்றிப்பட்டம் (க), திருமங்கலநாண் சமதாலிக் கொக்குவாய் (க)' என்பன நாளடைவிலே காணமற்போய்விட்டன. காணமற்போனவைகளைக் கண்டுபிடிக்கத்தக்க நாதனற்ற கோயிலாயிற்று. இப்போது கோவிலில் வேலைபார்க்கின்ற அசாமிகள்காலத்திலேதான் காணமற்போயிற்று. காணமற் போகாதிருக்குமானல் 'நிலம் வாங்கவும்' ஆசைநாயகியம்மனுக்கு சுவர்ன புட்பஞ் சமர்ப்பிக்கவும், மந்திரத் தலைவர்களுக்கு மரியாதை செய்யவும்' மார்க்கமுண்டாகுமா? 'சிவசொத்துக்குலநாசமென்பதும், அரசுஅன்றுகொல்லும் தெய்வம்நின்றுகொல்லுமென்பதும்' பொய்யாகுமா? மேற்கூறிய திருவாபரணம் வகையறச் சாமான்களில் காணமற்போனவைகள் நீங்கலாக

மற்றையவைகள் 'தங்கக்கவசம், வைரப்புலாக்கு, அபிடே சக்கயைம், கெல -, காளாஞ்சிகள், அருச்கியவட்டகைகள், விபூதிமடல், தனப்பேலாக்கள், பன்னீர்ச்சொம்புகள், தூபக்கால் ால், அலங்காரதீபம், நாகதீபம், சிங்க தீபம், கச ர்க்கிரதீபம், இடபதீபம், புருடதீபம், கும்பதீபக் பதாம்பாளங்கள், ஒருமுகக்கருப்பூர தீபம், நட்ச ம், சுருட்டி, ஆலவட்டம், விசிறி, குடை, கண்ணடி, ச ாம், எழுகிளைக் கருப்பூரதீபம், கட்டிய இடபதடிகள், பெரியதாம்பாளம், குத்துவிளக்கு' என்பவைகள் இருக்குவேத பாடசாலை இருப்புப் பெட்டியிலும், மற்றையவைகள் கோவில் இருப்புப் பெட்டியிலும் அடங்காதவைகள் வசந்த மண்டபத்திலுமிருந்தன. இச்சாமான்களில் எச்சாமான்களைக் கோவில் பெருச்சாளிகள் விழுங்கியிருக்குமோ அது கடவுளுக்குத்தான் தெரியும். கோவிற் பெருச்சாளிகளைக் கோவிலைவிட்டுக் கடவுள்தான் வெருட்ட வேண்டும். எல்லாம் பெருச்சாளிகளாகவே இருக்கின்றன.

கோயிலில் அருணோதயத்தில் மூன்றுதரம் சங்கத்தொனிசெய்து, தம்பட்டம் ஒலிப்பதும்; அத்தமனகாலத்தில் மூன்றுதடவை சங்கத்தொனிசெய்து, தம்பட்டம் ஒலிப்பதும் வழக்கம். இப்போது காலையில் நாலு அல்லது ஐந்து சத்தம் சங்கத்தொனிமாத்திரங் கேட்கின்றது. மாலையில் அதுவுமில்லை. பறந்துபோன தம்பட்டமாகிய நகரா திரும்பி வரவேயில்லை. ஒருசமயம் வருமோ வாராதோ அது கடவுளுக்குத்தான் தெரியும்.

மார்கழித் திருவாதிரை யுற்சவகாலத்திலே திருவெம்பாவை யோதும்போது இடையிடையே 'சேமக்கலம்' என்னும் சேகண்டி யொலித்து, திருச்சின்ன மூதுவதும்; உற்சவாதிகளில் வீதிகளுக்கு சுவாமி எழுந்தருளப்பண்ணுகைக்கு வாத்துசாந்தி செய்யும்போது சேகண்டி யொலிப்பதும் வழக்கம். இப்போது 'சேகண்டி' குறைநோய்கொண்டு, பேசச் சத்தியின்றி யிருக்கின்றது. அச்சேகண்டியை வார்ப்புக்காரனாகிய வைத்தியனிடம் ஒப்புவித்து செலவுக்குக்

கொடுக்காத காரணத்தினால் குறைநோய் விருத்தியாகிக் கொண்டே வருகின்றது.

சுவாமி அம்மன் சன்னிதிகளில் கட்டியிருக்கின்ற கொத்துமணிகளிரண்டும் பேசச்சக்தியின்றி, நாக்குப் புற்றென்னும் நோய்கொண்டு, மௌனதிசையி லிருக்கின்றன. அந்நாக்குப் புற்றுக்கேற்ற வைத்தியனாகிய கம்மியனிடத்தில் காண்பிப்பாரின்றி யிருக்கின்றன. பூசாகாலங்கள்தோறும் கொத்துமணிகளடிக்கும்வழக்கமும் அறவே நின்றுவிட்டன. சிறிதுகாலஞ்சென்றால் மேற்படி கொத்துமணிகள் பேரீச்சம் பழம் வாங்குவதற்கு ஏற்றதாயிருக்கும்.

தொன்றுதொட்டு சுவாமி புறப்படுங்காலங்க ளெல்லா வற்றிலும் 'உடல்' வாத்தியம் ஒலிப்பது வழக்கம். அவ் வாத்தியம் பேரொலியுடையதாயும், சுவாமி புறப்பாடாகித் 'திருவுலா'வருவதை ஆன்மாக்களுக்குப்புலப்படுத்துவதாயும், காதுக்கின்பந்தருவதாயு மிருக்கும். இப்போது அவ்வுடல் வாத்தியவொலி அறவேயில்லை. வாத்தியம் போனவிடமுந் தெரியவில்லை. அவ்வாத்திய மில்லையேயென்று கவலைப்படு கிறவர்களுமில்லை.

'ஒருமுகத்தோற் கருவியாகிய தம்பட்டம், இருமுகத் தோற் கருவியாகிய உடல், கஞ்சக்கருவியாகிய சேகண்டி, இரண்டு கோத்துமணிகள்' என்பவற்றைச் சிறிது பொருள் செலவிட்டு அமைத்துவைக்கும் ஆற்றலில்லாதவர்களும்; சங்கத்தொனி சரியாய்ச் செய்யச்சொல்லுஞ் சக்தியில்லாத வர்களும்; கோவிற்பெயராற் பலர் பொருளைக்கொள்ளையடிக் குங்கள்ளர்களுஞ்சூழ்ந்திருக்கின்றார்கள். அந்தோபரிதாபம்! பரிதாபம்!!

அரியபெரிய தவமும், அன்புநிறைந்தபக்தியும், பேரரு ளும், பெருஞானமுமுடையராய் பெருதற்கரிய பெரும்பேறு பெற்று, தெய்வீகத் திருக்கோயில்கொண்டு விளங்கும் வீர சேகர முனிவர் விரோதிகிருது (1911ம்) வருடம் சித்திரை மாசம் வியாழக்கிழமை புனர்பூச நட்சத்திரம் கூடிய சுப

தினத்தில் மகாகும்பாபிடேகஞ் செய்வித்தருளினர். இக்கும்பாபிடேகம் நடந்து, இற்றைக்கு 25-வருடங்களாகின்றன. இக்கோயிற் பூசகராக சோமசுந்தரக் குருக்கள் வந்தபின்பு பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள் காலத்தில்ஒருகும்பாபிடேகமும், க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியாரவர்கள் காலத்தில் ஒரு கும்பாபிடேகமுமாக இரண்டு கும்பாபிடேகங்கள் மருந்துசாத்திச் செய்யப்பட்டன. இவ்விரண்டனுள் முதற் கும்பாபிடேகத்தில் 'நவக்கிரகங்கள், வைரவக்கடவுள்' என்னும் மூர்த்திகளையும்; இரண்டாங் கும்பாபிடேகத்தில் 'துர்க்கை' யம்பாளையும் சுவாமி கோவிலினின்றுவெளிப்படுத்தி வெட்டவெளி மண்டபங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. தினப்படி 'காகங்கள் அணில்கள்' என்பவைகளும்; சிலசமயங்களில் காற்று மழைகளும் அபிடேகங்கள் செய்து பூசிக்கின்றன. இங்ஙனம் இடமாறுதல்கள் செய்வதற்கு முன்வரையில் 'தெய்வீகங் குன்றுமல்' நித்திய நைமித்திகங்கள் மேன்மேலும் ஓங்கி நடந்தன. எண்ணிறந்தகோடி சனங்கள்வந்து தரிசித்துப் பேரானந்தப் பெருவாழ்வடைந்தார்கள். நிலங்களும் நன்றாக விளைந்தன. சோமசுந்தரக் குருக்கள் சனங்களை ஏமாற்றிப் பணம் பறிக்கக்கருதி அறையுளிருந்தவர்களை அம்பலத்திற் கொணர்ந்து நிறுத்துவதுபோல வெட்டவெளி மண்டபத்திற் கொணர்ந்து தாபித்ததினலோ, வீரசேகர மகாமுனிவருடைய பிரதிட்டைக்குக் குற்றங்கூறிய காரணத்தினலோ 'நவக்கிரகங்கள், வைரவர்' என்னும் மூர்த்திகளை இடமாறுதல்செய்த காலந்தொடங்கி கிருட்ணசாமி ஐயர் மானேசராக வந்தபின்பு தேவியார் நவராத்திரிகொலுவில் தீப்பற்றி விலையேறப்பெற்ற 'ஏழுபட்டுப்புடைவைகள், ஐந்து படுதாக்கள்; அசுமானகிரிகள், வாசன்மாலைகள், அசைந்தாடுமாலைகள், மகரதோரணங்கள்' முதலியவற்றைத் தகித்து வெள்ளி பெரிய நாகாபரணக்கோளகையை யுருக்குதல்; மேற்கூறியபடி நாளடைவிலே தங்கம் வெள்ளிச்சாமான்கள் திருட்டுப் போதல்; மேற்படி சோமசுந்தரக்குருக்கள் வகையரு குடியிருந்த ஐந்துவீடுகள் இடிந்து குட்டிச்சுவராதல்; தேர்நிலைகளுக்குத் தெற்கிலும் வடக்கிலு மிருக்கின்ற இரண்டு கட்டி

டங்களிடிந்து வீழ்ந்துகொண்டிருத்தல்; 'வாகனமண்டபம்' விறகுவாடிக்கட்டிடம், நந்திமண்டபத்துக்குக் கிழக்கிலிருந்த பெரியகொட்டகை'என்பன காணாமற்போதல், 'திருநந்தன வனம், பசுமடம், இருக்குவேதபாடசாலை, எசுர்வேதபாடசாலை, சாமவேதபாராயணம், குருபூசைமடம், குருபூசை மடத்துக்கீழவாரம், குருபூசைமடத்துக் கருணீகர் குடியிருப்பு மனைக்கட்டு, விபூதிமடம், எசுர்வேதபாடசாலைத்தருமகருத்தாவினுடைய பங்களா, முத்திமண்டபம், விளக்குடித் தென்னந்தோப்பு' என்பவற்றின்கீழ் நிலங்களுக்காகபரிவர்த்தனை வாங்கியிருந்த பூரா நன்செய்நிலங்களையும் முன்பாத்தியக்காரர்கள் பறிமுதல் செய்துகொள்ளுதல்; வாகனங்கள் பழுதாகுதல்;மகாரதங்களை 'மழை, காற்று, வெய்யில்'பாதுகாத்தல்; தேர்ச்சீலைமுதலிய அலங்காரசாமான்கள் அழிந்துபோதல்; நான்கு பிரமோற்சவம் நிறுத்தல் அக்கினிபகவானுக்கு அனுகூலமாகக் கோவிலுக்குள்ளே கூரைக்குச்சு அமைத்தல்; தெற்குமதிலோரத்திலே தெங்குலைவைத்தழுந்தல் புறக்கோடிச்சந்திற் சந்திரசேகரர் புறப்பாடாகுதல்; ஆடுகள் தேர்முட்டிகளில் ஆட்சிபுரிதல்; தேர்முட்டிகளின் படிகள் சிதைந்துவிழுதல்; 'மகாரதங்களையும், தேர்நிலைகளையும்' மலசலங்கழிப்போர் மேற்பார்த்தல்; அடுத்தடுத்து வெள்ளம் வந்து நிலங்கள் விளையாமற்போதல்; பிள்ளையார்தோப்படி நன்செய்,-புன்செயாகுதல்; வேளாகுட்டைக் கீழ்புறம் நன்செய்.-வேளாகுட்டையாகுதல்; தாண்டவன்தோப்புப் புன்செய்,-குளத்தோடு சேருதல்' முதலிய எண்ணில்லாத் திருவிளையாடல்கள் நடந்தன. இன்னும் என்னநடக்குமோ கடவுளுக்குத்தான்தெரியும். 'நவக்கிரகங்கள், வைரவர் துர்க்கையம்பாள்'என்னும் மூர்த்திகளை முன்னிருந்ததானத்திற் பிரதிட்டை செய்யாமலும், 'சோமசுந்தரக்குருக்கள், கிருட்ணசாமி ஐயர்' என்பவர்களை விலக்காமலுமிருக்கிற வரையில் கோவில் நன்னிலைமைக்கு வரவேவராது; இது நிச்சயம்.

இருக்குவேதபாடசாலை தருமகருத்தாவாகிய பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள் பஞ்சாயத்தாராய்

மேல்பார்த்த லத்தில் கோவில் காரியங்களெல்லாஞ் சிறந் தோங்கி விச தும்படி நடத்தினர். தேவியாருக்கு இருபத் தையாயிர நபாய் பெறும்படியான தங்கத்தினுல்-'கவசம், புசக்கி கைக்கிளி, தாலிக்கோர்வை, வைரப்புலாக்கு வெள் ருவாசிகை, அலங்காராசனம், சரவிளக்கு கள், க க்குகள்' என்பன செய்துவைத்தார். சிவ லிங்கப் வக்கு வெள்ளித்திருக்கோளகையும்; பிர தோட பிரதோட அம்பாள், சுக்கிரவார அம்பாள்' என்னு மூர்த்தங்களுக்கு வெள்ளிக்கவசங்களும்; சண்முக ருக்கு வெள்ளிக் 'கிரீடம், காதுத்தோடுகள், கண்டசரம், அபயம், வரதம், வேல்' என்பவைகளும் செய்துவைத்தார். கோபுரவாயிலின் வடசிறகில் கோவிலுக்குச் சொந்தமான ரூ. 2400 பெறுமானமுள்ள புன்செய் நிலத்துக்குத் தரு மத்தை முன்னிட்டு ஒருகுழி புன்செய்க்கு இரண்டுகுழி நன்செய் வீதம் வாங்கிக்கொடுத்து பரிவர்த்தனை செய்து ரூ. 58000 செலவிட்டு இருக்குவேதபாடசாலைக் கட்டிடம் கட்டி வைத்திருக்கின்றார். மேற்படி பாடசாலையில் எக் காலமும் பன்னிரண்டு பிள்ளைகளுக்குக் குறையாமல் வைத்து இருக்குவேதபாடம் நடத்தவும்; கோவிலுக்கு நித்தி யப்படி 'திருவநந்தல், குழித்தளிகை, உருத்திரசெபம், சுவாமி அருச்சனை, தேவியார் தீபத்தெண்ணெய், உற்சவத் தேர் மண்டபப்படி, மகாசிவராத்திரி ஒருகால அபிடேகம்' என்னும் கட்டளைகள் நிரந்தரமாக நடத்தவும்; பிரதி பிரமோற்சவத்திலும் பிராமணபோசனம் நடத்தவும்; திருக் களரிலே ரூ. 21500-க்கு நன்செய்வேலி 4-ம், திருத்துறைப் பூண்டி தாலூகா வங்கநகர்வட்டம் ஒவர்க்குடி கிராமத்திலே ரூ. 40000-க்கு நன்செய்வேலி 30-ம் கிரயசாசனம் வாங்கி வைத்திருக்கின்றார். இவர் மேற்படி தருமங்களை எக்காலமும் நிறுத்தாமல் நடத்தும்படி தன்னுடைய சுவிகாரகுமாரனுகிய வெ. ராம. வெ. வெங்கடாசல செட்டியாருக்கு 1927ஸ் ஏப்ரல் மீ 28௨ ஒரு உயில் எழுதி வைத்துவிட்டு, 1928-ம் ஸ் மார்ச்சு-மீ 26௨ இறந்துபோய்விட்டார். இருக்குவேத பாடசாலைக் கட்டிடத்தினுடைய கீழ்நிலத்தின் பரிவர்த்தனை நன்செயை முன்பாத்தியக்காரர் கோர்ட்டு

முலமாக பறிமுதல் செய்துகொ ார். மேற்படி உயிலின் நகல் திருக்களர்விளக்கம் நான் பாகத்திலே 27-ம் பக்கம் முதல் 38-ம் பக்கம் வரையி ரசுரிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி வெ. ராம. வெ. வெர் ரசல செட்டியார் வெத் துரோகத்தை தேவாமுதமாகவும; தருமத்துரோகத்தை தாய் தந்தையாகவுங்கருதி, மேற்படி நிலங்களேயும்; கட்டிடத்தை யும் விற்றுக்கொண்டுபோக மார்க்கமில்லேயேயென்று, மிகக் கவலேப்பட்டு, மேற்படி நிலங்களின் வரும்படியையும்; மன் னார்குடியிலிருந்த ஒட்டுவீடு விற்ற பணத்தையும்; பிறைக்குப் பக்கமுள்ள இராமனயிற்றேலின் பாகத்தின் பணத்தையும் சொந்த உபயோகப்படுத்திக்கொண்டு, கோவிலுக்கு பிரதி வருடத்திலும் மேற்கண்ட 'திருவநந்தல்' முதலிய கட்டளை களுக்காகக் கொடுக்கவேண்டிய ரூ. 874—8—0 கொடுக்கா மலும்; பிரதிவருடத்திலும் பிரமோற்சவத்தில் பிராமண போசனத்துக்காகச் செலவுசெய்யவேண்டிய ரூ. 500 செலவு செய்யாமலும்; பிரதிவருடத்திலும் பன்னிரண்டு பிள்ளை களுக்குக் குறையாமல்வைத்து ரூ. 2000-ம் செலவிட்டு நடத்தவேண்டிய இருக்குவேதபாடசாலே தருமத்தை நடத் தாமலும் மேற்படி உயிலில்கண்ட தருமங்களெல்லாவற்றை யும் நிறுத்திவிட்டு, கோவிலுக்கு அடிக்கடி உபயோகப்படக் கூடிய சோடசோபசார (39) முப்பத்தொன்பது வெள்ளிச் சாமான்களேயும்; மேற்கண்ட 'கவசம், புசக்கிளிகள், கைக் கிளி, வைரப்புலாக்கு' முதலிய தங்கக்கவச வகையறச் சாமான்களேயும் இருக்குவேதபாடசாலேக் கட்டிடத்துக்குள் வைத்துப் பூட்டிவைத்துக் கொண்டிருக்கின்றார். மேற்படி திருவாபரண வகையறச் சாமான்களே கோவிலில் வைப்ப தற்கு என்ன சொல்லப்போகின்றாரோ அது கடவுளுக்குத் தான்தெரியும். அன்றியும் இருக்குவேத பாடசாலேக்கட்டி டத்தினுடைய கீழ்நிலத்தின் பரிவர்த்தனை நன்செய் பறிமுத லானதற்கு ரூ. 2400-க்கு பரிகாரஞ் செய்யாமலும்; கீழக் கருப்பன்சேரி நன்செய் ரூ. 1300 பெறுமானமுள்ளதற்குப் பதிலாக,கோவிலுக்குச்சொந்தமானகப்பலடிக்காடு நன்செய் ரூ. 4005 பெறுமான முள்ளதை பரிவர்த்தனை யில்லாமலும் அனுபவித்துக்கொண்டு மிருக்கின்றார். மேற்படி கட்டிடத்

தினுடைய கீழ்நிலத்தின் கிரயம் ரூ. 2400, மேற்படி கப்ப ல ங்காடு நன்செய் நிலத்தின் அதிகக்கிரயம் ரூ. 2705 ஆக இனம் இரண்டுக்கும் ரூ. 5105 இந்த ஐயாயிரத்து நூற் றைந்து ரூபாயும் கோவிலுக்கு நட்டமாகிறது. இதற்குயார் சவாப்புதாரி? நடேசன் கண்டப்பிள்ளை வகையறுப் பெயர் கள் வைக்கோர்ப்போர்க் கட்டளை நன்செய் ரூ. 423 பெறு மானமுள்ளதற்குப் பதிலாக, கோவிலுக்குச் சொந்தமான காரியங்தோப்படி, வண்ணான்குளத்தடி நன்செய் ரூ. 1692 பெறுமானமுள்ளதைபரிவர்த்தனையில்லாமல் அனுபவித்துக் கொள்கின்றார்கள். இதனால் கோவிலுக்கு ரூ. 1269 நட்ட மாகிறது. இதற்குக் கேள்வியில்லைபோலும். கோவிலுக்குச் சொந்தமான ரூ. 1000 பெறுமானமுள்ள விளக்குடி தென் னந்தோப்புக்காக, மேற்ப யூர் கருட் ாடார் திருக்களரில் வாங்கிக்கொடுத்திருந்த பரி ர்த்தனை நன்செய் நிலத்தை முன்பாத்தியக்காரர் கோர்ட்டுமூ க பறிமுதல் செய்து கொண்டார். மேற்படி தென்ன தாப்பை க. சிவசாமி நாடார் வகையறா அனுபவித்துக் கொள்கின்றார்கள். இத னால் கோவிலுக்கு ரூ. 1000-ம் நட்டம் ஏற்பட்டிருக்கிறது. இதனைக் கேட்கத்தக்கவர்கள் இல்லைபோலும். "குமாரமங் கலம் கிராமத்திலிருந்த பனைமரங்களை நாளடைவிலே வெட்டி விற்கவும்; வெள்ளைச்சம்பாநெற் கலம் 20-ஐ, வல்லி பண்டாரத்துவண்டியிலேற்றி மன்னார்குடி சாவித்திரியம்மன் பூசைக்கு அனுப்பவும்; வெள்ளைச்சம்பாநெற் கலம் 50-ஐ, அழகிரிகோட்டகம் அ. மு. சு. சுப்பையா தேவரிடத்தில் கலம் ஒன்றுக்கு ரூ. 2—10—0 வீதம் விற்று, அந்தப் பணத்தை இலட்சுமணமுனையரையரிடத்திற் கொடுத்து 'நிலம்' எக்ரிமெண்ட்வார்கவும்; மேற்படி குமாரமங்கலத்தி லிருக்கின்ற சான்றோர் (நாடார்) வகையறாக் குடிகளிடத்தி லிருக்கும் தென்னை மரங்களைச் சாற்றுக் குத்தகைக்குக் கொடுத்தால் கோவிலுக்கு மரம் ஒன்றுக்கு ரூ. 2 வீதம் கொடுக்கிற வழக்கப்படி வசூலான ரூ.150-ல் கோவில் கணக் கில் ரூ.50 வரவு வைத்துவிட்டு, பாக்கி ரூ.100 எடுத்துக் கொள்ளவும்; கோவிலில் பூசையின்றி யிருந்த ரூ. 500 பெறுமானமுள்ள பழைய துவாரபாலக சிலா விக்கிரகங்

களை ரூ.142-க்கு விற்று, கோயில் கணக்கில் ரூ.40 வரவு வைக்கவும்; கோவிலில் பூசையின்றி இருப்பிலிருந்த ரூ.500 பெறுமானமுள்ள செப்புச் சுக்கிரவார அம்மனை யாத்திரைக்கு அனுப்பிவைக்கவும்; 'சென்னை, மஞ்சக்குப்பம், சிதம்பரம், தஞ்சாவூர்' முதலிய கோர்ட்டுகளில் விவகாரங்கள் நடத்தி, சாவித்திரியம்மன் தரிசனஞ்செய்யும்பொருட்டு பவர்ப் பிரதிநிதி நியமித்து கோவிலில் சம்பளங்கொடுக்கவும், கோவிலில் வருடம் ஒன்றுக்கு நெற் கலம் 60-க்கு வேலைபார்த்த அமிர்தங்கண்டப் பிள்ளையை விலக்கிவிட்டு, கோட்டூர் இரங்கசாமி முதலியார் அவர்கள் தருமப்பண்ணையில் வருடம் ஒன்றுக்கு நெற் கலம் 60-க்கு வேலைபார்த்த சண்முகம் பிள்ளைக்கு வருடம் ஒன்றுக்கு ரூ.10, நெற்கலம் 100, பவர்ப் பிரதிநிதிக்குப் பந்துவாகிய வெங்கட்டராம ஐயருக்கு வருடம் ஒன்றுக்கு நெற் கலம் 60 ஆக இரண்டு அசாமிக்கும் ரூ.10 நெற்கலம் 160 கொடுக்கவும்; பிரதி வருடத்திலும் கோவிலுக்கு வரும் வரும்படியில் 'பவர்ப் பிரதிநிதி (க), மணியம் (க), விசாரிப்பு (க) தலையாரி (க), நீராணிக்கம் (க), பூசகர் (உ), பரிசாரகர் (உ), கருணீகர் (க), அறைகாரர் (க), திருவிளக்கு (க), மெய்காவல் (க), சங்கு (க), கூட்டல் பத்துத் தேய்த்தல் (க)' என்னும் அசாமிகளுக்குப் பங்கிட்டுக்கொடுக்கவும்; ஏதேனும் மிகுதியிருந்தால் 'கோயிலுக்குள்ளே கூரைக்கொட்டகை யமைத்தல், தெற்கு மதிலோரத்திலே தெங்கு வைத்தழித்தல், கோவிலுக்கு வெளியிலே யிடிக்கத் தகாத விடத்திலிருந்த வாகன மண்டபத்தை யிடித்து, அள்ளிக்கொண்டுபோய்க் கொட்டுதல், சந்திரசேகரப் பெருமானைப் புறக்கோடி வெளிச் சந்திற் புறப்பாடுசெய்தல், முதலிய அரிய பெரிய திருப்பணிகளைச் செய்து ஒன்றுச் கைந்தாகக் கணக்கெழுதி வெறுங் கோயிலாக்கவும்; தஞ்சாவூர் சப் கோர்ட்டு அசல் நெம்பர் 75/928 வாதியோடு கலந்துகொண்டு செட்டிப்பிள்ளைக ளிடத்தில் நிலத்தின் கிரயத் தொகையை வாங்கிக் கொடுப்பதாகச் சொல்லி 21—9—33ல் கோவிலுக்குச் சொந்தமான 'நன்செய்வேலி 1, மா 11; தெங்கு 10' என்பவற்றை நிராட்சேபணையாக வசப்படுத்திக்கொள்ள வுதவியாயிருக்கவும்''

தக்க அறிவாளிகளிடத்திற் கோயில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறது. மேற்படி நிலம் 'ஆத. பழ. சிதம்பர செட்டியாரவர்களுடைய பங்களா, குருபூசை மடத்துக் கீழவாரம், குருபூசை மடத்துக் கணக்கர் குடியிருப்பு மனைக்கட்டு, விபூதி மடத்து மனைக்கட்டு, முத்திமண்டபம்' என்பவற்றின் கீழ் நிலத்துக்காகப் பரிவர்த்தனை செய்தது. மேற்படி நன்செய் நிலத்தின் கிரயம் ரூ 3800. மேற்படி வியாச்சியத்தில் எதிர் வாதத்திற்கு மனுக்கொடுத்த கோவில் பஞ்சாயத்தாராகிய 7-ம் பிரதிவாதி சோமசுந்தர முதலியாரவர்கள் வியாச்சிய முடிவிற்குள் இறந்துபோய்விட்டார்கள். மனுப்படி எதிர் வியாச்சியஞ் செய்வதற்கு நாதனற்ற கோயிலாயிற்று. மேற்படி வியாச்சியத்தின் 13, 14-ம் பிரதிவாதிகள் நன்செய் மா 10-க்காகவும்; 15-ம் பிரதிவாதி நன்செய் மா 5-க்காகவும், எதிர் வியாச்சியஞ் செய்து விலக்கிக்கொண்டார்கள். மேற்படி வியாச்சியத்தின் 8-ம் பிரதிவாதி சுப்பிரமணிய பிள்ளை என்பவர் நன்செய் மா 10-க்காகவும்; 9, 10, 11-ம் பிரதிவாதிகளிடத்தில் கிரய சாசனம் வாங்கிய நன்செய் மா 6-க்காகவும் விடாமல் எதிர் வியாச்சியம் செய்து 5—8—33-ல் மெசார்ட்டி நிற்க, மைனர்ட்டி பெந்தகம் செல்லத்தக்கதல்ல வென்று வியாச்சியத்தைத் தள்ளுபடி செய்து, வாதி வசப்படுத்திக்கொண்டிருந்த மேற்படி நன்செய்கள் மா 16-யும் திரும்ப தன்வசப்படுத்திக்கொண்டார். மேற்கண்ட கோவில் 'நன்செய் வேலி 1 மா 11; தெங்கு 10 என்பவைகள் மாத்திரம் வாதியினுடைய அனுபோகத்திலேயே யிருக்கின்றன. இப்படியே கோவில் நிலங்களைக் கோவிலதிகாரிகளைக்கொண்டே கைப்பற்றிக் கொள்ளலாம். இஃதேற்ற காலம். எல்லாரும் விழித்துக்கொள்ளுங்கள்! தூங்காதீர்கள்!

வீரசேகர மகா முனிவர் பெறுதற்கரிய பெரும்பேறெய்திய பின்பு அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகள் காலத்திலே கோவிலுக்கு நிலம் வாங்கிவைக்கும்பொருட்டு, வீரசேகர மகா முனிவருடைய மாணுக்கர்களிலே 'சுப்பைய ஞானதேசிக சுவாமிகள், நாராயணசாமி ஞானதேசிக சுவா

மிகள், இருக்குவேத பாடசாலை பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள், பசுமடம் ராம.ஆத.மெ.இராமசாமி செட்டியாரவர்கள்' என்பவர்கள் மு. சுவாமிநாத உபாத்தியாயரிடமிருந்து 'திருக்களர் சாரசங்கிரகம்' என்னும் புத்தகத்திலே, 800 புத்தகம் இனமாக வாங்கிக்கொண்டு பினாங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர், சைகோன், இரங்கூன்; முதலிய தேசங்களுக்குச்சென்று, அங்கு கடைகள் வைத்திருந்த செட்டிப்பிள்ளைகளிடத்தில் ரூ.80000 (எண்பதினாயிரம்) வசூல்செய்துகொண்டு வந்தார்கள். கடியாப்பட்டி ... ... ........ செட்டியாரவர்கள் ரூ.15000 (பதினையாயிரம்) கொடுத்தார்கள். சில்லரையாகப் பலரிடமிருந்து வசூலானது ரூ. 5000 (ஐயாயிரம்) ஆக இனம் மூன்றுக்கு ரூ. 100000 இந்த ஒரு லட்ச ரூபாயும் முற்கூறிய அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளிடத்தில் கோவிலூர் மடாலயத்தி லிருந்தது. இத் தொகையிலிருந்து ரூ. 42,000 நாற்பத்திரண்டாயிரங் கொடுத்து, கழுகத்தூர் முக்காரங்கரை நாராயணசாமி தேவரவர்களுக்குச் சொந்தமாக திருத்துறைப்பூண்டி தாலூகா மருதவனம் கிராமத்திலிருந்த 'நன்செய் புன்செய் வேலி 12, மா 10; தென்னை 250, புளி 4, ஓட்டுவீடு 1' என்பவற்றை திருக்களர் மடத்துப் பெயருக்கு கிரயசாசனம் வாங்கப்பட்டிருக்கிறது. அந்தச் சாசனத்தில் திருக்களர் அமுதவல்லியம்பாள் சமேத பாரிசாதவனேசுவர சுவாமி இரண்டாங்காலப் பூசைப் படித்தரத்துக்கு என்று எழுதப்பட்டிருக்கிறது. ஓட்டு வீடு இடிந்து பராதீனமாயிற்று. மேற்படி அண்ணாமலை ஞானதேசிக சுவாமிகளுக்குப் பின் அந்தத் தானத்தை யடைந்த. மகாதேவ ஞானதேசிக சுவாமிகளால் மேற்படி மருதவனம் கிராமத்தில் ரூ.17000 பதினேழாயிரங் கொடுத்து நன்செய் புன்செய் வேலி 5. மா 6; புளி 2, மேற்படி மடத்துப் பெயருக்கு கிரய சாசனம் வாங்கப்பட்டிருக்கிறது. இதில் கொல்லங்குடி அழகாபுரி உ. தெ. மெ. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள் கோவில் சூடக் கட்டளைக்காகக் கொடுத்த பணமுஞ் சேர்ந்திருக்கிறது. ஆக இனம் இரண்டுக்கும் 'நன்செய் புன்செய் வேலி 17, மா 16; தென்னை

250, புளி 6' இவை திருக்களர் மடத்து அனுபோகத்தி லிருக்கின்றன. இவற்றின் வரும்படியிலிருந்து, கோவிலுக்கு நித்தியப்படி ஐந்து காலம் பூசைப் படித்தரத்துக்காக வரு டம் ஒன்றுக்கு 'அரிசி கலம் 130, சூடன் வீசை 12, ரொக் கம் ரூ, 600' கொடுத்துவருகின்றார்கள்.

கோவிலூர் மடத்துப் பிரதிநிதிகளாக திருக்களர் மடத்திலிருக்கின்ற சாதுக்களில் காளைக்கன்றுகள் வாங்கி வளர்த்து விற்றுப் பொருளை விருத்திசெய்து, அப்பொருளை தங்க நகை யீட்டின்பேரில் ஒன்றரை வீதம் வட்டிக்குக் கொடுத்து மேன்மேலும் விருத்திசெய்வதிற் பேறறிவுடைய பசுக்காரச் சுவாமிகள் என்கின்ற அருணாசல சுவாமிகள் 'துருவாச தீர்த்தம் கீழப் படித்துறை யோரத்தில் அறப்புக் குழி வெட்டிவைத்து, அப் படித்துறையைக் கீழ்புறம் மல் லாத்தி வைத்திருக்கின்றார். மேற்படி தீர்த்தம் தென்கரை வீதியிலிருந்த குருக்கள் வகையறு ஐந்து வீடுகள் இடிந்து விழுந்த மரங்களை யெல்லாம் எடுத்துக்கொண்டுபோய் வைத் துக்கொண்டு, அம்மரங்களில் சிலவற்றை எடுத்து, வீர சேகர மகாமுனிவருடைய திருக் கோயிலுக்கு வடபுறம் கிணற்றுக்குச் சமீபத்தில் ஓட்டுக் கொட்டகைக் கட்டிடங் கட்டிவைத்திருக்கின்றார். கோவிலுக்கும் தெற்குவீதிக்கும் மத்தியிலிருக்கின்ற பிரமதீர்த்தத்தை வெட்டும்படி 'முத்தி மண்டபம், திரு நந்தனவனம்' தருமகருத்தாக்கள் கொடுத்த ரூ.50-யும் செலவிட்டு நான்கு கரைகளையும் ஒழுங்காகக் கட்டாமல் மேற்படி தீர்த்தத்திலிருந்த வண்டற்பொருக்கில் சுமார் 5000 வண்டிப் பொருக்கு வரையில் அள்ளிக்கொண்டு போய் மடத்து நிலத்தில் போடும்படி செய்வித்தார். கோவில் நிலத்தில் ஒரு வண்டி கூடப் போடவில்லை. இவை நிற்க, 'வீரத்திற் சிறந்தோங்கியவராய், சாகுபடியில் நீண்ட அனு போகமுடையராய், கழனிகளை அடிக்கடி சோம்பலின்றிச் சுற்றிப்பார்க்குஞ் சூரராய்' விளங்கும் கிருட்டிணாநந்த சுவாமி கள் 'சுவாமி யம்மன்' தேர்முட்டிகளி னிடையில் அறப்புக் குழி வெட்டிவைத்திருந்தார். திருக்களர்விளக்கம் நான்காம் பாகம் 16-ம் பக்கத்தில் மேற்படி அறப்புக் குழியின் பெரு

மையைப்பற்றிப் பிரசுரித்திருந்ததைத் தெரிந்துகொண்டு தூர்த்துவிட்டார். ஆனால் மேற்படி அறப்புக்குழி வெட்டும்போது பூமிக்குள் எதிர்ப்பட்ட திருவாசு தீர்த்தத்தின் வடிவாய்க்காலின் மதகில், சில கற்க ளிடிந்துபோய்விட்டதாம். மடத்தில் விசாரிப்பு வேலைபார்த்த அசாமியை விலக்கிவிட்டு, 'தெய்வராய பிள்ளையை நியமித்தகாலத்தில் அவர் கேட்டபடி வருடம் ஒன்றுக்கு நெற்கலம் 72, ரூ.24 சம்பளம் கொடுக்கிறபட்சத்தில் மடத்துக்கு நட்டமுண்டாகுமெனக்கருதி அவருக்கு மடத்தில் வருடம் ஒன்றுக்கு நெற்கலம் 48-ம், அவருடைய தமையன் கோட்டூர் இரங்கசாமி முதலியாரவர்களுடைய தருமப்பண்ணையில் வருடம் ஒன்றுக்கு நெற்கலம் 60-க்கு வேலைபார்த்த சண்முகம்பிள்ளைக்குகோவிலில் வருடம்ஒன்றுக்குநெற்கலம் 100, ரூ.10-ம் கொடுப்பதாக இருவரையும் வேலைபார்க்கும்படி நியமித்து கோவிலில் வருடம் ஒன்றுக்கு நெற்கலம் 60-க்கு வேலை பார்த்த அமிர்தங்கண்டப்பிள்ளையை விலக்கினர். தமையன் தம்பி இருவரையும் கோவிலுக்கும் மடத்துக்கும் அசாமிகளாக நியமித்துக்கொண்ட காரணத்தினால் மேற்படி தருமப் பண்ணைக்கும் மடத்துக்கும் நிலத் தகரால் வந்தபோது கோவில் ஆட்களைக்கொண்டுபோய் சண்டைக்கு விடவும்; மடத்து நிலங்களையும், மேற்படி சண்முகம் பிள்ளையினுடைய சொந்த நிலங்களையும் முன்னாலே சாகுபடிசெய்து முடித்துவிட்டு, கோவில் நிலங்களைப் பின்னாலே தொடர்ந்தாற்போல் சாகுபடிசெய்யவும் தோதாயிருக்கின்றன. அன்றியும், மேற்படி கிருட்ணாநந்த சுவாமிகள், பல சனங்கள், மு. சுவாமிநாத உபாத்தியாயரால் கோவில் நன்னிலைமைக்கு வந்ததென்று சொல்லிக்கொள்வதைக் கேட்டும், முதலில் வெளிவந்த 'திருக்களர் விளக்கம்' என்னும் புத்தகத்தைப் பார்த்தும் மனம்பொறுதவராய், மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயருடைய வேலியை வெட்டி யெறிந்துவிட வேண்டுமென்று 'க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியாரவர்கள், பவர்ப் பிரதிநிதி கிருட்ணசாமி ஐயர், குருபூசை மடத்து சுப்பிரமணிய பிள்ளை' என்பவர்கள் கூடி யோசனை செய்தபோது என்ன செலவானாலும் யோசிக்காமல்

வேலியை வெட்டி அப்புறப்படுத்திவிடவேண்டு மெனவும்; திருக்களர் விளக்கம் 2, 3, 4-ம் பாகங்கள் அச்சியற்றிய போது கணேச தேவரை உதவிசெய்யக் கூடாதெனவுங் கட்டளையிட் டருளினர். இங்ஙனங் கட்டளை யிட்டது யானைக்குக் கோவணங்கட்டியதுபோ லாயிற்று. சில வருடங்களுக்கு முன் மேற்படி மு. சுவாமிநாத உபாத்தியாயரால் கோவில் நன்னிலைமைக்கு வந்ததென்று பல மனிதர்கள் சொல்லியதைக் கேள்வியுற்றுக் கோபங்கொண்டு, ஷெ சுவாமிநாத உபாத்தியாயரை மூர்ச்சை யுண்டாகும்படி யபூர்ந கிரிசாநந்த சுவாமிகளுக்கு ஊரிலுள்ள சனங்களால் துன்ப முண்டாகாவண்ணம் தெய்வீகமாக உயிர்பெற்றெழுந்த மேற்படி சுவாமிநாத உபாத்தியாயர் சனங்களைக் கையெடுத்துக் கும்பிட்டுப் பாதுகாத்ததுபோல, மேற்படி வேலி வெட்டியதை முன்னிட்டுக் கோவிலுக்கு நட்ட முண்டாகாவண்ணம் மௌனமாக விருந்துவிட்டார்.

பவர்ப் பிரதிநிதியாகிய கிருட்ணசாமி ஐயர் 1926-ம் வருடத்தில் இறந்துபோன கோவில் குடியானவனாகிய ஊமைப் பக்கிரி என்கிற பக்கிரிவிசயதேவன் கண்டுமுதல் செய்து போட்டிருந்த நெற்கலம் 112-யும் எடுத்துவந்து கோவிலில் போட்டுக்கொண்டு, அந்த வருடத்தில் அவன் கோவிலுக்கு அளக்கவேண்டிய மேல்வாரம் நெற்கலம் 75-யும் கோவில் கணக்கில் வரவுவைத்துக்கொண்டு, பாக்கி நெற்கலம் 37-ல் அவனுடைய மருமகனாகிய சிட்டுக்காடவராயன் என்கிற அமிர்தங்காடவராயனிடத்தில் நெற்கலம் 10-கொடுத்துவிட்டு, பாக்கி நெற்கலம் 27-யும் கலம் ஒன்றுக்கு ரூ. 3–8–0 வீதம் விற்று ரூ. 94—8—0 எடுத்துக்கொண்டு, மௌனமாக இருந்துவிட்டார்; மேற்படி பக்கிரிவிசயதேவன் கோவிலுக்குக் கொடுக்கவேண்டிய ரூ. 42-ம் காலாவதியாய்ப் போய்விட்டது. இறந்துபோன கோவில் குடியானவனாகிய 'சுப்பராய முதலி' என்பவன் கோவிலுக்கு ரூ. 93-பாக்கி கொடுக்கவேண்டியிருந்தது; அந்த ரூபாய்க்காக மேற்படி சுப்பராய முதலியினிடத்தில் மன்னார்குடி தாலுகா 109-ம் நெம்பர் அக்கரைக் கோட்டகம் வட்டம்

பண்ணியூர் கிராமம் கொக்குப்பள்ளம் சர்வே 179-ல் 3-நிலத்தை 1928-ம் ஹு மார்ச்சு-மீ 28-உ கிரய சாசனம் வாங்கிய திருக்களர் ச. மாரியப்ப நாடானிடத்தில் மேற்படி கிருட்ணசாமி ஐயர் தன் பெயருக்கு ஒரு பிராம்சரி நோட்டு எழுதி வாங்கிக்கொண்டார். மேற்படி ச. மாரியப்ப நாடான் தனக்கு கூத்தன் சாம்பான் ரூ. 80-க்கு எழுதிக்கொடுத்திருந்த, ஆள் சுவந்தைக்கடன் பத்திரத்தையும், மேற்படி கூத்தன் சாம்பானையும் கிருட்ணசாமி ஐயரிடத்தில் ஒப்பிவித்தான். அவர் மேற்படி பத்திரத்தையும், கூத்தன் சாம்பானையும் திருக்களர் மடத்தில் ஒப்பிவித்துப் பணத்தை வாங்கி, கோவில் கணக்கில் வரவு வைக்காமல் சொந்த உபயோகத்துக்கு எடுத்துக்கொண்டார். இவ்விரு வகையிலும் மேற்படி கிருட்ணசாமி ஐயருக்கு யதாலாபமாகக் கிடைத்தது ரூ. 174—8—0, கோவிலுக்கு நட்டம் ரூ. 135—0—0.

கோவிலுக்குச் சொந்தக்கிராமமாகிய குமாரமங்கலத்திலிருக்கின்ற குடிகளிடத்திலிருக்கும் தென்னை மரங்களைச் சாற்றுக் குத்தகைக்குக் கொடுத்தால் கோவிலுக்கு மரம் ஒன்றுக்கு ரூ. 2 வீதம் கொடுக்கிற வழக்கப்படி 1929-ம் வருடம் முதல் 1934-ம் வருடம் வரையில் கோவிலுக்குக் கொடுத்திருக்கிற தொகைகளின் விபரம்.

| வருடம். | தென்னை. | தொகை. ரூபாய் |
|---|---|---|
| 1929 | 60 | 120—0—0 |
| 1930 | 75 | 150—0—0 |
| 1931 | 96 | 192—0—0 |
| 1932 | 104 | 208—0—0 |
| 1933 | 105 | 210—0—0 |
| 1934 | 110 | 220—0—0 |
| ஆக 6 | 550 | 1100—0—0 |

இந்தப்படி கோவில் கணக்கில் வரவு வந்ததாகத் தெரியவில்லை. கடவுள்தான் கவனிக்கவேண்டும்.

## கோவிலுக்கு நட்டம் விபரம்.

(1) கோவிலுக்கு நிலம் வாங்கிவைக்க வேண்டியதற்காக 'பினங்கு, சிங்கப்பூர், கோலாலம்பூர், சைகோன், இரங்கூன்' முதலிய அன்னிய நாடுகளிலிருக்கின்ற செட்டிப்பிள்ளைகளின் கடைகளிலும், கடியாப்பட்டி செட்டியாரிடத்திலும், பல சில்லரையாகவும் வசூலான தொகை கோவில் கணக்குக்கு வாராமலிருக்கும் வகையில் ... ... ரூ. 100000—0—0

(2) 'வாகனமண்டபம், விறகுவாடிக் கட்டிடம், குருக்கள் பரிசாரகர்வகையரூ ஐந்துவீடுகள், தேர்நிலைகளுக்கு தெற்கிலும் வடக்கிலும் இருந்த இரண்டு பெரிய கட்டிடங்கள் முதலியன இடிந்து குட்டிச் சுவரான வகையில் ... ரூ. 30000—0—0

(3) 'இருக்குவேத பாடசாலை, எசுர்வேதபாடசாலை, சாமவேத பாடசாலை, சாமவேதபாராயணம், பசுமடம், திருநந்தனவனம், குருபூசைமடம், குருபூசை மடத்துக் கீழவாரம், குருபூசைமடத்துக்கணக்கர் குடியிருப்பு மனைக்கட்டு, விபூதிமடத்துமனைக்கட்டு, ஆத. பழ. சித. பங்களா, முத்திமண்டபம், விளக்குடி தென்னந்தோப்பு' முதலியவற்றின் கீழ் நிலங்களுக்காக கோவிலுக்குப் பரிவர்த்தனை செய்துகொடுத்திருந்த நன்செய் நிலங்களை முன்பாத்தியதாரர்கள் கோர்ட்டுமூலமாகப் பதிமுதல்செய்துகொண்ட வகையில் ... ... ரூ. 14300—0—0

(4) கோவில் நன்செய் நிலத்தை வெ. ராம. வெ. வெங்கடாசல செட்டியார் பரி

வர்த்தனை யில்லாமல் அனுபவித்துக் கொள்கிறவகையில் .... ரூ. 2705—0—0

(5) கோவில் நன்செய்நிலங்களை நடேசன் கண்டப்பிள்ளைவகையறுப்பெயர்கள் பரிவர்த்தனை யில்லாமல் அனுபவித்துக் கொள்கிறவகையில் .... ரூ. 1269—0—0

(6) பிள்ளையார்தோப்படி நன்செய் நிலம், புன்செய்த்திடலான வகையில் ரூ. 500—0—0

(7) வேளா குட்டையின் கீழ்கரை நன்செய், மேற்படிக் குட்டையோடு சேர்ந்து நீர்நிலையானவகையில் ... ரூ. 150—0—0

(8) சீலத்தநல்லூர் தாண்டவன் தோப்பு புன்செய், புறத்திலுள்ள குளத்தோடு சேர்ந்து நீர்நிலையானவகையில் ... ரூ. 360—0—0

(9) தேவியார் 'திருமங்கல நாண்சம தாலிக் கொக்குவாய்' தங்கத்திருவாபரணம் திருட்டுப்போனவகையில் ரூ. 500—0—0

(10) 'வெள்ளிப் பெரியநாகாபரணக் கோளகை, வெள்ளிப்புதிலிகள், வெள்ளி யிடபங்களினுடைய புடுக்குகள், வெள்ளி யிடபங்களினுடைய மணிகள், வெள்ளி யிடபங்களினுடைய பதக்கங்கள், சிறிய வெள்ளி யிடபத்தினுடைய நெற்றிப் பட்டம்' முதலியன திருட்டுப்போன வகையில் ... .... ரூ. 1350—0—0

(11) கோவிலுக்கு நித்தியப்படி 'திருவநந்தல், குழித்தளிகை, உருத்திரசெபம், சுவாமிஅர்ச்சனை, தேவியார்சன்னிதிதீபத் தெண்ணெய்' பிரமோற்சவத் தேர்மண்டபப்படி, மகாசிவராத்திரி ஒருகாலம் முதலியவற்றிற்காக, பழ. வெ. ராம. இராம

நாதன் செட்டியாரவர்கள் எழுதிவைத்திருக்கின்ற உயிலில்கண்டபடி வருடம் ஒன்றுக்கு ரூ 874—8—0 கொடுக்கக் கடமைப்பட்ட வெ. ராம. வெ. வெங்கடாசல செட்டிய [illegible] 1929-ம் வருடம் முதல் கொடுக்காம[illegible]க்கிவிட்ட வகையில் . .... .... ரூ. 6121—8—0

(12) கோவிலில் இருப்பி லிருந்த பழைய 'செப்புவிக்கிரகமாகிய சுக்கிரவார அம்மன், சிலாவிக்கிரகங்களாகிய துவார பாலகர்கள்' கோவிலைவிட்டு குடிப்போன வகையில் .... ... ரூ. 850—0—0

(13) கோவில் குடியானவர்களாகிய 'பக்கிரிவிசயதேவன், சுப்பராயமுதலி' என்பவர்கள் கோவிலுக்குக் கொடுக்க வேண்டிய குத்தகைப்பாக்கி வகையரு ரூபாயை அவர்கள் இறந்துபோனபின்பு கிருட்ணசாமி ஐயர் வசூல்செய்துக் கோவில்கணக்கில் வரவுவைக்காமல் எடுத்துக் கொண்டவகையில் ... ரூ. 135—0—0

(14) 'தேர்ச்சீலைகள், அலங்காரப் படுதாக்கள், அலங்காரசாமான்கள்' முதலியன 'தீப்பற்றியெறிந்தும், பாதுகாப்பின்றியும்' கெட்டுப்போன வகையில் ரூ. 2500—0—0

(15) 'வாகனங்கள், மகாரதங்கள்' முதலியன பாதுகாப்புக் குறைவினால் பழுதுபார்க்கவேண்டியநிலைமையையடைந்திருக்கும் வகையில் ... ரூ. 1500—0—0

(16) மார்கழித்திருவாதிரை உபயத்துக்காக, சாமிநாதஞானியாராலும், அவருடைய குமாரர் சிதம்பரசபாபதிபிள்ளை

யாலும் மண்ணுகொண்டான்கிராமத்தில் வைத்திருக்கின்ற நன்செய் ஏக்கர் 3 செண்ட் 34 நிலத்தையும் மேற்படி உபயத்தை நிறுத்திவிட்டு, இராமகிருட்ண பிள்ளை அனுபவித்துக்கொள்ளும் வகையில் ... ... ரூ. 1000—0—0

(17) பிரமோற்சவவிடாயாற்றி உபயதாரர்களாகிய கொசதாங்கி இராமாமிர்த தேவர்வகையரூப் பெயர்களுக்கு பிரமோற்சவப் பத்திரிகையும், சண்டேசுரத் திருமுகமும் அனுப்பாதகாரணத்தினுல் மேற்படி உபயம் நின்றுபோன வகையில் ரூ. 35—0—0

(18) கோவிலுக்குள் 'கூரைக்கொட்டகையமைத்தல் தெற்கு மதிலோரத்தில் தெங்குவைத்தழித்தல், வெளியிலிருந்த வாகன மண்டபம்இடித்தல், புறக்கோடிச் சந்து வெளியிற் சந்திரசேகரரைப் புறப்பாடு செய்தல்' முதலிய செய்யத்தகாத வேலைகளைச் செய்தவகையில் ... ரூ. 350—0—0

ஆகக் கோவிலுக்கு நட்டம் ரூ. 163625—8—0

இவற்றைஅன்னியில் " மன்னுர்குடி சாவித்திரியம்மன் பூசைக்காக குமாரமங்கலம் கிராமத்திலிருந்து வெள்ளைச் சம்பா நெற்கலம் 20 வல்லிப் பண்டாரத்தின் வண்டியிலனுப்பித்தல், தாயார்பெயரால் நிலம் வாங்கவேண்டியதற்காக அழகிரிகோட்டகம் அ. மு. சு. சுப்பைய தேவரிடத்தில் கைமாற்றுவாங்கிய ரூ.300-க்கு ஈடுசெய்வித்தல், குமாரமங்கலங் கிராமத்தில் 1929-ம் வருட முதல் 1934-ம் வருடம்வரையில் குடிகள் சாற்றுக் குத்தகைக்குகொடுத்த தென்னமரம் 550-க்குக் கோவில் கணக்கில் ரூ. 1100 வரவு வாராதிருத்தல்

கோவிலுக்குக் கிரமப்படி அசாமிகள் நியமித்து அசலுக் கொப்பந்தம் சம்பளம் கொடுக்காமல் அளவுக்குமேல் அதிக மான அசாமிகள் நியமித்து அசலுக்குமேல் அளவுக்கு மிஞ்சிய சம்பளங்கொடுத்தல்'' முதலியவைகளினுல் பெருத்த நட்டங்களும் ஏற்பட்டிருக்கின்றன.

மடத்திலிருக்கின்றவர்கள் 'பொதுசனக் கண்காட்சி விநோத சபை' யாகிய 'சரசுவதி மால்' கட்டிடத்தைக் கெட்டியாகப் பூட்டிவைத்துக்கொண்டு, கணக்கு அறையாக உபயோகப்படுத்திக் கொள்வதாலும்; கோவில் பெயரால் பொருள் வசூல் செய்து மடத்தின் பெயரால் நிலம் வாங்குவதாலும் கோவிலைக் கவனித்து நடத்துவார்களென்று நம்புவதற்குச் சிறிதும் ஆதாரமில்லை. இதற்கு கோவில் பெயரால் வசூலான தொகையில் மருதவனம் கிராமத்தில் மடத்துப் பெயரால் சிறிது நிலம் வாங்கி வைத்துக்கொண்டு, கோவிற் பரிவர்த்தனை நிலங்கள் பறிமுதலானதையும்; கோவில் நிலங்களைப் பரிவர்த்தனையின்றிச் சிலர் அனுபவித்துக்கொள்ளுவதையும்; கோவிற் கட்டிடங்கள் குட்டிச்சுவரானதையுங் கவனிக்காமலிருப்பதே தக்க சான்ருகும்

கோவிலூர் மடத்துப் பிரதிநிதியும்; சிவபுரித் திருக்கோயில் விவகாரத் தருமகருத்தரும்; கோவிற் சம்பளத்தில் தனக்குப் பவர்ப்பிரதிநிதி நியமித்து 'சிதம்பரம், மஞ்சக்குப்பம், சென்னை' முதலிய கோர்ட்டுகளில் விவகாரம் நடத்திக்கொள்கின்றவரும் ஆகிய க. வீ. சொ. வீ. அழகப்ப செட்டியாரவர்களால் எக்காரணத்தை முன்னிட்டும் கோவில் நன்னிலைமைக்கு வராது. இதற்கு தஞ்சாவூர் சர்க்கிள் தேவத்தானங் கமிட்டியாரவர்களுக்கு 18—9—33ல் 'முன் விசாரணைதாரர்கள் காலங்களில் இருந்திருக்கலாம்' எனவெழுதியிருப்பதும்; தஞ்சாவூர் சப் கோர்ட்டு அசல் நெம்பர் 75/928ல் சரிவர நடவடிக்கை நடத்தாமல் கோவில் பரிவர்த்தனை நிலத்தை வாதி பறிமுதல் செய்துகொள்ள இடங்கொடுத்ததும்; இரண்டு பிரமோற்சவங்களைத் தொடர்ச்சியாக நிறுத்தியதும்; 'கோவிலுக்குள் கூரைக்கட்டிடங் கட்டுதல், தெற்கு மதிலோரத்தில் தெங்குவைத்தழித்தல், வாகன

மண்டபம் இடித்தல், அதிக அசாமிகள் வைத்து கோவில் வரும்படியைப் பங்கிட்டுக் கொடுத்தல், புறக்கோடியில் சுவாமி புறப்பாடுசெய்தல்' முதலிய செய்யத்தகாத வேலைகளைச் செய்து கோவிலை வெறுங்கோயிலாக வைத்திருப்பதும் தக்கசான்ருகும்.

சாவித்திரியம்மனை வழிபடு கடவுளாகக் கொண்டபவர்ப் பிரதிநிதியாகிய கிருட்ணசாமி ஐயர் இத்தலத்துக்கெழுந்தருளிய பின்னர், "பழ. வெ. ராம. இராமநாதன் செட்டியாரவர்கள் விசாரணையிலிருந்த கோவிலை மூவாயிரக் கல நெல்லுடன் கைப்பற்றிக்கொள்ளுதல்; பத்தராவி முதலியாரைப் பறக்கவிடுதல்; நவராத்திரிக் கொலுவில் 'தீ' வைத்துக் கொளுத்தல்; பரிவர்த்தனை நிலங்களைப் பறிமுதலுக்கு விடுதல்; கோவிற் கட்டிடங்களைக் குட்டிச் சுவராக்குதல்; நன்செய் நிலங்களை நாசமாக்குதல்; ஊரிற் கலகங்களையோங்கச் செய்தல்; கோவிலில் கடன்களைக் குடியேற்றுதல்; பெரிய நாகாபரணக்கோளகை வகையறு வெள்ளிச் சாமான்கள் வெளியிற் போதல்; திருமங்கலநாண் சமதாலிக்கொக்குவாய்த் திருவாபரணந் திருட்டுப் போதல்; கோவிற்குடியானவர்களாகிய 'பக்கிரிவிசயதேவன், சுப்பராய முதலி' என்பவர்களுடைய குத்தகைப் பாக்கிப் பறிமுதலாகுதல்; அலங்கார சாமான்களெல்லாவற்றையு மழித்தல்; கோவிலுக்குள்ளே கூரைக்குச்சமைத்தல்; தெற்கு மதிலோரத்தில் தெங்கு வைத்தழித்தல்; வாகன மண்டபத்தை வாரிக்கொண்டுபோய்ப் போடுதல்; சந்திரசேகரப் பெருமானை சந்திற் புறப்பாடு செய்தல்" முதலிய அரிய பெரிய திருவிளையாடல்கள் நடந்தன. இன்னும் எத்தனையோ திருவிளையாடல்கள் நடக்கப்போகின்றன. இதற்கொற்றுமையாக கணக்கு வேலைக்கு வெங்கட்டராம ஐயரும், மணியம் வேலைக்கு சண்முகம் பிள்ளையும் வந்திருப்பதே தக்க சான்ருகும்.

சகலாகம பண்டிதரும், எல்லாம் வல்ல சித்தரும், சிற்பவிற்பன்னரும் ஆகிய சோமசுந்தரக் குருக்கள் இக்கோயிற் பூசகரா யெழுந்தருளிய பின்னர் சுமார் 10-வருடத்துக்குள்

இரண்டு கும்பாபிடேகங்கள் நடந்தன. வீரசேகர மகா முனிவர் செய்த பிரதிட்டைகள் சிற்பசாத்திரத்துக்கு ஒற்றுமையுடையனவல்ல வென்பதற் கறிகுறியாக அறையுளிருந்தவர்களை அம்பலத்திலிழுத்து நிறுத்துவதுபோல சுவாமி கோவிலிலிருந்த 'நவக்கிரகங்கள், வைரவர்' என்னும் மூர்த்திகளை முதற் கும்பாபிடேகத்திலும்; துர்க்கையம்பாளை இரண்டாங் கும்பாபிடேகத்திலும் வெளியிற் கொணர்ந்து 'மழையொழுக்கு மண்டபம், உத்திரங் கெட்டுப்போன மழையொழுக்கு மண்டபம்' என்பவற்றில் பிரதிட்டை செய்வித்தார். அன்றியும், சென்ற பிரசோற்பத்தி வருடத்தில் ஒரே பட்சத்தில் 'விநாயகசதுர்த்தி, தேவியார் நவராத்திரி கொலு' என்னும் இரண்டு உற்சவங்களையும் சாத்திர விரோதமாக ஒன்ருக நடத்தினர். புறக்கோடிப் பாழ்வெளிச்சந்தில் சந்திரசேகரப்பெருமானை எழுந்தருளப்பண்ணினர். சிவபூசை செய்யும்போது சிவபெருமானைப் பார்க்காமல் பின்புறந் திரும்பி சனங்களைப் பார்க்கின்ருர். சுவாமி வீதிக்கெழுந்தருளி வரும்போது 'எசுர் வேதபாடசாலை, பசுமடம்' என்பவற்றின் எதிரில் ஒருவிதமாகவும்; 'மடம், குருபூசை மடம்' என்பவற்றின் எதிரில் ஒருவிதமாகவும் தீபாராதனை செய்கின்ருர். வீடுகள்தோறும் தேங்காயுடைத்து, கருப்பூரார்த்தி செய்து, அமர்த்தி வைத்துக் கொள்கின்ருர்.

கோவிலில் திருடாதவர்களுண்டென்பது குதிரைக்குக் கொம்புண்டென்பதுபோலாகும். வசந்தமண்டபம்நீங்கலாக மற்றைய மண்டபங்களெல்லாம் மழை யொழுக்குமயமாயிருக்கின்றன. வாகன மண்டபம் மழை யொழுக்கினல் இடிந்து விழுந்ததுபோல, கோவில் மழை யொழுக்கினல் இடிந்து விழுந்துவிடும்பட்சத்தில், வாகன மண்டபத்தையிடித்து அள்ளிக்கொண்டுபோய்க் கொட்டியதுபோலவும்; 24-12-35-ம் தேதி இராத்திரி மழையொழுக்கின லிடிந்து விழுந்த தேர் வடச் சாமான் மண்டபத்தை யிடித்து மட்டப்படுத்தியதுபோலவும் கோவிலையிடித்துஅள்ளிக்கொண்டு போய்க் கொட்டி மட்டப்படுத்த ஆட்கள் தயாராயிருக்

கின்றார்கள். கோவில் ...நம்படிகளில் இடைக்கொள்ளைக் காரர்கள் எடுத்துக்கொ... டதும்; சர்க்கார் தீர்வையும்போக பாக்கியை அசாமிகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டுக் கடன் வாங்குங் காலம் ... விட்டது. இலட்சம் ரூபாயின் பயனாகவரும் பணத்தையும் அரிசியையுங்கொண்டு பூசா காலங்கள் நடக்கின்றன. ஒரு பூசகருக்கு இரண்டு பூசகரும்; ஒரு கெண்டாமணிக்கு இரு கெண்டாமணியும்; ஒரு சதை மேளத்திற்கு இரண்டு சதை மேளமும் இருக்கின்ற காரணத்தினாலே ஆடம்பரத்திற்குக் குறைவு இல்லவே இல்லை. இன்றுவரையில் இடிந்துபோன கட்டிடங்களெல்லாம் மழை யொழுக்கைக் கவனித்துப் பழுதுபார்க்காத காரணத்தினாலேயே யிடிந்துபோய்விட்டன. வீரசேகர மகா முனிவர் மூன்று லட்சம் செலவிட்டுச் செய்த திருப்பணிகளில் 'கோவிலும், தேர்முட்டிகளும்' நீங்கலாக மற்றைய வைகளெல்லாம் கெட்டுப் போய்விட்டன. கோவில் மழையொழுக்கையும், தேர்முட்டிகள் ஆட்டுமூத்திரத்தையும் கைவிட்ட பாடில்லை. கோவிலுக்குச் சொந்தமாக ஒரு கட்டிடங்கூட க்கிடையாது. தெற்குவீதியில் ஒருசிறிய கூரை வீடுரூ. 50 கிரயங் கொடுத்து வாங்கப்பட்டிருக்கிறது. சன்னிதியிலிருக்கிற துருவாச தீர்த்தத்தினுடைய துர்நாற்றம் சகிக்கக் கூடியதா யில்லை. மகாரதங்கள் 14—11—35-ந் தேதிப் பெருங்காற்றினிடத்தில் நாகத்தகடுகளைக் கொடுத்து விட்டு, ஒருவாரம் மழையோடு மற்போர் புரிந்தன. தேர் வடச் சாமான்கள் நீண்ட காலமாக மழை யொழுக்கோடு மற்போர் புரிந்து, கட்டிடம் இடிந்துவிழுந்ததும், வெற்றி பெற்று வெளியில் வந்தன. அத்தியடி நன்செய் சண்டிக் கார் மரக்காற் சூத்தால் பொதி பொதியா யளப்பதற்கேற்ப விளைந்திருக்கிறது. இம்மாதிரி நெல்விளைய பிரயாசைப் படும் மணியம் சண்முகம் பிள்ளைக்கு வருடம் ஒன்றுக்குச் சம்பளம் நெற்கலம் 100-ம் ரூ. 10-ம் கொடுப்பது பொருத்த மேயாகும்.

சிவபத்தியிற் சிறந்தோங்கியவர்களும்; வீரசேகர மகா முனிவரிடத்தில் மிக்க பேரன்புடையவர்களும்; 'எசுர்வேத பாடசாலை, பசுமடம், திருநந்தனவனம், குருபூசை மடம்

தேவார பாராயணம்' என்னும் தர்மங்களை பத்தி சிரத்தையோடு நடத்துகின்றவர்களும் ஆகிய 'காரைக்குடி ஆத. பழ. சிதம்பர செட்டியா ரவர்கள் (1), மேற்படியூர் ராம. ஆத மே. சுப் பைய செட்டியா ரவர்கள் (2), மேற்படியூர் ஆத. லே. ஆத. சோக்கலிங்க செட்டியா ரவர்கள் (3), பாகனேரி பேரி. அழ. மு. முத்துக்கருப்ப செட்டியாரவர்கள் (4), இந்நான்கு மகானு பவர்களையும் எக்காலமும் கோவிலைப் பரிபாலனஞ் செய்யும் படி சாசுவத பஞ்சாயத்தார்களாக நியமிக்கும் பட்சத்தில் கோவில் காரியங்களெல்லாம் நிரந்தரமாகச் சிறந்தோங்கிநடை பேற்றுவரும்; இதிற் சிறிதும் சந்தேகமில்லை. மற்றையோர் களை நியமிக்கிற பட்சத்தில் கோவிலுக்குச் சிறிதும் நன்மை யுண்டாகப் போவதில்லை; தீமையே யுண்டாகும்; இது நிச்ச யம். இத்தலத்துக்கு அரிய பேரிய திருத்தொண்டு செய்கின்ற திருத்தொண்டர்களாகிய மேற்படி கனவான்களுடைய பரி பாலனத்திலேயே இக்கோயில் எக்காலமும் விளங்கியருளும் படி "அடைந்தார்க் கருள்செய்த நாயனாரும், அழகேசுவரி யம்மையாரும், துருவாச மகாமுனிவரும், வீரசேகர மகா முனிவரும்" அருள்புரிவார்களாக.

*இத்தல சம்பந்தமாகப் புத்தகங்கள் வெளிவருவதைப் பற்றி கோர்ட்டில் வியாச்சியந் தொடங்குவதாக ஓர் வதந்தி யுலாவிக் கொண்டிருந்தது. இந்தக் கோவில் சம்பந்தமாகக் குறிப்பிட்டவர்களை 'கிளிக்கூட்டில்' ஏற்றி வாக்குமூலங் கள் வாங்கி, அவ்வாக்குமூலங்களை யெல்லாம் ஒரு புத்தக மாகத் திரட்டி, அச்சியற்றி வெளிப்படுத்தும் பொருட்டு, அவ் வியாச்சியத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்ததில் ஒன்றும் முடிவுக்குவரவில்லை. இக்கோவில் சம்பந்தமாக 'சென்னை எண்டோமெண்ட் போர்டுக்கும், தஞ்சாவூர் சர்க் கிள் தேவத்தானங் கமிட்டிக்கும்' மனுக்கள் டைப் படித்து அனுப்புவித்தல், 'திருக்களர் விளக்கம் நான்கு பாகங்கள், அனுபந்தம்' என்பன அச்சியற்றி யனுப்புவித்தல் முதலிய வைகளுக்காக இன்றுவரையில் ரூ. 350 செலவாகியிருக்கி றது. இந்தரூபாய் முன்னூற்றைம்பதும் செலவானதுதான் இலாபம். கோவிலுக்கு எவ்விதமான பரிகாரமும் ஏற்பட்ட*

தாகத் தெரியவில்லை. கோவிலுக்கேற்பட்ட நட்டத்திற்குப் பரிகார முண்டாகும் பொருட்டும்; கோவிலில் இருக்கின்ற சிவத்துரோகிகளை விலக்கும்பொருட்டும் கூடியசீக்கிரத்தில் வியாச்சியந் தொடங்கும்படி எல்லாம் வல்ல கடவுள் இன்னருள் புரிவாராக.

*திருக்களர் வைபவம் முற்றிற்று.*

KOVILOOR ANDA...
A. No. 15273
LIBRARY, KOVILOOR

KARUNANITHI PRESS, Vijayapuram 35 gpym.

Printed at the Karunanithi Press, Vijayapuram 35 gpym